இலவச
இணைப்பைக்
கேட்டு
வாங்குங்கள்

கல்கி

KALKI 29.4.90 ரூ. 2.50



சுதா:
வளர்பிறைக் கலைஞர்

அழகுக் கவிதை

கதர் பட்டுகள்



பருத்தி,
பாலியெஸ்டர்
மற்றும் பட்டுப்
புடவைகள்.
அழகு, அழகான
டிசைன்கள்.
ஏராளமான ரகங்கள்.

DIPR/ /MS/90/Efficient

தமிழ்நாடு கதர் மற்றும்
கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை-600 108

காதிகிராப்ட்
விற்பனை நிலையங்கள்
அனைத்திலும் கிடைப்பவை

யுத்தம் வந்துவிட்டால்..?



1949, 1965, 1971 ஆகிய ஆண்டுகளில் பாகிஸ்தானுடன் நடந்த போர்களில் பங்கு கொண்ட லெப்டினன்ட் கர்னல் கங்காதரன் நிலைமையை விவரிக்கிறார்.

நம் நாட்டில் ஒவ்வொருவர் மனத்திலும் தோன்றியுள்ள கேள்வி: ''இந்தியா — பாகிஸ்தான் யுத்தம் வருமா?''

மக்கள் மனோரீதியாகப் போருக்குத் தயாராக வேண்டும் என்று பிரதமர் கேட்டுக்கொண்டுள்ளார். யுத்தம் வந்து விட்டால் யார் கை ஓங்கும்? இரண்டு நாடுகளின் ராணுவ பலத்தை ஒப்பிட்டால் இந்தியாவின் கை வலுவாக இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. நமது முப்பத்திரண்டு ராணுவப் பிரிவுகளில், பத்தொன்பது பாகிஸ்தான் எல்லையை ஒட்டித்தான் நிற்கின்றன.

காலம் மாறி எலெக்ட்ரானிக் சாதனங்கள், ஏவுகணைகள் என்று வந்து விட்டன. 1949, 1965, 1971ல் பாகிஸ்தானிடம், இருந்ததை விட தற்போது நவீன ஆயுதங்கள் உள்ளன. ஆனால் எல்லாமே இறக்குமதி. இந்தியாவின் நிலை அப்படியல்ல. இந்திய ராணுவ சாதனங்கள் கிட்டத்தட்ட எழுபது சதவீதம் நமது தயாரிப்புத்தான். அதனால் அதன் தயாரிப்பின்போதே ராணுவத் தளபதிகள் அவற்றுடன் தொடர்பு கொண்டு நுணுக்கங்களை அறிந்து கொள்ள அதிக வாய்ப்பு. ஆனால் இறக்குமதியை நம்பும் பாகிஸ்தானுக்கு இந்த வாய்ப்பு குறைவு. மேலும் பாகிஸ்தானிடம் என்னதான் நவீன ஆயுதங்கள், ஏவுகணைகள் இருந்தாலும், இந்தியாவின் ராணுவ சாதுர்யங்களுக்குச் சற்றும் அதனால் ஈடுகொடுக்க முடியாது என்பதை உலக நாடுகளே ஒப்புக்கொள்கின்றன.

நீண்ட காலம் சண்டை போட்டு வெற்றியா தோல்வியா என்று முடிவு செய்வதைப் பாகிஸ்தான் விரும்பாது. அப்படியானால் அதனுடைய போர்த் தந்திரம் என்னவாக இருக்கும்? எல்லையில், கொஞ்சம் பலவீனமான பகுதியில் சகலவித ஆயுத பலத்தோடு நுழைந்து சில இடங்களைப் பிடித்துக் கொண்டு அப்புறம் ஐ. நாவைக் கூப்பிட்டு, 'போர் நிறுத்தம்' என்ற சாக்கில் பிடித்த இடத்தில் டேரா போட வேண்டியது. இந்தத் தந்திரத்தைத்தான் 1949, 1965லும் பாகிஸ்தான் கையாண்டது. இந்த முறை, நமது ராணுவமும் அரசும் முன் ஜாக்கிரதையாக இருந்து, பாகிஸ்தானின் இந்தத் தந்-





"சட்டசபையிலே எல்லாக் கட்சியினரும் கூடி ஒற்றுமையா ஒரு நல்ல காரியம் செய்தாங்க!"

"ஆச்சர்யமாய் இருக்கே, என்ன அது?"

"பதவிப் பிரமாணம் எடுத்தாங்க!"

— ஆர். கே. மூர்த்தி.

திரத்தை முறியடிக்க வேண்டும்.

பாகிஸ்தான் மக்களும், ஆட்சியில் உள்ளோரும் போரை விரும்புகிறார்களோ இல்லையோ, பாகிஸ்தான் ராணுவ வீரன் இந்தியா மீது மிகுந்த கோபத்தோடு இருக்கிறான் என்பது நிச்சயம். இதற்குக் காரணம், கிட்டத்தட்ட 90,000 பாகிஸ்தான் ராணுவ வீரர்கள் 1971 போரின் போது நம்மிடம் கைதிகளாக இருந்தார்கள். அந்த அவமானத்தைத் துடைத்துக் கொள்ளக் காலம் நேரம் பார்த்து நிற்கிறார்கள் அவர்கள்.

நமது படைகளில் பாதி, சீன எல்லையைக் காத்து நிற்கிறது. பாகிஸ்தான் நம்மோடு போர் புரியும் போது, சீனாவும் வாலாட்ட ஆரம்பித்தால், நிலைமை கொஞ்சம் சிக்கலாகும். ஆனால் சர்வதேச நோக்கில் கணிக்கும் போது, அவரவர் பிரச்னை, அவரவருக்குப் பெரிதாக இருப்பதால் பிறர் விஷயங்களில் தலையீடு இருக்காது என்பது பொதுவான அபிப்ராயம்.

பாகிஸ்தான் போருக்குத் தயாராகி வருவதாகப் பிரதமர் கூறுகிறார். இந்தியாவின் நிலை? பொதுவாகவே அமைதிக் காலத்தில் எந்த ராணுவமும் சும்மா இருக்காது. எதிரிகளின் முகாம்கள், நடவடிக்கைகள், வளர்ச்சிகள், ஆகியவற்றைக் கண்காணித்துக் கொண்டே இருக்கும். சமயத்தில் போர் ஒத்திகைகளும் நடத்திப் பார்க்கும். எனவே, 'தயாராவது' என்ற பேச்சுக்கே இடமில்லை. எப்போதுமே தயார் நிலைதான்! நாளும் பொழுதும் ராணுவத் தலைமையகத்தில் இதே வேலையாகப் படைத் தளபதிகள் இருப்பதால் தாமதம் என்ற பேச்சுக்கே இடமில்லை. அரசு முடிவெடுத்தால், அடுத்த வினாடியே ராணுவம் செயலில் இறங்கும்.

அணு ஆயுதங்கள், ஏவுகணைகள் போன்றவற்றால் இடங்களை அழித்து மனிதர்களைக் கொல்ல முடியுமே தவிர, இடத்தைப் பிடித்துத் தக்க வைத்துக் கொள்ள முடியாது. இதற்குக் காலாட்படையின் உதவி தேவை. ஆகையால் எந்த விதமான நவீன ஆயுதங்களைக் கொண்டு சண்டை போட்டாலும், கையில் துப்பாக்கியுடன் களம் செல்லும் வீரன்தான் அதி முக்கியமானவன்..

போர் என்று ஆரம்பித்த பிறகு, தேவையான உணவுப் பொருட்கள், தளவாடங்கள், பெட்ரோல் முதலியவற்றைப் போர் முனைக்குக் கொண்டு செல்ல வேண்டும். பரந்து விரிந்த பாரத நாட்டில் இதுதான் கொஞ்சம் கஷ்டமான காரியம். சிறிய நாடான பாகிஸ்தானுக்கு இந்தப் பிரச்னை பெரிதல்ல.

இந்தியாவின் விமானப் படைக்கு முன் பாகிஸ்தான் கொஞ்சமும் ஈடு கொடுக்க முடியாது. நமது விமானங்கள், ஏவுகணைகள் ஆகியவை, பாகிஸ்தானில் உள்ள எந்த இலக்கையும் தாக்கக்கூடியவை. பாகிஸ்தானிடம் நான்சுங்க்யு, எப்—16 போன்ற நவீன விமானங்கள் உள்ளன. இவை நமக்கு ஒரு சோதனையாக இருக்கும். ஆனால், நம்மிடம் இருக்கும், மிக் , ஜாகுவார் ரக விமானங்கள் சோதனையைச் சமாளிக்கும் திறன் கொண்டவை.

நமது கடற்படையில், உள்ள விமானம் தாங்கி கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள் ஆகியவை, பாகிஸ்தானின் கடலோர நகரங்களைக் கலவரத்தில் ஆழ்த்தும். சமீபத்தில், பாகிஸ்தான் படு நவீனமான போர்க் கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள் ஆகியவற்றை வாங்கியுள்ளது. இருந்தாலும் அவற்றைத் திறம்பட உபயோகப்படுத்தும் புத்திசாலித்தனம் பாகிஸ்தானியர்களுக்கு வந்து விட்டதா என்பதைப் போரில்தான் தெரிந்து கொள்ள முடியும்.

பாகிஸ்தான் தனது ராணுவ பலம் முழுவதையும் இந்தியா பக்கம் இருப்ப முடியாது; காரணம், ஆப்கானிஸ்தான் எல்லையை அது காக்க வேண்டும்.

போர் துவங்குவதற்கு, எல்லையில் ஒரு சிறு பொறி பறந்தாலும் போதும். எல்லைப் புறங்களில் உள்ள தளபதிகளின் பொறுமை, புத்திசாலித்தனம் ஆகியவை தான் போர் ஆரம்பிப்பதை அல்லது தவிர்க்கப்படுவதைத் தீர்மானிக்கும். 'யார் ஆரம்பித்தது' என்று ஆராய முற்பட்டால் விடை கிடைப்பதே சிரமம்.

இந்திய ராணுவ வீரர்களின் மனோதிடம் பிரமாதமாக இருக்கிறது. ஆனால் பஞ்சாப், காஷ்மீர் தீவிரவாதிகளால் சில பிரச்னைகள் ஏற்படலாம். யுத்தம் நடக்கும் போது, தீவிரவாதிகளும் சேர்ந்து உள்நாட்டில் சதி செய்யத் தொடங்கி விட்டால் மக்களுக்குச் சிரமங்கள் அதிகரிக்கும்.

எனவே, ராணுவம் மட்டும் மனவுறுதியுடன் இருந்து பயனில்லை. எதையும் சமாளிக்க, துயர்களில் பங்கு கொள்ள மக்களும் அதே உறுதியுடன் இருக்க வேண்டும்.

சந்திப்பு: **ப்ரியன்**





ஒளிச் சித்திரமா?



காங்கிரஸ் ஆட்சி இருந்த போது டீவியை ''ராஜீவ்தர்ஷன்'' என்று கேலி செய்ததுண்டு. இப்போது மட்டும் என்ன, ஆட்சியில் உள்ளவர்களுக்குப் 'பப்ளிஸிடி' கொடுக்கத்தான் அதிகம் பயனாகிறது. அதிலும் தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று 'கவியரங்கம்' என்ற பெயரில் நடந்தது, 'கலைஞர் துதி அரங்கம்' என்பதுதான் பலர் கருத்து. நன்றாக சோப்புப் போடக் கற்றுக் கொண்டு விட்டார்கள் கவிஞர்கள். உ-ம்.: ''மாநிலத்திலும் உன் ஆட்சி; மத்தியிலும் உன் ஆட்சி!'' (மௌன இடைவெளி தந்து) ''ஆம், கவிஞர் மத்தியிலும் உன் ஆட்சி!'' எப்படி இருக்கிறது ஐஸ்? கோடைக்கு 'ஜில்' லென்று இல்லை?

''தா தா'' என்று ஒதுக்கிய தூர்தர்ஷன், இன்று தூது அனுப்பியதாகக் கலைஞர் குறிப்பிட்டது பண்பாடு அல்ல; ரசனைக் குறைவு. அன்றும் சரி, இன்றும் சரி, தூர்தர்ஷன் அதிகாரிகள் ஆட்சியில் இருப்பவரைத் திருப்திப்படுத்தத்தான் முயற்சி செய்கிறார்கள். எய்தவன் இருக்க அம்பை நோவது போல் கலைஞர் பேசுவது இது இரண்டாவது தடவை. (முதல் முறை: அமைதிப் படையை அவமதித்தது.)

அரசின் சாதனைகளைப் பட்டியலிட கருணாநிதி இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டதும் முறையல்ல. கட்சிக்கும் ஆட்சிக்கும் இடையே உள்ள நுண்ணிய வேறுபாடு அறியாத மக்களிடம் இது கட்சிப் பிரசாரமாகி விடவே வாய்ப்பு அதிகம்.

கவிஞர்கள் வார்த்தை ஜாலம் செய்து கலைஞரை வாழ்த்தி, கரவொலி பெறுவதில் தவறில்லை. அது இலக்கியக் கூட்டத்தில் சரி. தூர்தர்ஷனில் அல்ல. தூர்தர்ஷன் வரி கொடுக்கும் அனைவருக்குமே சொந்தமானது.

புத்தாண்டு தினத்தில் குறிப்பிட வேண்டிய மற்றொரு நிகழ்ச்சி, நொடிக்கொரு சிரிப்பு வரவழைத்த 'கண்ணாமூச்சி', எஸ். வி. சேகரின் நாடகம்.

நாடகம் என்னும் போது ஒரு கருத்தைச் சொல்ல வேண்டியிருக்கிறது. பெரும்பாலான டீ. வி. நாடகங்கள் 'வசன ஒப்புவிப்பு'க்களாகவே உள்ளன. டீ.வி. ஒரு 'விஷுவல் மீடியம்.' அதில் நடிகர்களை அங்கங்கே நிற்க வைத்துப் பேசச் சொல்வதில் — அல்லது உட்கார வைத்து வசனத்தை உதிர்க்கச் சொல்வதில் என்ன பொருள்?

சினிமாவுக்கும் டீ.வி.க்கும் திரையின் அளவில்தான் வேறுபாடு. டெல்லியில் இதைத் தெளிவாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். இங்கே இவர்களும் உத்திகளை மாற்றிக் கொள்ள வேண்டும். காரணம் —

பெரும்பாலான டீ.வி. நாடகங்களைப் பார்க்க வேண்டிய அவசியமே இல்லை. கண்களை மூடிக் கொண்டு கேட்டாலே போதும். ரேடியோவின் ஒலிச்சித்திரங்களுக்கும் இந்த ஒளிச்சித்திரங்களுக்கும் வேறுபாடே இல்லை.

ஞாயிற்றுக் கிழமையன்று ஒளிபரப்பாகும் திரைப் படங்களில் பாடல்கள் வெட்டப்பட்டு விடுவது குறித்து அதிருப்தி தெரிவித்த ஒரு கடிதத்துக்கு எதிரொலியில் அளிக்கப்பட்ட பதில்: ''டிராயிங் ரூம் ஆடியன்ஸுக்கு ஏற்றவையாக இல்லாத பாடல் காட்சிகள் வெட்டப்பட்டு விடுகின்றன.''

அப்படியென்றால், 'ஒலியும் ஒளியும்' நிகழ்ச்சியில் இடம்பெறும் பாடல் காட்சிகள் எல்லாமே (குறிப்பாக, சமீபத்திய படங்களின் டூயட் பாடல்கள், அவற்றுக்குத் தரப்படும் இடுப்பசைவுகள்) டிராயிங் ரூம் ஆடியன்ஸுக்கு ஏற்றவையாகவா உள்ளன?

பெரியவர் பெரியவர்தான். எழுத்தறிவு இயக்கம் தொடர்பாக 'வாழ்க்கைக் கல்வி'யில் தமிழ் எழுதப் படிக்கக் கற்றுத் தரும் டாக்டர் நன்னன், ''சென்ற வாரம் ஒரு தவறு'' என்றார். தொடர்ந்து, '''யார்' என்பதில் புதிய எழுத்து 'ர்' என்று எழுதிக் காண்பித்து விட்டுச் சொல்லும் போது 'யா' என்று சொன்னது தவறு'' என்றார். பின்னர்,

''இந்தத் தவறு உங்களைச் சோதித்துப் பார்க்கச் செய்யப்பட்டது என்று விளக்கம் அளிக்கப் போவதில்லை. அது உண்மையில் நான் செய்த தவறு'' என்று அவர் கூறிய போது சிலிர்த்து விட்டது.

— **கிச்சாமி**

வாசகர் விமர்சனம்:



மோசம், நானும் மோசம், எப்படி இருந்தால் என்ன என்று மகாமட்டமான வழிகளில் எல்லாம் கணவனும் மனைவியும் சென்றால் என்ன செய்வது?— கதையின் முடிவில் பெண் மாப்பிள்ளையைச் சந்திக்கவிட்டு (பேச விட்டு) இருவரும் ஒருவரை ஒருவர் விவரம் புரிந்து கொண்டு, தவறை உணர்ந்து, வரும் சந்ததிகளை நல்ல முறையில், அதாவது எதையும் சமாளித்து உறுதியாக நிற்கும் முறையில் வளர்ப்போம் என்று இருந்தால் கதை நன்றாக அமைந்து இருக்கும் என்பது என்னுடைய கருத்து.

சென்னை — 23, ஜெயா பெலவேந்திரன்.

ஓஹோஹோ ரகம்!

இந்தக் கதை, பணக்கார சௌகரியங்களுக்கு அருகாமையில் உள்ளவர்களைப் பற்றியது. 'ஓஹோஹோ' ரகம். ஆங்கிலம் கலந்த 'ஜெட்' வேக நடை.

சூட்சுமத்தைக் கடைசி இரண்டு பாராக்களில் கொண்டு போய் வைத்திருக்கிறார், ஆசிரியர். சலனமற்ற வாழ்க்கைக்கு யதார்த்

ஒரு கல்யாண ஏற்பாடு:

ஓஹோஹோ ரகம்!

பொம்மைக் கல்யாணங்கள்!

'ஆயிரம் பொய் சொல்லி ஒரு கல்யாணத்தை நடத்த வேண்டும்' என்று யாரோ, எதற்காகவோ சொல்லப் போக, அதையே வேதவாக்காக, அனர்த்தமாக எடுத்துக் கொண்டு வாழ்க்கையில் நடந்து முடிந்த அவலங்களைக் கூட ரொம்பச் சாமர்த்தியமாக மறைத்து விட்டதாகக் கனவு கண்டு, எக்காளமிட்டுக் கொண்டு ஒருவரையொருவர் சமூகத்தில் எப்படி ஏமாற்றிக் கொள்கிறார்கள் என்பதைத் தமக்கே உரிய பாணியில், மிக இயல்பாகத் தெளிவாக, அசர அடிக்கிற வகையில் உணர்த்தியிருந்தார் சுஜாதா! கதை என்று சொல்வதைவிட, இன்றைய நாட்களில் எத்தனையோ குடும்பங்களில் நாம் கண்கூடாகக் காணும் ''பொம்மைக் கல்யாணங்களின்'' உண்மை வடிவம் என்றே சொல்ல வேண்டும்.

திருச்சி — 16,
ஜானகி மைந்தன் எஸ். ராஜகோபால்.

சுஜாதா துணிவாரா?

முதல் கதையில் ஐயங்கார் கம்யூனிட்டியை விமர்சிக்கும் சுஜாதா வரப் போகும் கதைகளில் இதர சமூகத்தினரின் பலவீனங்களையும் துணிந்து எழுதுவாரா?

சென்னை — 4, என். சம்பத்.

முடிவை மாற்றினால்...?

பின்னால் விவரம் தெரிந்தவுடன் நீயும்



தத்தோடு ஒத்துப்போக மக்கள் கற்றுக் கொண்டு விட்டார்கள் என்பதைச் சொல்லாமல் சொல்லுகிறார்!

கோவை — 2. ராம. விஜயா.



ஊதிய பலூனில் குண்டூசி...

சுஜாதா கதை சொல்லும் உத்தியில் வாசகர்களை 'ஆஹா... பிரமாதம்' என்று பரவசப்படுத்தும் பகுதி அவர் கையாளும் சஸ்பென்ஸ். அந்த கார்டியன் முடிச்சை நறுக்கென ஒரே வீச்சில் வெட்டிப் பிரிக்கும் பாங்கு: ''அதை' அவாகிட்டச் சொல்ல வேண்டாமா?' 'நீங்க பேசாம இருங்கோ. அது முடிஞ்சு போன கதை.'... கடைசி சில வரிகளில் ஆசிரியர் காட்டும் சுவாரஸ்யம் நம்மைச் 'சபாஷ்' என்று பாராட்டச் செய்து விடுகிறது. கதையை ஊதி ஊதி உப்ப வைத்து வேடிக்கை காட்டுகிறார். இரு தம்பதிகளும் தங்கள் தங்கள் அருமை பெருமைகளை வெளியிடும் சம்பாஷணை நயமானது. கல்யாணம் செட்டில் ஆவதற்குக் குறுக்கே எந்த இடர்ப்பாடுகளுமே இல்லை என்று கதையின் மையத்தில் மாயம் காட்டும் சுஜாதா... கடைசியில் உப்பிய பலூனில் நறுக்கென்று ஒரு குண்டூசியால் குத்தி...



சுஜாதா முத்திரையைப் பதித்து விடுகிறார்!

எரவாஞ்சேரி, தேதியூர் பாலு.

விறுவிறு நடைக்கு முதல் பரிசு!



சுஜாதாவின் கதையென்றாலே அதில் விறுவிறுப்பான நடையென்ற சிறப்பம்சம் உண்டு. நள்ளிரவு ஃபோன்காலில் தொடங்கி, நன்னடத்தை என்பதை நறுமணப் பொருள் போல் மேல் பூச்சாய் வார்த்தைகளில் உபயோகப்படுத்திக் கொள்ளும் கேரக்டர்களின் உள் நாற்றத்தை வெளிப்படுத்தும் ''கல்யாண ஏற்பாடு'' சிறுகதையிலும் விறுவிறுப்பான நடைக்குத்தான் முதல் பரிசு!

காட்டூர், எஸ். அருள்மொழி.

கொஞ்சம் இடிக்கிறது!

கதையின் நடையில் சிற்றோடையில் சலசலத்து ஓடும் நீரின் வேகம்! அதோடு தெளிவு! சுஜாதாவா... கொக்கா! நடுத்தர வர்க்கம் தங்களை ஏழையாகவும் காட்டிக் கொள்ள முடியாமல், பணக்காரராகவும் காட்டிக் கொள்ள முடியாமல் இருக்கும் நிலையைப் படம்பிடித்துக் காட்டியிருக்கிறார். போன் வைப்பது சம்பந்தமான உரையாடலில் OYT—யே இன்னும் நாலு வருஷம் ஆகுமாம் என்று பெண்ணின் அப்பா சொன்னதும், மாப்பிள்ளையின் அப்பா 'நம்பரைக் கொடுங்கோ, எனக்குத் தெரிந்தவரிடம் சொல்லிச் சீக்கிரம் வாங்க முயற்சிக்கிறேன்' என்றதும், அதை அவசரமாகத் தவிர்த்து, வேறு விஷயத்தை ஆரம்பிப்பது போனுக்கு அவர் ரிஜிஸ்டர் பண்ணவே இல்லை என்பதை நாசூக்காக உணர்த்துகிறது. இருந்தாலும் அந்த ஒட்டை சாக்ஸ் சமாசாரம் கொஞ்சம் இடிக்கிறது. அதிலும் அந்த ஓட்டை வழியே வந்த வாசனையைக் கண்டு ஜூலி குரைத்தது என்பது மிதமிஞ்சிய கற்பனை!

நாகப்பட்டினம், கிருட்டிண. எழில்.

சிறப்புப் பரிசு ரூ. 50 பெறுபவர்:
தேதியூர் பாலு,
எரவாஞ்சேரி SO,
— 609 501.

மற்ற விமர்சனங்கள் ரூ. 25 சன்மானம் பெறுகின்றன.

சந்தர்ப்பம் மறந்த சதுரங்கம்

நிமிஷமாய்த் தகவல் அலுவலகம் பூரா வும் பரவியது. சிவா கண் மூடி, நெற்றியைச் சுருக்கி யோசித்த போது அந்த முகம் நினை வில் வந்தது.

ராமபத்ரன்!

அகலமாய் ட்ரங்க் ரோடு மாதிரி இருக்கிற நெற்றியில் விழும் சுருக்கங்கள். முன்நோக் கிப் படிய வாரிய நரைமுடியுடன், கூர்மை யான விழிகள். குழந்தைத்தனம் வெளிப்படு மளவுக்கு மழுங்க சவரம் பண்ணப்பட்ட முகம்.

சிவாவுக்குப் பிரமிப்பாக இருந்தது. நம்பவே முடியவில்லை அவனால். நிஜ மான செய்திதானா இது! அல்லது ஏதேனும் கனவா? சைத்தானின் சூழ்ச்சியா...?

ராமபத்ரன் அந்தக் கம்பெனியின் சீனி யர் அக்கவுண்டண்ட். 'பிஸிக்'களுக்குச் சவால் விடுகிற தினுசில் செயல்படுபவர். அத்தனை விவரங்களும்விரல்நுனியில்வைத் திருப்பார். சேர்மன் கூட சில முக்கிய விஷ யங்களில் ராமபத்ரனைக் கலந்தாலோசிக் காமல் இருப்பதில்லை.

சிவா திரும்பினான். கேட்டான்.

''எப்ப சுந்தரம்? எத்தனை மணிக்கு?''

''காலைலதான்.காப்பிசாப்பிட்டுட்டுநியூஸ் பேப்பரைக்கையிலஎடுத்தவர்தானாம். சுருக் குன்னு வலி. டாக்டருக்கு ஃபோன் போட்டு, வந்து பார்க்கிறதுக்குள்ளே தலை தொங்கி டுச்சு...''

''போய்ட்டாரா! நல்ல மனுஷனாச்சே... இந்தக் கட்டடம் முழுக்க தன் ஆளுகையில், தன் அன்பான அதிகாரத்தில் வைத்திருந்தவ ராயிற்றே!''

என்னப்பா உன் பேரு?'' — அவன் வேலையில் சேர்ந்த அன்று ராமபத்ரன் கேட் டார்.

''சிவா ஸார்... சிவகுமார்...''

''வேலைக்குச் சேர்ந்த முதல் நாளே லேட் டாவா வர்றது? நல்லாயில்லையே!''

''ஸாரி ஸார்...''

''ஸாரி சொல்றதெல்லாம் பொட்டைத் தனம். அடுத்த தரம் சீக்கிரம் வர்றேன்னு சொல்லு.''

சொன்னான்.

மற்றொரு நாள்...

''சிவா... இங்கே வா... உன்னாலதான் இந்த ஆடிட்டிங் ரிப்போர்ட் தயார் பண்ண முடியும். என்ன பார்க்கறே? ஊர்ல இருந்து மச்சினி வந்திருக்காளா?''

''ச்சே ச்சே.''

''பொய் சொல்லாதே. நேத்து கடை வீதி யில சுரிதாரும், மிடியும் பர்சேஸ் பண்ணி னியே! சரி வா... நாளைக்குள்ள அனுப்பி யாகணும். இல்லைன்னா எம். டி. என் மேல விழுந்து பிராண்டுவார்.''

— ரொம்ப சகஜமாய்ப் பழகுவார்...!

விஜயநிலா

அந்த ராமபத்ரன் இறந்து போய் விட் டதை நம்ப இயலவில்லை. அவரது வீட்டைப் பார்க்க ஏனோ மனம் வரவில்லை. அந்த வெறுமை மனத்தை என்னவோ பண்ணி யது.

எம். டி. வந்து விட்டார். அலுவலகத்தில் அனைவரும் கூடினர். இரங்கல் அறிக்கை டைப் ஆயிற்று. மாலை வாங்க யாரோ போனார்கள். அலுவலக வேன் ரெடி பண் ணப்பட்டது.

''இல்லாடிய்யா ராமபத்ரன் ஸார்... இப்படி சட்டுனு போய்ச் சேர்ந்துடுவாருன்னு நினைக்கலை.''

இத்தனைக்கும் அவருக்குக் குழந்தைகள் கூடக் கிடையாது. மாய்ந்து மாய்ந்து உழைப் பார். அவனவன் வாலண்ட்டரி ரிடையர் மெண்ட் வாங்கிக் கொண்டு, கயிற்றுக் கட்டி லில் மல்லாந்து விடுகிற இந்தக் காலத்தில் இவர் ஏன் இப்படிக் கிடந்து அல்லாடுகி றார். பாவம்! பூர்வீகச் சொத்து கூட இருக் கிறது... அவரைக் கேட்டு விட்டான் சிவா.

சிரித்தார்.

தென்றல் தவழுகிற சிரிப்பு. அப்பழுக்கில் லாத, நேசம் கரைபுரள்கிற சிரிப்பு.

''இல்லை சிவா. தப்பு! உழைக்காம சோத்தைப் பத்திக் கனவுல கூட நினைக்கக் கூடாது. பிறந்துவிட்ட அத்தனை உயிரும் உழைக்கணும். அப்பத்தான் உலகம் குறை யில்லாம இயங்கும்.''

கடைசி நிமிடம் வரையில் உழைத்திருக் கிறார். என்ன ஓர் அருமையான மனிதர். கற்பனையில் மட்டுமே சந்திக்க முடிகிற கதா பாத்திரம் அவர்.

கிளம்பினார்கள்.

மனம் கனத்துப் போய் ஜன்னல் வழியே சிவா சுற்றுப்புறத்தை வெறித்தான். பழக நினைத்துப் பேசி மாய்ந்து போனார்கள்.

அரை மணி நேரப் பயணம்.

மெயின் ரோடில் வேனை நிறுத்தி இறங்கி னார்கள்.. 'அட வாங்கய்யா. என்ன அப் படிப் பார்க்கிறீங்க? சாகப் பொறந்தவனா

இந்த ராமபத்ரன்?' என எங்காவது ராம பத்ரன் அதே புன்னகையுடன் தோன்று வாரா? தினமும் ரிஸீவரைக் கையில் எடுத்து, ''ஹலோ, ராமபத்ரன் ஹியர்'' எனக் கூறும் கம்பீரம் தொனிக்கிற குரலைக் கேட்க முடி யுமா? அலுவலகத்தில் யாருக்கு என்றைக்குப் பிறந்த நாள் என்று 'அட்மின்' செக்ஷனில் கேட்டறிந்து வாழ்த்தும், பொக்கேயும் அனுப்புகிற மனிதர் இனி இல்லை. தனக்கு இது கடைசி நாள் என்று தெரிந்து கொண் டிருப்பாரோ... இல்லையோ...? சிந்தனை தறிகெட்டு அலைந்தது.

இந்த இடம்தான். சந்தில புகுந்து இடதுபக்கம் திரும்பினா நாலாவது வீடு.

தழுக்கு சப்தம் காதில் கேட்டது. யாரோ மெலிதாய் அழுதார்கள். சுற்றுப்புறத்தில் வெறிச்! மிரண்ட விழிகளுடன் குழந்தைகள் பாண்டி ஆடுவதை விட்டுவிட்டு நின்றன. பக்கத்து டீக்கடையில் யாரைப் பற்றியும் கவலைப்படாமல் 'உங்கள் விருப்பம்'!

''வாங்க... பார்த்து... கீழே ஒரே சகதியா இருக்கு. வழுக்கிடப் போகுது'' ஹெட் கிளார்க் ஜனார்த்தனம் சொல்லிக் கொண்டே வந்தார்.

சிவாவுக்குத் தொண்டை வறண்டது. போய் இரண்டு இழுப்பு தம் அடித்து விட்டு வரலாமா...? சட்... நினைப்பைப் பார்! எப்





தங்கத்தின் தங்கம்

முழுக்க முழுக்க எம். ஜி. ஆர். பாணியைப் பின்பற்றி அமைக்கப்பட்டுள்ள இன்னுமொரு திரைக்கதை.

வறுமையில் வாடுகிறவர்களுக்கு ஆறுதல். வயோதிகர்களுக்கு அரவணைப்பு. ஒடுக்கப்பட்டவர்கள் சார்பில் போராடும் உறுதி. தாய் ஒன்று சொல்லி விட்டால் — அது எவ்வளவு கசப்பானதாக இருந்தாலும் — ஏற்றுத் தலைவணங்கும் பண்பு. இந்த லட்சியங்களை விளக்கும் தத்துவப் பாடல்...

காதலனுடன் ஓடியாடிப் பாடுவதாகக் காதலி மட்டுமே காணும் கனவு...

தர்மத்தின் பக்கம் தனியே நின்று, அதர்மத்தின் சார்பில் எத்தனையோ பேர் சேர்ந்து வந்தாலும் எதிர்த்துப் போராடி வெற்றி பெறும் வீரம்...

இவையெல்லாம் இதிலும்.

போதாததற்கு, எம். ஜி. ஆர்., ஜெயலலிதா படங்கள் கொண்ட போஸ்டர்கள் பின்னணியில் தெரிய, 'செத்துப் பிழைத்தவர் வழியில் நடப்பவன்' என்கிற தன்னிலை விளக்கப் பாடலும் கூட.

என்றாலும் — தோசை தோசைதான்; சப்பாத்தி சப்பாத்திதான்!

எம். ஜி. ஆர். படம் எம். ஜி. ஆர். படம் தான்.

— சி. ஆர். கே.

பேர்ப்பட்ட மனிதர் போய் விட்டிருக்கிறார்...''

ராமபத்ரன் முகத்தில் அமைதி ததும்பியது. ஏதோ ஒரு மிகப் பிடித்தமான ஆலாபனையை ரசித்துக் கேட்கிற தினுசில் கண்களை மூடியிருந்தார். கைகளில் சந்தனம்.

'என்ன ஸார்? கைல, நெத்தில எல்லாம் சந்தனம்?'

'இன்னிக்கு... சஷ்டிய்யா. விரதம் நான். கோயிலுக்குப் போயிட்டு நேரே வர்றேன்.'

கைகளில் மோதிரம், இடது மணிக்கட்டில் அந்த மிகப் பழைய ரோலக்ஸ்!

'என்ன சிவா பார்க்கறே...? இது என் கல்யாணத்தப்ப என் மாமனார் போட்டது. நல்லா இருக்கா...?' குழந்தை மாதிரி அந்த வாட்சை எடுத்துக் காட்டுவார் ஆவலுடன்.

அவருக்குப் பிடித்தமான வெள்ளை வேஷ்டி, சட்டை. அவர் மனைவியோ, யாரோ — ஒரு மூலையில் அழுது கலைந்து போய் உட்கார்ந்திருந்தார்.

மாலையை எம். டி. கொடுக்க, வாங்கி அணிவித்தார்கள். அலுவலக விதிப்படி அவருக்காக ஒரு தொகையைக் கொடுக்க, அவர் மனைவி சார்பில் யாரோ பெற்றுக் கொண்டார்கள். ஹெட்கிளார்க் ஜனார்த்தனம் ராமபத்ரனையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தார். ஒருவித சோகமா, இல்லை வேறு உணர்ச்சியா, புரியவில்லை.

கிளம்பினார்கள்.

மனத்தில் வெறிச்சென்றிருந்தது. தான் முதல் முதலில் ராமபத்ரனைப் பார்த்தது, பழகியது எல்லாம் பிம்பங்கள் போலத் தெரிந்தன.

வீட்டிற்கு வந்ததும் புவனா ஆச்சர்யப்பட்டாள்.

''அவரா? அந்த மனுஷனா? கல்லு குண்டு மாதிரி இருந்தாரே...?''

''மாஸிவ் ஹார்ட் அட்டாக் புவனா. சடுதியில் ஒரு சகாப்தம் நின்னு போச்சு... வெந்நீர் எடுத்து வை. குளிக்கணும். கசகசன்னு இருக்கு.''

புவனாவின் தங்கை சந்தியா, டீ. வி. பார்த்துக் கொண்டிருந்தாள். அமலாவின் சாயலில் ஒரு துருதுருப் புயல்.

குளித்துவிட்டு வந்தான். காப்பியை வாங்கி அருந்திக் கொண்டிருக்கும் போது புவனா கேட்டாள்.

''என்ன பண்ணப் போறீங்க?''

''என்ன சொல்றே புவனா?''

''இல்லை. நம்ம சந்தியா எம். காம். முடிச்சு வெறுமே மாகஸின் படிச்சுட்டுப் பொழுதைக் கழிக்கறா. உங்க கம்பெனியில சொல்லி...''

புரிந்...தது.

ஏற்கெனவே இரண்டொரு முறை 'வலு வான சந்தர்ப்பங்களில் அவள் அவன் காதில் போட்டிருந்த செய்திதான். தற்சமயம் ரிக்ரூட் மெண்ட் ஆக சான்ஸே இல்லை என்றார் எம். டி. ஆனால் தற்பொழுது ராமபத்ரன் மண்டையைப் போட்டு...('ச்சே...! என்ன ஒரு மோசமான வார்த்தை!) விட்டதால் வாய்ப்பு இருக்கிறது. ராமபத்ரன் பிள்ளை குட்டி இல்லாதவர். ஆனால் போட்டிக்கு அந்த ஜனார்த்தனமும் வரலாம். அவர் பையனும் படித்துவிட்டு வேலையில்லா மல்...

நோ...!


நாம் முந்திக் கொண்டாக வேண்டும். எம். டியை வளைத்துப் போட்டுவிட வேண்டும்.

"புவனா... எம். டி.யை ஒருநாள் நம்ம வீட்டுக்குச் சாப்பிடக் கூப்பிடணும். நாளைக்கே பக்குவமா சந்தியா பத்தி அவர் காதில போட்டு வைக்கறேன்..."

என்றான் சிவா.

அவன் மனத்திலிருந்த ராமபத்ரனின் பிம்பம் மறைந்து ஜனார்த்தனமும், எம். டி. யும் ஆக்கிரமித்துக் கொள்ள...

'ச்சே...! என்ன ஒரு ஒழுங்கீனமான எண்ணம் இது! நாயை நாய் அடித்துத் தின்கிற பிழைப்பு' என்ற எண்ணத்தை ஒதுக்கிய சிவா, மறுநாள் எப்படிக் காய் நகர்த்துவது எனத் திட்டமிட்டான்.



புத்தர் பெருமானைப் போற்றிய பாரத ரத்னா!



கோடையில் ஒரு வெப்பநாள்: அன்று பீமனும், அண்ணன் ஆனந்தனும் தந்தையைப் பார்க்க சதாராவிலிருந்து புறப்பட்டு, அவர் உத்தியோகத்திலிருந்த கோர்கானை நோக்கிச் சென்றார்கள். அவர்கள் மசூர் ஸ்டேஷன் வரையில் ரயிலில் பிரயாணம் செய்தார்கள். ஸ்டேஷனுக்குத் தந்தை வந்திருப்பார் என்று எதிர்பார்த்தனர். வெகு நேரம் காத்திருந்தனர்; ஆனால் அவர் வரவில்லை. காரணம் யாதெனில் இவர்கள் வருவதாக எழுதியிருந்த தபால் அவருக்குப் போய்ச் சேரவில்லை. ஆகவே அவர்கள் கோர்கான் வரையில் செல்ல ஒரு மாட்டு வண்டியை வாடகை பேசினார்கள். அந்த வண்டிக்காரன் ஒரு மேல் சாதிக்காரன். பிரயாணிகள் இருவரும் தீண்டாதவர்கள் என்று தெரிந்தது. அவர்களை இறக்கி விட்டான். இரட்டிப்புச் சத்தம் கொடுக்க ஒப்புக் கொண்ட பிறகு அவர்களை ஏற்றிச் சென்றான். அதுவும் எப்படி? ஆனந்தன் வண்டியை ஓட்டினான். வண்டிக்காரன் இவர்களோடு உட்காராமல் வண்டியின் பின்னால் நடந்து வந்தான். இருந்த போதிலும் இந்தப் பையன்கள் மாலை முதல் இரவு வரை குடிக்கத் தண்ணீர் கூட இல்லாமல் பிரயாணம் செய்தார்கள். ஏனெனில் இவர்கள் தீண்டப்படாதவர்கள் என்று தெரிந்ததும் சாலையிலிருந்தவர்கள் நீர் தர மறுத்தனர்!

அவமானப்படுத்தப்பட்ட இந்த அனுபவத்திற்குக் காரணம், தான் தாழ்ந்த சாதியில் பிறந்ததுதான் என்பதைப் பீமன் உணர்ந்தான். அதே சமயத்தில் சில உயர் சாதிக்காரர்கள் இவனை அன்பாக நடத்தியதையும் அறிந்தான். உதாரணமாக, தன் பள்ளி மாணவனிடம் பந்தயம் கூறி, மழை பெய்து கொண்டிருக்கும் போது வெகு தூரத்திலுள்ள பள்ளிக்கு நடந்து சென்றான். அவனுடைய ஆசிரியர் ஒரு பிராமணர். பெண்ட்சி என்று பெயர். இவனுடைய நனைந்த ஆடைகளையும் நடுங்கும் உடலையும் கண்டு பரிதாபப்பட்டு, தம்முடைய மகனை அழைத்து பீமனைத் தமது வீட்டிற்கு அனுப்பி வைத்தார். அங்கே அவனுக்கு உயர்ந்த ஆடைகளும் சூடான உணவும் அளிக்கப்பட்டன.




மற்றொரு பிராமண ஆசிரியர் அப் பள்ளியில் இருந்தார். அவர் பெயர் அம்பேத்கார். அவர் பீமன் மீது இரக்கங் கொண்டு அவனைத் தன் சொந்த மகன் போலவே நடத்தினார். நாள்தோறும் தான் உண்ணும் உணவில் அவனுக்கும் கொஞ்சம் கொடுத்து வந்தார். பீமனுடைய வீட்டுப் பெயர் சக்பால் என்பது. அந்த ஆசிரியர் தம் மீது கொண்டிருந்த அன்பின் சின்னமாகத் தன் பெயரை அம்பேத்கார் என்று வைத்துக் கொண்டான் பீமன். அந்த ஆசிரியரே பள்ளியின் சுவடிகளில் அவன் பெயரை அம்பேத்கார் என்று பதியச் செய்தார். அதன் பின்னர் வரலாற்றில் இவர் பெயர் டாக்டர் பாபா சாகிப் அம்பேத்கார் என வழங்கலாயிற்று.


டாக்டர் அம்பேத்கார் 1935 — ஆம் ஆண்டிலிருந்தே தமக்காகவும், தம்மைச் சார்ந்தவர்களுக்காகவும் மதமாற்றம் குறித்துச் சிந்தித்துக் கொண்டிருந்தார். இருந்த போதிலும் புது மதத்தைத் தேர்ந்தெடுப்பதில் கவனமாக இருக்க விரும்பினார். ஆழ்ந்து சிந்தித்து, பல வேறுபட்ட மத நூல்களைப் படித்த பிறகு அம்பேத்கார் கடைசியாகப் புத்த மதத்தில் சேருவதென்று தீர்மானித்தார்.


அம்பேத்கார் மதம் மாற்றம் செய்து கொண்டதற்கு முன்னால் இவ்வாறு கூறினார்: "புத்த மதத்தின் அடிப்படைக் கொள்கை சமத்துவம்! ஓ! பிட்சுக்களே! நீங்கள் பல சாதிகளைச் சேர்ந்தவர்கள். பல நாடுகளிலிருந்து வந்திருக்கிறீர்கள். எப்படிப் பெரிய நதிகள் பெருங்கடலுள் சங்கமம் ஆகும் போது தங்களுடைய தனித்தன்மையை இழந்து விடுகின்றனவோ அது போல இந்த நான்கு சாதிகளாகிய க்ஷத்திரிய, பிராமண, வைஸ்ய, சூத்திரர் என்பவையும் புத்தர் பெருமானின் கொள்கைகளில் தம்முடைய தனித்தன்மையை இழந்து ஒரே சமூகமாக ஆகிவிடுகின்றன.

— அரசியல் மேதை டாக்டர் அம்பேத்கார், சண்முக நிலையம், 5, ஏரிக்கரைத் தெரு, சென்னை — 33.

தொகுப்பு: **பி. எஸ். எம்.**


அன்று...
இதென்ன அநியாயம், அக்கிரமம்... இந்தாட மண்டையை உடைக்கணும்!
ராஜீவ்
கருணாநிதி
இன்று...
சுமந்து


அலட்சியம்
பயங்கரவாதம்
தேவலையே! இவங்க நம்மளவுட பெரிய ஆளுங்களா இருக்காங்க- ளே!


காப்பாத்துங்க... குதிரையை எப்படியாவது காப்பாத்துங்க!
திரிபாதி
ராஜீவ்
தலைமைப் பதவி
அதுக்குத்தானே லகானை விடாமே இழுத்துப் புடிச்சிக்கிட்டிருக்கேன்!
இ. காங்கிரஸ்
உட்கட்சி பூசல்
தேர்தல் தோல்விகள்
உட்கட்சி ஜனநாயகம் இல்லாமை



கல்கி

1990 ஏப்ரல் 29
மலர் : 48 இதழ் : 39
பிரமோதூத சித்திரை 16



பற்றியது நெருப்பு; எரிகிறது நெஞ்சு!

எங்கே, என்ன விபரீதம் நிகழ்ந்தாலும், 'இது பயங்கரவாதிகளின் வேலையோ?' என்று எண்ணுமளவில் இன்று பாரதத்தில் சூழ்நிலை படுமோசமடைந்துதான் வருகிறது. என்றாலும், டில்லி விஞ்ஞான பவனத்தில் நடந்த தீவிபத்தும், தலைநகரிலேயே சதார் பஜாரில் கடைகள் பல தீக்கிரையாகி அழிந்ததும் பயங்கரவாதத்தால் அல்ல; அதைவிட மோசமான அசிரத்தைதான் காரணம் என்பது இப்போது உறுதியாகியிருக்கிறது. பம்பாயோ, டில்லியோ, கோடிக்கணக்கில் ரூபாய் செலவிட்டு அரங்கம் அமைக்கிறோம், அல்லது ஓட்டல் கட்டுகிறோம். ஆனால் அதன் பராமரிப்பில் போதிய கவனம் செலுத்தாமல் ஆபத்தை வரவேற்கிறோம். டில்லி விஞ்ஞான பவனில் மின்சார இணைப்பில் பழுது ஏற்பட்டு, Short circuit ஆகி, தீ விபத்து ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. இது நமது அசிரத்தைப் போக்குக்கு மற்றொரு வலுவான எடுத்துக்காட்டு.

பீகார் மாநிலத்தில் ஓடிக் கொண்டிருந்த ஒரு ரயிலில் ஏற்பட்ட தீ விபத்தில் நூறு பேருக்கு மேல் பயணிகள் கருகிச் செத்தார்கள். இதுவும் சட்டம் — ஒழுங்கை மதிக்காத இந்திய மனப்பான்மையின் பின் விளைவே. ரயிலில் காஸ் ஸிலிண்டர்கள் ஏற்றிச் செல்லக் கூடாது என்பது தெரிந்திருந்தும் கொண்டு போன பயணியும், காஸ் ஸிலிண்டர் இருப்பது தெரிந்தும் சிகரெட் பற்ற வைத்த பயணியும் தங்கள் ஆணவம் அலட்சியம் காரணமாக நூறு பேருக்கு மேல் மரணமடைய வழிவகுத்தார்கள்.

அபாய அறிவிப்புச் சங்கிலியை இழுத்த போது ரயில் நின்றிருந்தால் இத்தனை உயிர்ச்சேதம் ஏற்பட்டிராது என்பது உண்மையே. ஆனால் அபாய அறிவிப்புச் சங்கிலி வேலை செய்யவில்லை! இது ரயில்வே அதிகாரிகள், ஊழியர்கள் ஆகியோரின் அலட்சியப் போக்கை உணர்த்துவதாகும். ரயில் அதிகாரிகளைக் கேட்டால் அவர்கள் அதற்கு ஒரு விநோதக் காரணம் சொல்கிறார்கள்: ''பயணிகள் தாங்கள் இஷ்டப்பட்ட இடத்தில் இறங்க வசதியாகச் சங்கிலி இழுப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள்; இதனால் ரயில்கள் தாமதமாகின்றன. இதைத் தவிர்க்கவே அபாய அறிவிப்புச் சங்கிலி இயங்காமல் செய்து விட்டோம்'' என்கிறார்கள். பயணிகள் சட்டத்துக்கு உட்பட்டு நடக்குமாறு தண்டனை, அபராதம் மூலம் வழி நடத்த வேண்டிய கடமை அதிகாரிகளுக்கு உண்டு என்பது மறக்கப்படுகிறது. அது ஒரு புறம் இருந்தாலும், பொதுவாக மக்களிடையே கட்டுப்பாடின்மை தலைவிரித்து ஆடுவதும் அதனை அடக்க முடியாமல் அதிகாரிகள் திணறுவதும் தெரிந்த கதை. சாலை விதிகள் மீறுவது முதல், தொட்டதற்கெல்லாம் போராட்டம் — எடுத்ததற்கெல்லாம் மறியல் என்பது வரை நாம் சுயக்கட்டுப்பாடு இழந்தவர்களாகி விட்டோம். ஆபத்தான இந்தப் போக்கிலிருந்து நம்மை நாமே திருத்திக் கொள்வதன் மூலம்தான் நாட்டைக் காப்பாற்ற முடியும்.

உத்தரப் பிரதேசம் ராய்புர்வா கிராமத்தில் கல்யாண விருந்து சாப்பிட்ட 150 பேர் செத்துப் போயிருக்கிறார்கள் என்பது மற்றோர் அதிர்ச்சியான செய்தி. கோதுமையைப் பூச்சிகள், எலிகளிடமிருந்து பாதுகாக்கப் பயன்படுத்தப்பட்ட ரசாயனக் கொல்லிகள், உணவு தானியத்துடன் கலந்துவிட, அதுதான் மரணத்துக்குக் காரணமாகியுள்ளது என்பது தெரியவருகிறது. இங்கேயும் மனிதர்களுடைய அசிரத்தையும் அலட்சியமும்தான் உயிர்களைப் பலி வாங்கியிருக்கின்றன.

நாம் எல்லோருமே திருந்த வேண்டும்; ''கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவற்றைத் தாரக மந்திரமாகக் கொண்டவன் இந்தியன்'' என்ற நற்பெயரைப் பெற வேண்டும் — சந்தேகமில்லை. ஆனால் கூடவே விசனத்துடன் இன்னொரு கேள்வியும் எழுகிறது: 'இது போன்ற ஆபத்தான நிலைகளில் பொறுப்பேற்க வேண்டியவர்கள் எல்லோருமே தகுதி காரணமாக அங்கே வந்து சேர்ந்தவர்கள்தானா?' என்பதுதான் அந்தக் கேள்வி. மக்களின் உயிருடன் சம்பந்தப்பட்டிருக்கும் பிரிவுகளிலாவது தகுதி அடிப்படையில் மட்டுமே அனுமதி, தேர்வு, உத்தியோக உயர்வு என்று இருப்பது நல்லது. இல்லையெனில், தகுதி உள்ளவனும் கூட மனச்சோர்வு அடைவதால் அலட்சியம், அசிரத்தை காட்ட ஆரம்பித்து, விபத்துக்களை வரவேற்பவனாகிறான்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

ஆரோக்கிய ரகசியம்:
—வி. என். குமாரசாமி

3

பத்மாசனம் பழகும் முறை

மிருதுவான விரிப்பின் மீது உட்கார்ந்து இரண்டு கால்களையும் நீட்டவும். வலது காலை மடக்கி இரண்டு கைகளாலும் வலது பாதத்தைத் தூக்கி இடது தொடையின் மேல் அடிவயிற்றில் குதிகால் ஒட்டினாற் போல் அமர்த்தவும். பிறகு இடது காலை மடக்கி கைகளின் உதவியால் இடது பாதத்தை வலது தொடையின் மேல் குதிகால் அடிவயிற்றில் ஒட்டினாற்போல் வைக்கவும். இரண்டு பாதங்களும் மேல் நோக்கி இருக்க வேண்டும். மடக்கின முழங்கால்கள் தரையில் ஒட்டியிருக்க வேண்டும்.


இது சிலருக்குச் சுலபமாக வந்து விடும். சிலருக்கு ஒரு காலை மட்டும் தூக்கித் தொடை மீது போட முடியும். மறுகாலைத் தூக்கிப் போட முடியாது. சிலர் பின்னுக்குச் சாய்ந்து விடுவார்கள்! சிலருக்கு ஒரு காலைத் தூக்கிப் போட்டு மறுகாலைத் தூக்கும் போது முன் போட்டது கழன்று விடும். அப்படியே இரு கால்களையும் தூக்கிப் போட்டாலும் அடிவயிற்றில் குதிகால் ஒட்டாது. கணுக்கால் நரம்பு சுரீலென்று வலிக்கும். சிலருக்குத் தொடையை வலிக்கும். தொடை நரம்புகள் இழுக்கும். சிலருக்குப் பத்மாசனம் போட வந்தாலும் இரண்டு முழங்கால் முட்டிகளும் தரையில் ஒட்டாது தூக்கிக் கொண்டு நிற்கும்.

இவையெல்லாம் பழகப் பழக மறைந்து விடும். வலிக்கிறதே என்று விட்டு விடவும் கூடாது. முரட்டுத்தனமாக முயற்சி செய்யவும் கூடாது. சிறிது சிறிதாக வெற்றி கொள்ள வேண்டும். முதல் நாள் ஒரு காலை மட்டும் தூக்கிப் போட்டு அந்த நிலையில் இருந்தாலும் போதும். மறுநாள் இன்னொரு காலைத் தூக்கி வைக்க முயற்சி செய்யலாம்.

விடாமுயற்சியுடன் பழகினால் நரம்புகளின் பிடிப்பு விடும். சதைகள் தளர்ந்து கொடுக்கும். பத்மாசனம் நன்றாகப் போட வரும். ஒரு வாரம் பத்து நாள் ஆனாலும் பாதகமில்லை. கொஞ்சம் கொஞ்சமாக முன்னேற வேண்டும். முதலில் சில வினாடிகள் தாம் பத்மாசனத்தில் இருக்க முடியும். பிறகு ஒரு நிமிஷம் இரண்டு நிமிஷம் என்று நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகலாம்.

அப்புறம் உட்காரும்போதெல்லாம் இந்த ஆசனத்திலேயே உட்காரப் பழகிக் கொண்டால் நம்மை அறியாமலேயே ஆரோக்கியத்துக்கு விதையிட்டவர்களாவோம். காரியாலயத்தில் நாற்காலியில்தான் அமர வேண்டும்; பத்மாசனத்தில் உட்கார்ந்தால் சிரிப்பார்கள். ஆனால் நண்பர் வீட்டுக்குப் போனால், அல்லது ஒரு கல்யாணத்துக்குப் போனால் அங்கேயும் நாற்காலி தேடுவானேன்? பாயில் அல்லது ஜமக்காளத்தில் பத்மாசனத்தில் அமரலாமே? கால் மணி நேரம் அமர்ந்தால் சற்று கால் வலிக்கும். திமிர் பிடித்தாற்போல் இருக்கும். கால்களைக் கழற்றி, ஐந்து நிமிஷத்துக்குப் பிறகு மறுபடி பத்மாசனம் போட்டு அமரலாம். பத்மாசனத்துக்கு என்று தனியாக நேரம் தேவையில்லை. எப்போதும் எந்த நேரத்திலும் உட்காரலாம். பேசும் போது மட்டுமல்ல, படிக்கும் போதும் எழுதும் போதும்கூட இப்படி அமர்ந்து பழகலாம். பெண்மணிகளும் செய்யலாம்.

"கால் மேல் கால் போட்டு உட்காருவது மரியாதைக் குறைவாயிற்றே" என்று யோசிக்க வேண்டாம். எதிரே இருப்பவர்களுக்கு விஷயத்தை விளக்கினால் புரிந்து கொள்வார்கள். அவர்களும் இப்படி அமர ஆசைப்படுவார்கள்! பாதத்தைச் சொக்காயினாலோ அல்லது அங்கவஸ்திரத்தினாலோ மூடி விட்டால் மரியாதைக்குறைவாகத் தோன்றாது. பெண்கள் புடைவைத் தலைப்பால் மூடி வைக்கலாம். சிறுவர்கள், வாலிபர்கள், வயதானவர் எல்லோரும் செய்யலாம்.






பெண்கள் மாதவிடாய்க் காலங்களில் செய்யக் கூடாது. மற்ற நாட்களில் பத்மாசனம் போடலாம். ஆசனங்கள் பழகாத பெண்மணி கர்ப்பிணியாக இருந்தால் எந்த ஆசனமும் புதிதாகப் பழகக் கூடாது. வழக்கமாக ஆசனம் பழகி வந்து கர்ப்பமானால், சில ஆசனங்களை ஒன்பது மாதங்களில் சில மாதங்களில் செய்யக் கூடாது. அவை பற்றி அந்தந்த ஆசனங்களைக் குறித்து எழுதும்போது விவரமாகச் சொல்கிறேன். ஆசனம் போட்டுப் பழகிய பெண்மணி கர்ப்பமானால் ஏழு மாதங்கள் வரை பத்மாசனம் போடலாம். அதற்குப் பின் போடக் கூடாது.

தியானத்தில் இருக்கும் போது, பூஜை செய்யும் போது, பிராணாயாமம் அல்லது ஜபம் செய்யும் போது பத்மாசனத்தில் இருப்பது சாலச் சிறந்தது. மனம் குவிந்து ஒருமைப்படும். பத்மாசனத்தின் சுகம் கண்டு விட்டால் எப்போதும் தரையில் பத்மாசனத்தில் அமரவே மனம் ஆசைப்படும்.

பத்மாசனத்தின் பலன்கள் பற்றி சென்ற இதழிலேயே குறிப்பிட்டேன். முக்கியமாக நுரையீரல் சுருங்காமல் தாராளமாக விரிவதால் நுரையீரலில் நோய்க் கிருமிகள் இருந்தால் நாசமாகும். ரத்தத்துக்குப் பிராண வாயு நிறையக் கிடைத்து சுத்தமடையும். இருதயத்துக்கும் மற்ற உடல் உறுப்புக்களுக்கும் சுத்தமான ரத்தம் பாய்ந்து நிறைய பிராணவாயு கிடைக்கச் செய்கிறது. இதனால் எல்லா உறுப்புக்களுமே புத்துணர்ச்சி பெறுகின்றன.

இன்னொரு முக்கியமான, விஞ்ஞான பூர்வமான விஷயம் இருக்கிறது. பத்மாசனத்தின் போது நமது முதுகு எலும்பு நேராக நிமிர்ந்து நிற்கிறது. முதுகு எலும்புக்குள்ளே நரம்புத் தண்டு அமைந்திருக்கிறது. மூளைக்கு அடுத்தபடியாக இந்த நரம்புத் தண்டுதான் நரம்பு மண்டலத்தில் மிக முக்கியமானது. இது நமது அன்றாட வாழ்க்கையில் வளைந்து, நெளிந்து கொடுத்தாலும் பத்மாசனத்தில் உருவி விடப்பட்டது போல் நிமிர்வதால் நரம்புகளுக்கு வீரியம் உண்டாகிறது. நரம்பு பலஹீனம் ஓடிப் போய் விடும். சோம்பேறித்தனம் ஒழியும். நல்ல பசி உண்டாகும்.





''என்ன டாக்டர், என் குழந்தைக்குத் தான் உடம்பு சரியில்லைன்னு ஊசி போட்டீங்க. இப்ப எனக்கும் ஊசி போடறேங்கறீங்களே, எதுக்கு?''

''உங்களுக்குக் கொடுக்க வேண்டிய மீதிச் சில்லறைக்குத்தான் இந்த ஊசி!''

— வி. ஆண்டாள்.

பத்மாசனத்தில் கணுக்கால் தொடைகளை அழுத்துவதால் தொடைகள் பலம் பெறுகின்றன. கணுக்காலும் உறுதி அடைகிறது. அடிவயிற்றைக் குதிகால் அமுக்குவதால் வயிற்றுக் கோளாறுகள் கூட ஒழிந்து போகும்.

நமது வயிறும் நெஞ்சும் நிமிர்ந்து நிற்கவும் அமரவும் ஏற்பட்டவை. ஆனால் நாகரிக யுகத்தில் பல்வேறு காரணங்களால் வயிறு தளர்ந்து தொந்தி போடுகிறது. அல்லது உள் மடிந்து உள் உறுப்புக்களுக்கு சிரமம் தருகிறது. பத்மாசனத்தில் இந்தக் குறைகள் நீங்குகின்றன. வயிறு விண்ணென்று வில்லின் நாண் போல் இருக்கிறது. அதனால் உள் உறுப்புக்களும் தட்டிக் கொடுக்கப்பட்டது போல் தெம்பு பெறுகின்றன.

பத்மாசனத்துக்கு மட்டுமே இவ்வளவு மகிமை இருக்கிறது. அதனால்தான் நம் முனிவர்கள் எல்லாம் இந்த ஆசனத்திலேயே இருந்தார்கள். நமது முன்னோர்களை சரீர சாஸ்திர நிபுணர்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

(தொடரும்)

படங்கள்: உத்ரா

படத்தில் சத்தீந்திரன். இடம்: சிவானந்தா யோகா வேதாந்த கேந்திரம்

வட்டமேஜை

விருந்து ஒரு பக்கம்; மருந்து மறுபக்கம்...

• மயிலையில் நடந்த 'அறுபத்து மூவர் விழா' பற்றிய அருமையான கவர்ஸ்டோரி மூன்று பக்கங்கள்...! தொடர்ந்து இரண்டு பக்கங்கள் புரட்டினால், சென்னை பெசன்ட் நகரில், நல்ல குடிதண்ணீர் மறைந்து வெறும் உப்பு அளறியாக மாறவிருக்கும் அபாய அச்சுறுத்தல்! வீரபாண்டித் தொகுதி விசிட்டில் விவரிக்கப்பட்ட புளித்துப் புரையோடியப் பிரச்னைகள்... வருஷப் பிறப்பிற்கு வெல்லமும் வேப்பம் பூவும், மாங்காயும் கலந்து சாப்பிட்டது போல்தான் இருந்தது!

தோப்புத்துறை, ஆர். பாலாஜி.

• மயிலையில் அறுபத்து மூவர் உற்சவத்தின் போது நாங்கள் அங்கு இல்லையே என்ற குறையை நீக்கி விட்டது அட்டைப்படமும்... அதைப் பற்றிய அருமையான விளக்கங்களைக் கொண்ட கட்டுரையும்... பாராட்டுக்கள். நன்றி!

வேலூர் — 6, ரமா சந்திரசேகர்.

• அறுபத்து மூவர் விழாவை அப்படியே கண்முன் கொண்டு வந்து நிறுத்தியதுடன், எலும்பைப் பெண்ணுருவாக்கி அருளிய கதையையும் எடுத்துக் கூறி, சிலிர்க்கச் செய்துவிட்டீர்கள்.


மங்கைநல்லூர், ஆர். செல்வராணி.

• வீரபாண்டித் தொகுதி மக்கள் பிரதிநிதிகள் (எம். எல். ஏ., சேர்மன், பஞ்சாயத்துத் தலைவர்) போன்ற யதார்த்தவாதிகளை எங்குமே காண முடியாது. ஏரியில் விவசாயம், பஸ் ஸ்டாண்ட் தளத்தில் வீடுகள், கள்ளச்சாராயக் கடைகளின் பெருக்கம், சினிமா டிக்கெட்டுகள் தியேட்டரிலேயே அதிக விலைக்கு விற்றல்... இவற்றை மறுக்காமல், எல்லாக் கட்சிகளும் சரிசமமாக அனுபவிக்கச் செய்திருக்கும் ஏற்பாடுகளை அறிந்து — ஆகா! மெய்சிலிர்த்தோம்!

சிட்லபாக்கம், அ. ஷண்முகசுந்தரம்.

• சமுதாய நோக்குடன், மக்களுக்கு ஏற்படும் பிரச்னைகளைக் கேட்டறிந்து அவற்றுக்குத் தீர்வு காணும் வகையில் அப்பிரச்னைகளை வெட்ட வெளிச்சமாக்கி அரசாங்கத்தின் கவனத்தை ஈர்க்கக் கூடிய விதத்தில் கட்டுரை, பேட்டிகளை வெளியிடுவதில் 'கல்கி'க்கு நிகர் கல்கியே! இந்த வரிசையில், வீரபாண்டித் தொகுதி விசிட் விவரங்களுடன் பெசன்ட் நகர்வாசிகளின் நிலைமையையும் அலசி, ஆராய்ந்து வெளிக்கொண்டு வந்திருப்பது உண்மையிலேயே வரவேற்கத்தக்கது.

திருச்சி — 16, ஜானகி மைந்தன் எஸ். ராஜகோபால்.



• அடக்க ஒடுக்கமாக வளர்க்கப்படும் ஆண் பிள்ளைகள் எப்பவுமே சுயமாக யோசிக்கத் தெரியாதவர்கள். இவர்கள் ஆரம்பத்தில் தாய், தந்தையின் பேச்சுக்குக் கட்டுப்படுவதால், பின் மனைவியின் பேச்சுக்குக் கட்டுப்படுவார்கள் என்ற கருத்தை மிக அழகாக 'எனக்கென்று ஓர் உரிமை' சிறுகதை மூலம் பானுமதி ராஜகோபாலன் வடித்திருந்தார்! பாராட்டுக்கள்!

சீர்காழி, சண்பை. சிவ. சண்முகம்.

• 'வாக்லே கே துனியா' டி. வி. தொடரில் நடிக்கும் அஞ்சன் ஸ்ரீ வத்ஸவ் அளித்த பேட்டியைப் படித்ததும் ஆர். கே. லக்ஷ்மண் அத்தொடரை எப்படி இந்த அளவிற்குச் சிறப்புற அமைக்கிறார் என்பது புரிந்தது.

லால்குடி, எம். இராஜேந்திரன்.

• எதிர்காலத்தில் ஆண்கள் வரதட்சணை கொடுக்கும் நிலை வரப்போகிறது எனக் கூறிய தராசாரே, இதெல்லாம் கூட தமாஷா உங்களுக்கு...?
யார் கொடுத்தாலும் வரதட்சணை என்பது ஒரு கொடிய வியாதிதானே?

வேலூர், கே. ஆர். தேவேந்திரன்.

• வாசகர் ஒருவரின் கேள்விக்கு, அகாலித் தலைவர் மான் உண்மையில் ஒரு மாயமான்; வி. பி. சிங் அவரை நிச்சயம் வெல்லுவார், அம்பினால் அல்ல, அன்பினால் என்று வைரம் போல் நம்பிக்கை ஒளிவீசும் வார்த்தைகளில் தராசார் பதிலளித்திருப்பதைப் படித்து, ரசித்து மகிழ்ந்தேன்.

இராயபுரம், தக்கோலம் புகாரி.

• செலவுகளைத் தவிர்க்கவும், வருமானத்தில் ஒரு பைசாக் கூடக் குறையாமல் இருக்கவும் மாப்பிள்ளையும் மாமனாரும் கூடிப் பேசிப் போட்ட திட்டம் பலே திட்டம்தான்! 'இலவசமா? மூச்!' சிறுகதையில் வரும் இந்த இருவரும் தந்திரத்தில் நல்ல நரிகள்தான்!

வடுகவிருட்சியூர், ஆர். அமுதா.

• இந்த வாரத் தலையங்கம் சாணக்கியத்துடன் எழுதப்பட்டிருந்தது. அதில் இருந்த 'கருத்துக்கள்' யாவும் பிரதமருக்குக் கூறப்பட்ட முத்தான 'யோசனைகள்'

நீடூர், அ. முஹம்மது நிஜாமுத்தீன்.

• காஷ்மீர் தலைவலிக்கும், பஞ்சாப் மண்டை இடிக்கும் தாங்கள் ஒரு டாக்டராய் நின்று அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் கொடுத்திருக்கும் மருந்து சரியான தீர்வு தரும் ஒன்றாகும். ஆனால் அதை அனைவரும் சேர்ந்து சாப்பிடுவார்களா என்பதுதான் கேள்விக்குறி.

முருங்கப்பேட்டை, வேணாதாசன்.

• 'ஆன்மீகம்' — என்ற உன்னதமான விஷயத்தின் உயர்வை, ஆத்மார்த்தமான வகையில் உணர்த்தும், 'கீரன் கூறிய கதைகள்' — இலவச இணைப்பைப் படித்து, இதயம் நிறைந்தேன்!

வேலாயுதம்பாளையம், எம். சம்பத்.

மணல்வெளி மான்கள் 16

ஹோட்டல் மாடியில் இடது வரிசை மேஜைகளில் ஒரு பந்தி முடிந்து இலை யெடுத்துக் கொண்டிருந்தார்கள்.

"அந்த மூலைக்குப் போயிடலாமா?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

"ஓ!"

பக்கத்தில் பக்கத்தில் உட்கார்ந்தனர் இருவரும்.

இலையெடுப்பு முடிந்து மேஜை சுத்தம் ஆகிறவரை காத்திருக்கவேண்டும்.

"காலையிலே வந்தியா?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

"ஏழே முக்கால் வண்டி."

இன்ஸ்பெக்டரின் கண்களில் அவன் மீது ஒரு பரிசீலனை படர்வதைக் கௌதம் உணர்ந்தான்.

"என்ன சொல்றாரு ஒங்க வக்கீல்?"

அவனால் ஒரு சின்ன அதிர்ச்சியை மறைக்க முடியவில்லை. இவருக்கு எப்படி விவரம் தெரிந்தது?

அவன் அதிர்ச்சியை ரசிப்பவர் போல் அவர் கண் சிமிட்டினார். "ராம பத்ரன் தானே! நல்ல லாயர்."

அவன் மௌனத்தைக் கண்டு ஒரு விநாடி நிறுத்தினார்.

"போலீஸுக்கு எல்லாம் தெரியும்" என்றார்.

அது நல்ல சந்தர்ப்பம். மரியாதை முகமன், சௌஜன்யம் என்று எதற்காகவும் இழக்கக் கூடாத சந்தர்ப்பம்.

சட்டென்று குறுக்கிட்டான்.

"மாசிலாவை யார் கொலை செய்ததுன்னு கூடவா?"

அவர் முகம் கறுத்தது.

"நீ புரிஞ்சுக்க வேண்டியது நிறைய இருக்கு கௌதம்" என்றார்.


அவன் அத்து மீறிவிட்டதாக உணர்ந்தான்.

"இதுவே வேற எடமாவோ வேற ஆளாவோ இருந்தால் இவ்வளவு நிதானமா நான் பேசிட்டிருப்பனான்னு சொல்ல முடியாது!"

அதற்கு பதில் சொல்ல அவனுக்கு நாக்குத் துடித்தது. இவர் வெறும் இன்ஸ்பெக்டர் அல்ல. இருதயராஜ். பிலோமினாவின் அண்ணன். மேலும் எவர் முன்னாலும் நாவடக்கம் உத்தமம்.

அதே அடக்கமான தைரியத்தோடு

வையவன்



அவன் அவரைப் பார்த்தான். அந்தப் பார்வையை அவர் வாங்கிக் கொண்டார்.

''ராமபத்ரன் பல கேஸுங்களை ஜெயிச்சிருக்காரு.''

ஒரு நெரடு தட்டிய விநாடியை அவர் இயல்பாகக் கடந்தது அவனுக்குப் பிடித்தது.

''டிபார்ட்மெண்டோட அவருக்கு எப்பவும் மோதிட்டிருக்கணும். அதில ஒரு குஷி. அஃப் கோர்ஸ் அவர் தொழில் அப்படி!''

தான் ஏதோ பேச வேண்டும். இல்லாவிட்டால் கண்ணியமில்லை. தெரிந்தது. ஆனால் வார்த்தைகள் வரவில்லை.

''நேத்து நீ பிலோமினாவை மீட் பண்ணியா?''

மீண்டும் அவன் அதிர்ச்சியுற்றான். ஆனால் இந்தத் தடவை வெளிக்காட்டவில்லை. ''ஆமா சார்! ஒரு வேலையா கடிகாரக்கடைக்குப். போனேன். அவங்க அங்கே வந்தாங்க.''

இன்ஸ்பெக்டர் முகத்தில் ஒரு சிறு நெகிழ்ச்சி.

அவர் இடது பாக்கெட்டில் கை விட்டு எதையோ வெளியே எடுத்தார். கடிகாரம். அவனுடையது.

''இது உன்னுடையது தானே?''

''ஆமா.''

''இதை பிலோ உன் கிட்டே சேர்ப்பிக்கச் சொல்லுச்சு.''

அவன் ஒரு கணம் கண் வாங்காமல் அவரைப் பார்த்தான். பின்பு பேசினான்.

''ஸாரி சார். அவங்க அதுக்குப் பணம் குடுத்துட்டாங்க.''

''எவ்வளவு?''

''ஆயிரம்.''

இன்ஸ்பெக்டர் அந்தக் கடிகாரத்தை ஒரு தரம் தூக்கி டயல் பார்த்தார். மீண்டும் அவனைப் பார்த்தார்.

''ஸோ இதை நீ வாங்கிக்க மாட்டே?''

''ஸாரி சார்.''

அவன் மேஜை மேல் சர்வர் போட்டுக் கொண்டு போன இலையைப் பார்ப்பது போல முகம் திரும்பினான்.

''நீ வித்தியாசமான நபர்.''

அவன் இலை மீது தண்ணீரைத் தெளித்தான். கையிலிருந்த சாப்பாட்டு டிக்கெட் மீது தம்ளரை வைத்தான்.

கௌதமின் இயக்கத்தைக் கூர்ந்து கவனித்த இன்ஸ்பெக்டர் தொடர்ந்தார்.

''நீ என் கேள்விக்குப் பதில் சொல்லலே?''

அவன் திரும்பிப் பார்த்தான்.

''என்ன சொல்றார் வக்கீல்?''

''பெய்ல் கிடைக்கிறது கஷ்டம்னார்.''

இன்ஸ்பெக்டர் எதாவது சொல்வார் என்று கௌதம் எதிர்பார்த்தான்.

அவர் பேசவில்லை.

''ஹைகோர்ட்டுக்குப் போகணும்னு சொன்னாரு.''

மீண்டும் இன்ஸ்பெக்டர் மௌனம் சாதித்தார்.

''நீ நிழலோட போராடறே கௌதம்!''

காய்கறிக்கிண்ணம் அவன் இலையை நெருங்கியது. அது இன்ஸ்பெக்டரைத் தாண்டும் வரை காத்திருந்து பின் கௌதம் தொடர்ந்தான்.

''நிழல் இல்லே சார் நிஜம்.''

''நிஜம் போலீஸ் ரெகார்ட்ல இருக்கு.''

''அது வெறும் எஃப் ஐ ஆர் சார்! எல்லா நிஜமும் எஃப்ஐஆர்லே பதிவாயிடற தில்லே.''

''ஓ நீ ஹெட்கான்ஸ்டபிள் பிள்ளை இல்லே. அதை நான் மறந்துட்டேன்.''

அவன் இன்ஸ்பெக்டரின் பேச்சில் இருந்த குத்தலைப் புரிந்து கொண்டு. திரும்பிப் பார்த்தான்.

''ஒங்களைப் போலவே அவரும் ஒரு வித்தியாசமான போலீஸ்காரர் சார்!''

தனது தந்தையைத் தாங்கிப் பிடிக்க அவன் பயன்படுத்திய வார்த்தைகளில் ஏதோ ஒரு மறைமுகப் பரிகாசம் கலந்திருப்பதாக இருதயராஜ் கருதினார். அவர் முகம் சிவந்தது.

''வாட் டு யூ மீன்?'' என்று சூடாகக் கேட்டார்.

''சட்ட விரோதிகளுக்கு அவர் ஒரு சிம்ம சொப்பனம்.''

''அது ஒரு காலம். குட் ஓல்ட் டேஸ்.''

''சத்தியம் எப்பவும் புதுமையாத்தான் சார் இருக்கு. அதைத் தேடுகிற துணிவு இப்பவும் இருந்துட்டுத்தான் சார் இருக்கு.''

இன்ஸ்பெக்டர் ஒரு கவளத்தை வாயி விட்டுக் கொண்டபின் திடீரென்று சிரிப்பு வந்து விடவே, அவருக்குப் புரையேறியது. கண்கள் கலங்கி விட்டன. தலையில் தட்டிக் கொண்டார். தம்ளரில் இருந்து கொஞ்சம் தண்ணீர் குடித்தார்.

அவனைத் திரும்பிப் பார்த்தார்.

''நீ சொன்னது பெரிய ஜோக் கௌதம்! எனக்குச் சிரிப்பு வந்து புரையே ஏறிடுச்சி.'' கௌதமைக் கூர்மையாகப் பரிகாசம் செய்பவை அந்த வார்த்தைகள். அவன் அதன் வேகத்தை வாங்காதவன் போல் மெல்லச் சிரித்தான்.

''அது ஜோக் இல்லேன்னு உங்களுக்கே தெரியும் சார்.''

''நீ மிகைப்படுத்தறே.''

''இல்லே சார்!''

''சொல்லு.... சத்தியம் எப்பவும் புதுமையானதுன்னு ஒரு ஸ்டேட்மெண்ட் சொன்னியே! ஒரு உதாரணம் காட்டு.''

சாதம் பிசைந்த அவர் கரம் வாய்க்கு உயர்ந்து கொண்டிருந்தது. அதை அவர் உண்ணும் வரை பொறுத்திருந்து அவன் சொன்னான்.

''சிஸ்டர் பிலோமினா.''

இன்ஸ்பெக்டரின் கை இலை மீது சிறிது நேரம் அப்படியே நின்றுவிட்டது. கௌதம்

திரும்பி அவர் முகத்தைப் பார்த்தான்.

அது ஒரு புதிய இருதயராஜ். மெல்லிய சோகத்தின் மேகம் ஒன்று அவர் முகத்தைக் கடந்து சென்றது.

இது அவசியமற்ற உரையாடலா? கௌதமுக்கு நிச்சயமில்லை. தான் அவர் மனத்தை வருத்தபடுத்தி விட்டதற்காகச் சற்று சங்கடமுற்றான்.

இது மிகவும் அந்தரங்கமானது. அவரது குடும்பத்தின் எல்லைக்குள் பிரவேசிப்பது. ஒரு மனிதனின் இதயச் சூட்டிற்கும் சில்லிப்புக்குமிடையே குறுக்கிடுவது.

இன்று ஏன் என் நாக்கில் இப்படி எனக்கே ஒப்புதல் இல்லாத, இங்கிதமில்லாத வார்த்தைகள் வந்து குதிக்கின்றன? எனக்கு இவரை வேதனைப்படுத்த வேண்டும் என்ற நோக்கமே சற்றுமில்லையே.

மனம் சில சமயங்களில் விதிகளை மீறிக் கூத்தாடுகிறது. இடிக்கிறது தகர்க்கிறது. பொசுக்குகிறது. சறுக்கி விழுகிறது. தானே தனக்குத் துன்பம் விளைவித்துக் கொண்டு தவிக்கிறது.

இன்ஸ்பெக்டர் மெதுவாகச் சாப்பிட ஆரம்பித்தார். சமாளித்துவிட்டார்.

சாம்பார் முடிந்து ரசத்துக்குக் காத்திருக்கும் இடைவேளை வரை இருவரும் பேசவில்லை.

''நீ சொன்னது சரி கௌதம்!'' என்றார் இன்ஸ்பெக்டர். அவர் குரல் ஆழத்தில் ஒலித்தது.

சாப்பாடு முடிந்து கையலம்பிக் கொண்டு இருவரும் கீழே இறங்கினர்.

''ஸோ?'' என்று விடை பெறுகிற மாதிரி கேட்டார் இன்ஸ்பெக்டர்.

''நான் வர்றேன் சார்!''

''அப்ப ஹைகோர்ட்டுக்குப் போய் பெய்ல் மூவ் பண்ணப் போறீங்க?''

''தெரியலே சார்! வக்கீல் வரச் சொல்லியிருக்கிறார். போய்ப் பார்க்கிறேன். அப்புறம் தான் முடிவு.''

''விஷ் யூ பெஸ்ட் ஆஃப் லக்!''

''தாங்க்யூ சார்.''

வக்கீல் நாலரை மணிக்குத்தான் தம் தென்னை மரத் தெரு அலுவலகத்துக்கு வந்தார்.

இன்ஸ்பெக்டரைத் தற்செயலாகச் சந்திக்க நேர்ந்ததைச் சொன்னான்.

''இருதயராஜ் நேர்மையான இன்ஸ்பெக்டர் தான். ஆனா அவருக்கு மேல இருந்து 'பிரஷர்' குடுப்பாங்க.''

''ஹைகோர்ட்டுக்கு பெய்ல் வாங்கப் போனாலும் பிரஷர் வருமா சார்?''

''சொல்ல முடியாது. ஏன் கேக்கறேங்க?''

''ஒங்களுக்கு அநாவசியமா அலைச்சல் கொடுக்கணும்னு நான் நெனக்கலே.''

அவன் எதற்கோ தயங்குவதை வக்கீல் உணர்ந்தார். ''கமான். வெளிப்படையாச் சொல்லுங்க.''

''பெயில்லே ஆதி வெளியே வர்றதை விட ஜெயில்லே அவன் இருக்கிறதே ஒரு பாதுகாப்பாக இருக்கலாம் சார்.''

வக்கீல் அவனை விசித்திரமாகப் பார்த்தார்.

''மாசிலா கொலையிலே சம்பந்தப்பட்ட நபர், ஆதி பெயில்ல வந்ததுமே ஒரு ஜாதிக் கலவரத்தைத் தூண்டிவிடலாம்.''

''அவன் அவ்வளவு பவர்புல் ஆசாமியா?''

நேற்று இரவு தன்னையழைத்துத் துளசிங்கம் சுற்றிவளைத்து மிரட்டியதைக் கௌதம் சொன்னான்.

''கேஸுன்னு துவங்க ஆறுமாசமும் ஆவும். ஒரு வருஷமும் ஆவும். அவ்வளவு நாள் ஆதி ஜெயில்ல தானே இருக்க வேண்டி வரும்?''

''அவன் அக்யூஸ்டா வெளியே நடமாடறதை விட நிரபராதியா ஜெயிலை விட்டு வர்றதுதான் நல்லது சார்.''

''எதுக்கும் ஆதியை நாம ரெண்டு பேரும் ஜெயில்லே சந்திக்கணும்.''

''இப்ப பொறப்படலாங்களா?''

''போறதுக்குள்ளே விஸிட்டிங் ஹவர் முடிஞ்சுட்டிருக்கும். இங்கே சப் ஜெயில்லே எடம் இல்லேன்னு தொரப்பாடிக்கு அனுப்பிச்சுட்டாங்களாமே.''

''அப்ப நாளைக்குக் காலையிலே வரட்டுமா சார்?''

''ஓ. எஸ். பத்து மணிக்கு ஆபீஸுக்கு வந்துடுங்க. ஆதியைச் சந்திச்ச பிறகு பெய்ல் வாங்கறதை முடிவு செய்வோம்.''

அவன் அவரிடம் விடை பெற்றுக் கொண்டு விட்டலாபுரம் வந்தான். நேரே வீட்டுக்குப் போனான்.

வாசல் முற்றத்தில் பாத்திரம் தேய்த்துக் கொண்டிருந்த சௌந்தரம்மாள் திரும்பி அவனைப் பார்த்துவிட்டு வேலையில் ஈடுபட்டாள். எப்போதும் இப்படி நடப்பதில்லை. அவன் எங்காவது வெளியே போய் வீடு வந்தால் ஒரு வாஞ்சையான முகமலர்ச்சியோ, உரிமைக் கோபம் கலந்த

''உங்க விட்டுக்கு வர்ற விருந்தாளிங்க மட்டும் உடனே கிளம்பிடறாங்களே, எப்படி?''

''யார் வந்தாலும், அவங்களையே அனுப்பி, 'எதிர் விட்டுல காப்பிப் பொடி வாங்கிட்டு வா, அடுத்த விட்டுல ஜீனி வாங்கிட்டு வா'ன்னு அனுப்பிடுவேன்!''

— வி. ரேவதி.

ஒரு கிண்டல் வார்த்தையோ தான் அவனை வரவேற்கும். என்னவோ நடந்திருக்கிறது.

அவன் கால் அலம்பிக் கொண்டு மூலையிலிருந்த ஒரு ஸ்டூலை எடுத்து வாசலுக்கு மேலே தாழ்வாரத்தில் சௌந்தரம்மாள் முகம் பார்க்க நேருக்கு நேர் போட்டுக் கொண்டு உட்கார்ந்தான்.

அவள் மீண்டும் ஒரு முறை அவனை நிமிர்ந்து பார்த்துவிட்டு, பற்றுப் பாத்திரத்தைத் தொடர்ந்தாள்.

''என்னமோ பெரியம்மாவுக்கு எம்மேலே ஒரு திடீர்க் கோபம்!''

''ஆமா என் கோபம் ஒன்னை என்ன செஞ்சிறப்போவுது?''

''இப்ப வயத்திலே புளியைக்கரைக்கிறதாலே தான் எதிரிலே வந்து உட்கார்ந்திருக்கேன்.''

அவன் சிரிக்காமல் சொன்னான். அவள் சிரித்து விட்டாள்.

''இதிலே ஒண்ணும் கொறச்சல் இல்லே. இப்படியேதான் அந்த கோபிநாத்தும் ஏதாவது சொல்லிச் சிரிக்க வச்சுடுவான். நீ அவன் சிநேகிதக்காரனாச்சே. பின்னே எப்படி இருப்பே?''

''வேற எதிலேயோ கொறைச்சல்னு சொல்றீங்க?''

''இதோ... இப்படியெல்லாம் எங்கிட்டே வம்பு பண்ணாதே! ஒன்னையும் கோபிநாத்தையும் திருத்த முடியாது. இன்னிக்கு நேத்தா பாக்கறேன். எட்டு வருசமாப் பார்க்கறேன்.''

''பாவம், கோபி தான் துபாய்ல இருக்கானே பெரியம்மா. எனக்காக அவனுக்கு ஏன் டோஸ் விடறீங்க?''

''ம்க்கும். துபாய்லே இருந்தா என்னா. பர்மாவிலே இருந்தா என்ன? பொறவிக் குணம் மாறப் போறதில்லே. ஒன்னையும் சேர்த்துச் சொல்றேன்.''

''அது என்ன, பிறவிக் குணம் பெரியம்மா?''

''ஊர் வம்பு.''

கண் தாழ அவள் முகம் முறுமுறுத்தது.

''எதைச் சொல்றீங்க பெரியம்மா?''

''ஒனக்கேன் ஊர் வம்பு? நாலு பம்பு ஷெட் ரிப்பேர் பார்த்தியா. பொழுதோட வீட்டுக்கு வந்தியா, போனியான்னு இல்லாமே இந்த நாட்டாமை நமக்கு எதுக்கு?''

ஆதிக்காகத் தான் பாடுபடுவது இவளுக்குப் பிடிக்கவில்லை.

''அந்தத் தொளசிங்கம் ரொம்பப் பொல்லாதவன்! சிரிச்சுச் சிரிச்சுப் பேசிக்கிட்டே கன்னக்கோல் வச்சுக் கழுத்தறுக்கிறவன். நீ எதுக்கு அவன்கிட்டே மோதணும்?''

''நானா...? அவன்கிட்டே மோதறேனா? என்ன பெரியம்மா சொல்றீங்க?''

''நான் சொல்லலேப்பா. இந்தத் தெருவே குபார் பண்ணுது.''

''என்னன்னு?''

''நீ நேத்து ராத்திரி அவனைப் பார்க்கப் போனியே. அப்போ அவன் என்னென்னவோ சொல்லி மெரட்டினானாம். நீ அலட்சியமாப் பேசிட்டு வந்துட்டியாமே?''

''அவன் மெரட்டினது வாஸ்தவம். ஆனா நான் அலட்சியமாப் பேசலே பெரியம்மா. நான் ஒங்ககிட்டே பொய் சொல்ல மாட்டேன். அது உங்களுக்கே தெரியும்.''

''பொய் சொல்ல மாட்டே. அது கரெக்ட். ஆனா, ஏதாவது உண்மை எனக்குத் தெரிய வேண்டாம்னு நெனைச்சா அதை மறைச்சுடுவே.''

சௌந்தரம்மாள் எந்த இலக்கிற்குக் குறி வைக்கிறாள் என்று புரியவில்லை.

''உங்ககிட்டே இதுவரைக்கும் நான் எதையும் மறைச்சதில்லே பெரியம்மா.''

''நெஜம்மாச் சொல்லு.'' சௌந்தரத்துக்குச் சத்தியம் என்ற சொல்லின் மீது அதிக மரியாதை. அவள் அதைப் பயன்படுத்தவே மாட்டாள்.

''நெஜம்மாச் சொல்றேன், பெரியம்மா.''

''ஊஹூம். நீ முழுக்க நெஜம் சொல்லலே!''

எதை இவளிடம் மறைத்திருக்கிறோம்? நேற்றுத் துளசிங்கம் மிரட்டியது? சர்க்கரை மில் இண்டர்வியூ? ஓ... நித்யா!

''நீ எதை எங்கிட்டே மறைக்கணும்னு நெனைச்சியோ அது எப்பவோ எனக்குத் தெரிஞ்சு போச்சு.''


பற்றுத் தேய்த்த பாத்திரங்களை நீர்விட்டு அலம்பிக் கொண்டே அவள் பேசினாள். அவனைப் பார்க்கவில்லை.

''நீ மரியாதைக்காக எங்கிட்டே சொல்லாம மறைச்சிருப்பே. அதுக்காக நான் பெருமைப்பட்டிருப்பேன். எல்லாம் நல்லபடியா முடியணும்னு சந்தோஷப்பட்டிருப்பேன். இப்ப நீ ஊர் வம்புலே தலையிட்டிருக்கிறது அதுக்கே குந்தகமாயிடும் போலே இருக்கே...?''

''புதிர் போடாம சொல்லுங்க பெரியம்மா!''

''சொல்றேன்... சொல்றேன்... சொல்லாமலேயா போயிடப் போறேன்?'' என்று எழுந்தாள் சௌந்தரம்மாள்.

(தொடரும்)



இடைத்தரகர்களின் பிடியில்

கல்யாண சீசனில் மண்டபங்களை அலங்கரிக்க ஹனுமந்தைய்யாவை அழைப்பார்கள். அவன் கைவிரல்கள் ஜாலம்புரிய, நிமிஷங்களில் மண்டபங்கள் கலைக் கோலம் பூண்டு விடும். ஹனுமந்தையா கர்நாடக மாநிலத்து ஹோராஹள்ளி கிராமத்தைச் சேர்ந்தவன். மணிகளையும் சிறு சிறு பொம்மைகளையும் செய்து, சரம் சரமாய்க் கோத்து, தோரணங்கள் தயாரித்து வந்தான்.

பரம்ரை பரம்பரையாக மண் பாண்டங்கள் செய்து வரும் குடும்பத்தைச் சேர்ந்த தம்பதி, கங்கம்மா — மொப்புரப்பா. பெங்களூரில் உள்ள பூச்செடி விற்கும் நர்சரிகளுக்கெல்லாம் விதம் விதமான பூந்தொட்டிகள் செய்து கொடுத்து வருகின்றனர். மண்ணுக்குக் கலை வடிவம் தரும் மகத்தான திறமை அவர்களின் கரங்களுக்கு இருக்கிறது.

குஜராத் மாநிலத்தில் ஒரு சிறிய கிராமத்தைச் சேர்ந்தவர் விமலா பென். ஊசியும் வண்ண நூலும் கொண்டு, பாவாடை சட்டை முதல் படுக்கை விரிப்பு — தலையணை உறை வரை பலப்பல துணி வகைகளில் எம்ப்ராய்டரி கவிதைகளை வடிப்பவர்.

டெல்லியைச் சேர்ந்த கிஷோரி லால் மற்றொரு மண்பாண்டக் கலைஞர். நுணுக்கமான வேலைப்பாடுகளுடன் கூடிய மண் பானைகளைப் பலவகை வ்டிவங்களில் செய்பவர்.

இவ்வாறு இந்தியாவின் பல்வேறு மூலை முடுக்குகளிலும் அமைதியாகக் கலை செழிக்கச் செய்து கொண்டிருக்கும் கலைஞர்களைத் தேடிப் பிடித்து, அவர்களுடைய கை வண்ணத்தால் மிளிரும் கண்காட்சி ஒன்றைச் சென்னையில் ஏற்பாடு செய்திருந்தார்கள் 'தஸ்தகார்' என்ற அமைப்பினர். ''தஸ்தகார் என்றாலே கைவினைக் கலைஞர் என்றுதான் பொருள்'' என்று விளக்கினார் இதன் அமைப்பாளர்களுள் ஒருவரான கவிதா அகர்வால். (ஆம்! குவிஸ் டைம் புகழ் கவிதாவேதான்.)

எதற்கு இந்தக் கண்காட்சி? தஸ்தகாரின் நோக்கம் என்ன? மற்றொரு அமைப்பாளர் நீடா விளக்கினார்:

''கலைஞர்களிடம் அடிமட்ட விலைக்குக் கைவினைப் பொருட்களை வாங்கிப் பல மடங்கு லாபத்துக்கு விற்கிறார்கள் இடைத் தரகர்கள். அப்பாவிகளான நம் நாட்டுக் கலைஞர்களுக்குத் தங்கள் கை வண்ணத்தின் அருமையும் தெரிவதில்லை; இடைத் தரகர்கள் கை ஓங்குவதும் புரிவதில்லை. இப்படியே போனால் வறுமை காரணமாகப் பல கலைஞர்கள் தங்கள் பரம்பரைத் தொழிலைக் கவனிக்காமல் நசிந்து போகச் செய்து விடுவார்கள். எனவேதான் இடைத் தரகர்களை அப்புறப்படுத்தும் முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளோம்.

''ஆனால் இந்தப் பணி ஒன்றும் சுலபமானதாக இல்லை. பல இடங்களில் இடைத் தரகர்களின் ஆக்கிரமிப்பு உடும்புப் பிடியாக இருக்கிறது. தங்கள் வியாபாரத்துக்குக் குந்தகமாக வரும் எவரையும் பயமுறுத்தவோ, ஒரேயடியாக ஒழித்துக் கட்டவோ கூட இவர்கள் தயங்க மாட்டார்கள். எனவே



* கிஷோரி லால்



* ஹனுமந்து

ஏழைக் கலைஞர்கள்!

நாங்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் செயல் பட வேண்டும்.''

இடைத் தரகர்கள் இப்படியென்றால் சில கலைஞர்களின் மனப்போக்கு நம்மைச் சோர்வடையச் செய்கிறது! 'எங்கள் விதி இதுதான்! அனுபவிக்கிறோம்!' என்று விரக்தியுடன் காலத்தை ஓட்ட மனத்தைத் தேற்றிக் கொண்டு விடுவார்கள்! முன்னேற வழி காட்டினாலும் ஏற்க மாட்டார்கள். இதற்கு அறியாமை மட்டுமின்றி பயமும் ஒரு காரணம்.

''ராஜஸ்தானில் பார்மிர் என்று ஓரிடம். தண்ணீர் கூட இல்லாத பொட்டல் காடு! அங்கு சில கலைஞர்களுக்கு உதவலாம் என்று கஷ்டப்பட்டுப் பாலைவனத்தைக் கடந்து போனால், எங்களைப் பற்றிய வேண்டாத வதந்திகள் எங்களுக்கு முன்ன தாகவே அங்கு போய்ச் சேர்ந்திருந்தன! இடைத்தரகர்கள் கட்டி விட்ட கதைகளை நம்பி, எங்களைச் சந்தேகக் கண்களுட னேயே பார்த்தார்கள் அந்தக் கலைஞர்கள்'' என்று ஆதங்கத்துடன் கூறினார்கள் தஸ்த கார் அமைப்பாளர்களான கவிதாவும் நீடா வும்.

தஸ்தகார் அமைப்பு ஆதிவாசிகளுக் கும் அவர்களின் கலைச் செல்வங்களுக்கு நல்ல விலை பெற்றுத் தர உதவுகிறது. கண் காட்சியில் பெங்களூரிலுள்ள மிருச்சகடிகா என்ற அமைப்பும் பங்கேற்றது. இவை போன்ற அமைப்புக்களின் பணி மிகக் கடினமானது என்பது கண்காட்சியைச் சுற்றி வந்து சில கலைஞர்களிடம் பேச்சு கொடுத்த போது புரிந்தது:



விமலா பென்

கிஷோரி லால் டெல்லியிலிருந்து எண்ப



• கவிதா அகர்வால்



• நீடா

தாயிரம் ரூபாய் மதிப்புள்ள சரக்குடன் புறப்பட்டாராம். மூன்றில் ஒரு பங்கு மண் பானைகள் பிரயாணத்தின்போதே உடைந்து விட்டனவாம்! கண்காட்சியில் விற்றது போக மிஞ்சும் பானைகளை உள்ளூர் ஷோ ரூம்களில் வைத்து விட்டுப் போவாராம். அவை எப்போது விற்பனையாகிறதோ அப்போதுதான் பணம் வந்து சேரும்!

விமலா பென்னின் பேச்சில் சரளமான ஆங்கிலக் கலப்பு:

''முதன் முதலில் எம்பிராய்டரி பயிற்சி வகுப்புக்குப் போவதற்குள் நான் பட்ட பாடு! 'அதெப்படி! வீட்டு மருமகள் படி தாண்டிப் போகலாமா?! குடும்ப கௌரவம் என்னாவது?' என்று தலைக்குத் தலை எதிர்ப்புத் தெரிவித்தார்கள். ஆனால் என் கை வேலைக்கு நல்ல வரும்படி வர ஆரம்பித் ததும் முட்டுக் கட்டையெல்லாம் மகிழ்ச்சி யாக மாறி விட்டது!'' என்றார்.

கைவினைஞர்களிடையே கூச்ச சுபாவ மும் தாழ்வு மனப்பான்மையும் படிப்படி யாக மாறி, தன்னம்பிக்கையும், 'தங்கள் கலை உன்னதமானது' என்ற பெருமிதமும் உண்டாக உழைப்பவர் அனைவரும், வறு மைத் துயர் துடைப்பதுடன், கலை மகளுக் கும் சேவை செய்கிறார்கள்.

— நிர்மலா சக்கரவர்த்தி

புகைப்படங்கள்: ஸ்ரீஹரி

வெவ்வேறு சிலுவைகள்

கிருஷ்ணகுருவின் கடையில் சந்தோஷமாக ஏதாவது ஒரு முகம் தென்படுகிறதென்றால் அது கிருஷ்ணகுருவுடையதுதான். வருகிறவர்களை வா வா என்று முகம் மலர வரவேற்பார். பார்க்கிறவர்களுக்கு எரிச்சலாக இருக்கும். துயரத்துடன் வருபவர்களை இப்படி வா வா என்றழைக்கிறாரே என்றிருக்கும். அழைத்தவாறே சிரிப்பார். அவர் நெற்றியின் விபூதியும், குங்குமமும் முகத்தோடு சேர்ந்து சிரிக்கிற மாதிரி இருக்கும். வெற்றிலையும், புகையிலையும் தொடர்ந்து போடுகிற காரணத்தால் வாயும், உதடுகளும் காவியேறியிருக்கும்.

யார் வந்தாலும் கடனா, அடகா என்று சட்டெனக் கேட்டு விட மாட்டார். 'என்ன ஊர்லே விவசாயம், வெள்ளாமை எப்படி' என்றுதான் ஆரம்பிப்பார். வருகிறவர்கள் பக்கத்து கிராமங்களைச் சேர்ந்தவர்களாகவோ, உள்ளூர்க்காரர்களாகவோ இருந்தால் அவர்களின் பூர்வீகத்தைச் சரியாகத் தெரிந்து வைத்துக் கொண்டு உறவு கொண்டாடுவார். குடும்பச் சூழ்நிலை பற்றிப் பேச ஆரம்பித்து, வருகிறவர்கள் கஷ்டங்களைச் சொல்லி அழுகிற நிலைக்குத் தள்ளி விடுவார். ''பிறகு, எதுக்காக அழணும்... நானெல்லாம் இல்லியா... ஆம்பிளை இப்படி அழலாமா...'' என்பார். அவரின் வார்த்தைகளில் வசிகரமும், சமாதானமும் இருக்கும். ''பணத்தை எடுத்துக் கொடுத்து விட்டு, இதுவும் பத்தலைன்னா நாளைக்கே ஒரு வார்த்தை சொல்லி விடு. நானே வந்து தர்றேன். நம்மாளுக கஷ்டப்படறதை நான் கண்ணாலே பார்க்கறது பாவம்..'' என்பார். அவர் வாங்கும் வட்டி அதிகமாய் இருப்பதை இந்த வசிகரப் பேச்சிலிருந்து மீண்டு, துக்கம் மறந்து வெளியேறிய பிறகே உணர முடியும்.

அவர் வீடு முழுக்க வெள்ளி, செம்பு பாத்திரங்களும், சிறு சிறு விலை உயர்ந்த பொருட்களும், புரோ நோட்டுகளும் அவரைப் பிரதிபலிப்பது போல நிறைந்திருக்கும்.

அவர் பக்கத்து நகரத்தில் ஒரு பணக்காரருக்கு எடுபிடியாக வேலை பார்த்து வந்ததாகவும், அவர் சாகிறபோது அவர் கொடுத்த கணிசமான பணமே இத் தொழிலுக்கு மூலதனமானதென்றும் சிலர் சொல்வார்கள். கூலி வேலை செய்து வந்தவர், மெல்ல முன்னேறியதாகவும் சொல்வார்கள் சிலர். யாராவது மாத வட்டி தர முடியாமல் அவர் முன் குறுகி நிற்கையில், ''நானுந்தான் உன்ன மாதிரி ஒருவேளை சோறோட கஷ்டப்பட்டிருக்கேன்'' என்று அவர் பலமுறை சொல்வதை வைத்துக் கொண்டு அவர் முன்பு கூலிக்காரராக இருந்தவர் என்று மதிப்பிட்டனர் சிலர்.

செல்லம்மா எட்டி எட்டிப் பார்த்தாலும் கிருஷ்ணகுருவின் கடை முன் இருந்த ஆட்கள் குறையக் காணோம். சலித்துக் கொண்டாள். பஸ் ஸ்டாப் கல் பெஞ்சில் உட்கார்ந்தாள். அவள் கழுத்தில் தாலியைத் தவிர வேறு நிஜ நகை எதுவும் இல்லை. ஐம்பது வயதில் தாலி மிஞ்சினதே பெரிய விஷயம் என்று ஆறுதல்படுவாள். காதில் இப்போது கழற்றின தடயம் தெரிகிறதா என்று கொஞ்சம் பயமாக இருந்தது. மடியைத் தொட்டுப் பார்த்தாள். காதுப் பாம்படங்கள் இருந்தன.

இவற்றை அடமானம் வைத்தால் பெரிதாய்த் தேறாது. விற்று விடுவது என்ற முடிவுடன்தான் அவள் வந்திருந்தாள். இங்கு வருவது சமீபமாய் அதிகமாகி விட்டது என்பதை உணர்கிற ஒவ்வொரு முறையும் அவள் அழுதிருக்கிறாள்.

இரண்டு மகன்களும் தனிக் குடித்தனங்கள் போன பின் அவர்கள் அப்பா, அம்மாவுக்குக் கொடுப்பதாய்ச் சொன்ன பணத்தை மாதா மாதம் கொடுக்காத போது செல்லம்மா மகன்களுடன் சண்டையிட்டும் பார்த்தாள். பாதியாய்த் தந்தார்கள். பின்பு அதுவும் நின்றது. அழுது சலித்தாள் செல்லம்மா. பின் நாலைந்து முறை வீட்டுச் சாமான்களை அடகு வைக்கக் கிருஷ்ணகுருவிடம் வந்தாயிற்று. நானூறு மைல்களுக்கு அப்பால் நகரத்தில் மகளும், மருமகனும் இருந்தார்கள். மருமகன் பட்டணத்துக்காரர். நல்ல வேலையில் இருப்பவர் என்பதால் அவரிடம் போய்ச் சொன்னால் வந்து நியாயம் கேட்க மாட்டாரா? பட்டணம் போவதற்கான செலவு குறித்து யோசித்துப் பயணத்தைத் தள்ளி வைத்தவள் கடைசியில் காதுப் பாம்படத்தை விற்றுப் பட்டணம் போவது என்று முடிவெடுத்தாள்.

பாம்படத்தை அவள் கழற்றுகையில் அவளின் கிழட்டுக் கணவன் அழுது விட்டான்: ''இந்த பாவமெல்லாம் அந்த ரெண்டு பேரையும் சும்மா விட்டுடுமா?''

''பெத்ததுகளைச் சபிக்காதீங்க. நாம

நாளைக்கு மண்ணு திங்கப் போறவங்க...'' என்று அவரை அடக்கி விட்டுக் கிளம்பி வந்திருந்தாள். கிருஷ்ணகுரு கடையில் கூட்டம் குறையப் பார்த்து, எழுந்து அருகே போனாள்.

செல்லம்மாவைப் பார்த்ததும் கிருஷ்ணகுரு வரவேற்கத் தயாரானர்.

''என்ன செல்லம்மா... கல்லு பெஞ்சில ரொம்ப நேரமா உட்கார்ந்திருந்தது தெரிஞ்சுது... பஸ்ஸுக்குக் காத்திருக்கியோன்னு நினைச்சேன்...''

கடை கதவின் ஓரத்தில் உட்கார்ந்து கொண்டாள் செல்லம்மா. கிருஷ்ணகுரு தன் காதுகளையே பார்த்துக் கொண்டிருப்பதாய்ப் பட்டது. தலையைப் பிரித்துக் கட்டுகிற தோரணையில் கூந்தலை அவிழ்த்துக் காதுகள் தெரியாதபடி தளர்த்திக் கொண்டாள். ஆனாலும் காதுகள் துருத்திக் கொண்டு நிற்பதாய்த் தோன்றியது.

''என்ன மகன்கள் கவனிச்சுக்கறாங்க இல்லியா...?''

''மகன்கள் கவனிச்சா நான் எதுக்கு இங்கே வர்றேனுங்க..?''

''என்னாச்சு?''

''வயதான காலத்திலே விஷம் வெச்சுக் கொல்ல ஆளில்ல!''


''என்ன வேதனையா பேசறே...!''

''வேதனைதான்...''

அழ ஆரம்பித்தாள். அழுது தீர்த்தவள் போல் அமைதியானாள். பாம்பட கம்மல்களை எடுத்து, சரிவு மேஜையில் வைத்தாள். ''விக்க வந்தேன்... எவ்வளவுக்குப் போகுமுங்க...''

கிருஷ்ணகுரு கையில் பரபரவென எடுத்தார். சிவப்பு கற்கள் பதித்த பாம்படக் கம்மல்கள். ரொம்ப லட்சணமாகச் செய்யப்பட்டிருந்தன.

அவர் உடல் சட்டெனப் பரபரத்த மாதிரி பட்டது செல்லம்மாவிற்கு. திரும்பத் திரும்பப் பாம்படத்தைப் பார்த்தார். சட்டை



சுப்ரபாரதி மணியன்

போடாத 'அவர் உடம்பு வியர்த்தது. முகத்தைக் கைகளால் பொத்திக் கொண்டார். வேர்வை பட்டுக் குங்குமம் கரைந்தது. முகத்தில் அது பரவி விகாரமாக்கியது. கிருஷ்ண குரு தம் முகத்தைத் திடீரென்று கண்ணாடியில் பார்த்துத் திடுக்கிட்டுப் போனவர் போல் பாம்படத்தை மேஜை மேல் வைத்து விட்டு எழுந்தார். விறுவிறுவென வீட்டின் உள்ளே நடக்கத் தொடங்கினார்.

''என்னங்க நான் பணம் கேட்டேனுங்களே. ஒண்ணும் சொல்லாமல் போறீங்களே...'' — என்று அழைத்த செல்லம்மாவிற்கு அழுகை வரும் போலிருந்தது. வேண்டாம் என்று மறுக்கிறாரோ? மறுப்பவர் என்றால் சொல்லி விடுவாரே. இல்லை இது போலியா? முப்பது வருடங்களுக்கு முன் வாங்கியது எப்படி போலியாகும்? இன்னும் கறுக்காமல் மினுங்கிக் கொண்டிருந்த தங்கம் தானே. அவற்றை அவள் கைகளில் எடுத்துக் கொண்டாள். எதற்கும் கூப்பிட்டுக் கேட்டு விடலாமே. ''என்னங்க... ஏன்னங்க...''

கொல்லைப்புற மரத்தடியில் இருந்த பெரிய கல்லொன்றின் மேல் உட்கார்ந்து கொண்டார் கிருஷ்ணகுரு. பாம்படம் மறுபடியும் மறுபடியும் மனத்தில் வந்து போயிற்று.

முப்பது வருஷம் முன்... கிருஷ்ணகுரு இப்படித்தான் ஒரு ஜதை பாம்படக் கம்மல்களுடன் ஒரு மார்வாடிக் கடை முன் நின்றிருந்தார். அவை அவர் அம்மாவின் கம்மல்கள். அந்த நகரத்தின் அரசாங்க ஆஸ்பத்திரியின் ஒரு மூலையில் அப்பாவின் சடலம் இருந்தது. நூறு மைல்கள் தாண்டி, அவரின் கிராமத்திற்குச் சடலத்தைக் கொண்டு போக வண்டி தேவைப்பட்டது. சடலத்தைக் கொண்டு போக யாரும் முன் வரவில்லை. காலில் விழாத குறையாய் அழுத பிறகு, கடைசியில் ஒப்புக் கொண்ட ஒரு வண்டிக்காரன் இரு மடங்காய்ப் பணம் கேட்டான். கைவசம் அவ்வளவு பணமில்லை. அம்மா, தனது காது பாம்படத்தைக் கழற்றிக் கொடுத்தாள்.

மார்வாடி, கிருஷ்ணகுரு பாம்படத்தைத் திருடி வந்திருப்பதாய்ச் சொன்னான். சிரித்துக் கொண்டே, ''என்ன கொலையா.. இல்லே வெறும் திருட்டுத்தானா?'' என்றான். கிருஷ்ணகுருவின் அழுகை அவனின் அடுத்த கேள்வியைத் தடுத்தது. பாம்படங்களைப் பெற்றுக் கொண்டு பணத்தைக் கொடுத்தான். தன் வாழ்க்கையின் உச்சமான துயரம் அதுதான் என்று தோன்றியது கிருஷ்ணகுருவுக்கு. சாவு கூட கௌரவிக்கப்பட்டதாக இருக்க வேண்டும் என்று பட்டது.

''என்னங்க... என்னங்க..''

செல்லம்மாவின் பாம்படங்கள் ஊறி விட்ட நினைவுகளில் தோய்ந்து போயிருந்த கிருஷ்ணகுரு. இது செல்லம்மாவின் குரல் இல்லை என்பதை உணர்ந்தார்.

மனைவியின் குரல்தான்.

''யாரோ ஒரு பொம்பளையைக் கடை வாசல்லே உட்கார வெச்சுட்டு நீங்க வந்திட்டீங்க. அவ வேற சப்தம் போட்டுட்டிருக்கா. பகல்லே நிம்மதியா தூக்கம் போட முடியலே'' என்றாள் அவர் மனைவி.

செல்லம்மாவோ என்ன செய்வது என்று விளங்காமல் தவித்தாள். இனி யாரிடம் போவது? இன்னொரு இடத்தில் தன் அந்தரங்கம் விலை போகுமே என்றிருந்தது. சாவை எதிர்கொள்வது இதற்கெல்லாம் மேல் என்ற நினைப்பு வந்தது. சுதாரித்துக் கொண்டாள்.

கிருஷ்ணகுருவும் செல்லம்மாவும் வெவ்வேறு துருவங்களாய் இருந்தாலும், அந்தக் கணத்தில் வேதனை என்கிற குரலின் ஒரே அலைவரிசையில் இருந்தார்கள். கிருஷ்ணகுரு நீண்ட நாட்களுக்கப்புறம் வியாபாரம் மறந்து ஒரு மனித வேதனைக் குரலாய்ச் செல்லம்மாவின் அழுகையை உணர்ந்தார்.

டெப்பாசிட் இழந்த எம்.எல்.ஏ!

பீகார் மாநிலம் பர்விஷ்கஞ்ச் சட்டசபைத் தொகுதியில் ஜனதா கட்சி சார்பில் போட்டியிட்டவர் மயானந்த் தாகூர். இவரது தொகுதியில் 95,350 வோட்டுகள் உள்ளன. தாகூர் 15,777 வோட்டுகள் வாங்கி வெற்றி பெற்றார். ஆனால் தேர்தல் சட்டப்படி ஒரு தொகுதியில் பதிவான வோட்டுகளில் ஆறில் ஒரு பங்கு வோட்டுக்களைப் பெறாதவர்கள் டெபாசிட் இழந்துவிடுவார்கள். அதன்படி தாகூர் தேர்தலில் வெற்றி பெற்றாலும் தேர்தல் விதிப்படி டெபாசிட்டையும் இழந்தவர் ஆகிறார். இருப்பினும் வெற்றி பெற்றுள்ளதால் ஒரு விசேஷச் சலுகையாக டெபாசிட் தொகையைத் தேர்தல் கமிஷன் அவருக்குத் திரும்பக் கொடுத்து விட்டது.

— எஸ். எஸ். மணி.



அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி - 1990



முதல் பரிசு	ரூ.	1500
இரண்டாவது பரிசு	ரூ.	750
மூன்றாவது பரிசு (இரு கதைகளுக்குத் தலா ரூ. 375 வீதம்	ரூ	750

ஆக மொத்தம் ரூ. 3000 பரிசுகளாக வழங்கப் பெறும்.

தவிர பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு கதையும் ரூ. 125 சன்மானம் பெறும். அறிமுக எழுத்தாளர்களுக்குப் போனஸ் உண்டு.

- கதைகள் சொந்தக் கற்பனை என்றும், இதற்குமுன் எந்தப் பத்திரிகையிலும் பிரசுரமானதில்லை என்றும் உறுதிமொழி தேவை.
- அறிமுக எழுத்தாளர் எனில் இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லை என்றும் போட்டி முடிவு அறிவிக்கப்படும் வரை எழுத மாட்டேன் எனவும் உறுதிமொழி தர வேண்டும்.
- நடுவர் குழு கதைகளைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும்.

கதைகளை அனுப்ப வேண்டிய கடைசித் தேதி: ஜூன் 15.

- உறையின் மேல் 'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி' என்று குறிப்பிடுதல் அவசியம்.
- பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெறப் போதிய அளவு தபால்தலை ஒட்டிய சுய விலாசமிட்ட உறையைக் கதையுடன் கூடவே அனுப்புதல் வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.
- கதைகள் கல்கியில் நாலு பக்கங்களுக்கு மேற்படாதிருப்பது நலம். ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.
- சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.
- போட்டி முடிவும் முதல் பரிசுக் கதையும் கல்கி ஆகஸ்டு 5 ஆண்டு மலரில் பிரசுரமாகும்.
- எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

ஆசிரியர், கல்கி, சென்னை — 600 032.



ஆயத்தமாகிவிட்டார் ஆனந்தமான நேரத்தை அனுபவித்திட.

அலுவலகத்தில் ஓயாத உழைப்பு, பதற்றம். ஆனால் இப்போதோ அது ஓடி ஒளிந்து விட்டது. குழந்தைகளோடு குழந்தையாய் அளவற்ற சக்தியுடன் விளையாடுகிறார்.

ஊட்டச் சத்துமிக்க ஒரு கோப்பை ஹார்லிக்ஸ் கொடுத்து நாள் முழுவதும் அவருக்கு வேண்டிய வலிமையும் ஆற்றலும் அளிக்கும் உங்களுக்கே நன்றி.



"ஹார்லிக்ஸில், வலிமைக்கும், ஆற்றலுக்கும், நல்ல உடல் ஆரோக்கியத்துக்கும் தேவையான- புரோட்டீன்ஸ், விட்டமின்ஸ், மினரல்ஸ், கார்போஹைட்ரேட்ஸ் —ஆகிய முக்கிய ஊட்டச்சத்துக்கள் அடங்கியுள்ளன.

அதுவே, நாள் முழுவதும் ஆரோக்கியம் தரும் ஹார்லிக்ஸின் மேன்மை."



சிறந்த ஊட்டச்சத்துமிக்க பானம்

HTA 6224TAM



அத்தியாயம் 74

"நானே முடிசூடுவேன்!"

வந்தியத்தேவன் கடைசியாகக் கூறினான்: "இளவரசே! ஒரே ஒரு மனிதர் மனது வைத்தால் உண்மையில் என்ன நடந்தது என்பதைச் சொல்லி என்னைக் குற்றமற்றவன் ஆக்கலாம். அந்த ஒருவர் பெரிய பழுவேட்டரையர்தான். கடம்பூர் மாளிகையில் யாழ்க் களஞ்சியத்தில் ஒளிந்திருந்த என்னைத் திடீரென்று கழுத்தைப் பிடித்து இறுக்கிக் கீழே தள்ளி மூர்ச்சை அடைந்து விழச் செய்தவர் அந்த வீரப் பெருமகனாராகவே இருக்க வேண்டும் என்று ஊகிக்கிறேன். வேறு யாரும் அங்கு அச்சமயம் வந்திருக்க முடியாது. நந்தினிதேவி பேரில் சந்தேகங் கொண்ட அந்தக் கிழவர்தான் அவ்வாறு காளாமுகச் சைவராக உருக்கொண்டு மறைவிடத்திலிருந்து அங்கு என்ன நடக்கிறது என்று பார்ப்பதற்காக வந்திருக்க வேண்டும். காளாமுகச் சைவக் கூட்டத்தைச் சேர்ந்த இடும்பன்காரி அவருக்கு இரகசிய வழியில் வருவதற்கு உதவி செய்திருப்பான். ஆனால் அந்த மாபெரும் வீரருக்கு என்னை முதல் முதல் பார்த்தபோதே என் மீது வெறுப்பு உண்டாகி விட்டது. அந்த வெறுப்பு பிறகு நாளுக்கு நாள் அதிகமாகியே வந்தது. அவர் என் உயிரைக் காப்பாற்றுவதற்காக முன் வந்து அங்கு உண்மையில் நடந்ததைச் சொல்லப் போவதில்லை. நான் இந்தப் பயங்கரமான பழி பூண்டு இறந்தால் அவருக்கு ஒரு வேளை சந்தோஷமாகவே இருக்கும். ஆகையால், இளவரசே! எனக்குத் தப்பிச் செல்வதற்கு அனுமதி கொடுங்கள்! முடிந்தால், நான் ஈழநாடு சென்று அங்கே பாண்டிய குலத்து மணிமுடியையும் இரத்தின ஹாரத்தையும் தேடிக் கண்டுபிடிப்பேன். அல்லது இங்கேயே உங்கள் கை வாளால் என்னைக் கொன்று விடுங்கள்! என்னிடம் அளவிலாத அன்பு வைத்திருந்த தங்கள் தமையனாரைக் கொன்ற பழியைச் சுமந்து நாற்சந்தியில் கழுவில் ஏற்றப்படும் கதிக்கு என்னை ஆளாக்காதீர்கள்! அதைக் காட்டிலும் தங்கள் கை வாளினால் இறப்பது எனக்கு எவ்வளவோ ஆறுதலை அளிக்கும்! அல்லது இந்தக் கொடும்பாளூர்க் கோமகளின் கையினால் நஞ்சுண்டு இறந்தாலும் பாதகமில்லை. இவரும் தங்கள் திருத் தமக்கையுமே இந்த அநாதையின் பேரில் கருணை கொண்டு யமலோகத்தின் வாசற்படி வரைக்கும் சென்றிருந்தவனைத் திரும்பவும் இவ்வுலகத்துக்குக் கொண்டு வந்து சேர்த்திருக்கிறார்கள். இதற்காக இவர்களுக்கு நான் நன்றி செலுத்தப் போவதில்லை!"

இவ்வாறு வந்தியத்தேவன் கூறிய போது வானதி இளவரசரை நோக்கி, "கேளுங்கள், ஐயா! நீங்களே கேளுங்கள்! இந்தச் சுத்த வீரருக்குப் போர்க்களத்தில் எதிரிகளுக்கு முன்னால் நின்று போரிட்டு வீர சொர்க்கம் அடையும் விருப்பம் இல்லையாம்! பெண்களின் கையினால் விஷம் அருந்திச் சாவதற்

அமரர் கல்கி

குத் தவங்கிடக்கிறாராம்!'' என்றாள்.

''இளவரசே! இவரும் தங்கள் திருத் தமக்கையும் என் மீது சொல்லும் நிந்தை மொழியினாலேயே என்னைக் கொன்று விடுவார்கள் போலிருக்கிறது. அதைவிட இவர்கள் கையினால் நஞ்சு அருந்தி இறப்பது விசேஷம் அல்லவா?'' என்றான் வாணர்குல வீரன் வந்தியத்தேவன்.

அருள்மொழிவர்மர் இந்தப் பேச்சுக்களையெல்லாம் பாதி கவனத்துடனேதான் கேட்டுக் கொண்டிருந்தார். அவருடைய மனத்திற்குள் வேறு எதைப் பற்றியோ தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருந்ததாகத் தோன்றியது.

சட்டென்று ஒரு குதி குதித்து எழுந்து நின்று, ''ஆகா! நான் முடிவு செய்து விட்டேன். நானே சோழ நாட்டின் சக்கரவர்த்தியாக முடிசூட்டிக் கொள்வேன். நாடு நகரமெல்லாம் மக்கள் 'அருள்மொழிவர்மனே திருமுடி சூட வேண்டும்!' என்று கோஷம் செய்கிறார்கள். போர் வீரர்களின் விருப்பமும் அதுவே! அவர்கள் எல்லாருடைய விருப்பத்தையும் நிறைவேற்றுவேன். எதற்காகத் தெரியுமா? உன்னைக் குற்றம் அற்றவன் என்று விடுதலை செய்வதற்காகத்தான். அதனால் எனக்கு ஏதேனும் அபகீர்த்தி வருவதாக இருந்தால் வரட்டும்! அது என்னைப் பாதியாது! என் பேரில் விரோதப் பான்மை கொண்ட சிற்றரசர்கள் சிலர் ஒருவேளை அந்த அபகீர்த்தியைப் பரப்புவதற்கு முயலலாம். ஆனால் மக்கள் அதை நம்ப மாட்டார்கள். சிற்றரசர்கள் என் பேரில் குற்றம் சுமத்தத் துணிந்தால், அது அவர்கள் பேரிலேயே திரும்பிப் போய்ச் சேரும்! கடம்பூர் மாளிகைக்குச் சிற்றரசர்கள் விருந்துக்கு அழைத்து அவரைக் கொன்று விட்டார்கள் என்று என்னால் திருப்பிச் சொல்ல முடியும். அத்தகைய நம்பிக்கைத் துரோகத்துக்காகவும் இராஜ குலத் துரோகத்துக்காகவும் அவர்கள் எல்லாரையும் தண்டிக்கவும் என்னால் முடியும். எது எப்படியானாலும் நானே முடிசூட்டிக் கொள்ளப் போகிறேன். என் தந்தை தமக்கை இவர்களின் விருப்பத்துக்கு விரோதமாக நடந்தாலும் நடப்பேன். ஆனால் உனக்கு எந்தவிதத் தீங்கும் நேருவதை என்னால் பார்த்துக்கொண்டு பொறுத்திருக்க முடியாது!'' என்றார்.

வானதி ஒரே குதூகலத்துடன், ''தங்களுடைய இந்த வார்த்தைகளைக் கேட்பதற்கு இளையபிராட்டி இங்கே இல்லாமற் போனாரே! அவர் முன்னிலையிலும் ஒரு தடவை இந்த வார்த்தைகளைச் சொல்லுங்கள்!'' என்றாள்.

''ஒரு தடவை என்ன? பல தடவை சொல்லுகிறேன்! காரியத்திலும் இதைச் செய்து காட்டுகிறேன்!'' என்றார் பொன்னியின் செல்வர்.

வந்தியத்தேவன் தன் கண்களில் துளித்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, ''ஐயா! ஏழையும் அநாதையுமான என் காரணமாகத் தாங்கள் தங்களுடைய மன உறுதியை மாற்றிக் கொண்டு முடிசூடுவதற்கு முன்வந்தால், அது சோழ நாடு செய்த பாக்கியமாகும். உண்மையைச் சொல்வதாக இருந்தால், மதுராந்தகத் தேவர் நான் அறிந்த வரையில் அவர் முடிசூடச் சிறிதும் தகுதியில்லாதவர். பெண்களைப் போல் மூடு பல்லக்கிலே பிரயாணம் செய்து இராஜ்யத்துக்காகச் சதி முயற்சிகளில் ஈடுபடுகிறவர் ஒரு சாம்ராஜ்யத்தை ஆளத் தகுதியுடையவரா? விஜயாலய சோழரும், பராந்தக சோழரும் அலங்கரித்த சோழ சிங்காதனத்தில் இத்தகைய கோழைத்தனமே உருக் கொண்டவர் ஏறுவது நியாயமா? இதை இந்நாட்டு மக்கள் விரும்பாததில் வியப்பு ஒன்றுமில்லை!'' என்று குரல் தழதழக்கக் கூறினான்.

''இதை உணர்ந்துதான் மதுராந்தகத் தேவரே மாயமாய் மறைந்து விட்டார் போலிருக்கிறது!'' என்றாள் வானதி.

''ஆம், ஆம்! அவரைத் தேடிக் கண்டு பிடிக்கும் பிரயத்தனத்தை இனி விட்டு விடப் போகிறேன். நானே முடிசூட்டிக் கொள்ளப் போகிறேன்!'' என்றார் அருள்மொழிவர்மர்.

இதைக் கேட்டுக் கொண்டே அச்சமயம் அவ்வறையினுள் பிரவேசித்த குந்தவை, ''தம்பி! அந்த ஆசையை அடியோடு விட்டு விடு! உனக்குச் சிங்காதனமும் இல்லை; மணி மகுடமும் இல்லை. என் அருமைத் தோழி வானதி தஞ்சைச் சிங்காதனத்தில் ஏறுவதில்லை என்று சபதம் செய்திருப்பதை மறந்து விட்டாயா? அவள் இல்லாமல் வேறொரு பெண்ணை உன் அருகில் வைத்துக் கொண்டு நீ முடிசூட்டிக் கொள்வதை நான் ஒரு நாளும் என் கண்களால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது!'' என்றாள்.

''அக்கா! அந்தச் சமயத்திலே மட்டும் தாங்கள் தங்களுடைய கண்களை மூடிக் கொண்டால் போகிறது. நான் வேணுமானாலும் தங்கள் கண்களை அச்சமயம் பொத்தி உதவுகிறேன்!'' என்றாள் வானதி.

பொன்னியின் செல்வர் குந்தவையைப் பார்த்து, ''சகோதரி! தங்கள் தோழியின் சபதத்துக்காகச் சோழ ராஜ்யம் அரசன் இல்லாமலே நடக்க முடியுமா? நம் தந்தையோ இராஜ்ய பாரத்தை இறக்கி வைத்து


விட்டுக் காஞ்சிக்குப் போக வேண்டுமென்று பிடிவாதம் பிடிக்கிறார். மதுராந்தகத் தேவரோ மாயமாக மறைந்து விட்டார். வேறு வழிதான் என்ன? எப்படியும் நான் முடிசூட்டிக் கொள்ளாமல் தீராது போலிருக்கிறதே? இராஜ்ய உரிமை பற்றி நாடெங்கும் ஒரே கொந்தளிப்பாக இருப்பது தங்களுக்குத் தெரியாததல்லவே? இந்தக் கொந்தளிப்பை எத்தனை காலம் விட்டு வைக்க முடியும்?'' என்றார்.

''தம்பி! ஒரு சந்தோஷ சமாசாரம். அதைத் தெரிவிப்பதற்குத்தான் நான் விரைந்து ஓடி வந்தேன். மறைந்திருந்த மதுராந்தகத் தேவர் வெளிப்பட்டு விட்டார். சோழ குலத்து முன்னோர்கள் செய்த தவம் வீண் போகவில்லை! இராஜ்யம் என்ன ஆகுமோ என்று நீ கவலைப்பட வேண்டியதில்லை. அவர் வேண்டாம் என்று சொன்னாலும் நாம் பிடிவாதம் பிடித்து அவருக்கு மகுடாபிஷேகம் செய்து வைக்க வேண்டும்!'' என்றார் இளையபிராட்டி.

அவருடைய உற்சாகம் மற்ற மூவருக்கும் சிறிது வியப்பை அளித்தது. சில நாட்களாகவே குந்தவைப் பிராட்டி மதுராந்தகருக்கு முடிசூட்டுவதற்குச் சாதகமாயிருந்தது உண்மைதான். ஆனால் அதில் அவர் இவ்வளவு உற்சாகம் உடையவர் என்று இதுவரையில் காட்டிக் கொள்ளவில்லை.

பொன்னியின் செல்வர் அது சம்பந்தமான தம் வியப்பை அடக்கிக் கொண்டு, ''தேவி! அவர் எங்கே மறைந்திருந்தார்? எதற்காக? எப்படி வெளிப்பட்டார்?'' என்று கேட்டார்.

''நமக்கு அருகிலேயே அவர் இருந்து வந்தும் நம்மாலேதான் கண்டு கொள்ள முடியாமற் போயிற்று. தம்பி! செம்பியன் மாதேவியின் திருவயிற்றில் உதித்தவர்தான் சோழ சிங்காதனத்தில் ஏறத் தகுந்தவர். உன் சித்தப்பாவுக்குத்தான் இந்த ராஜ்யம் நியாயமாக உரியது. நீ மகுடம் புனையலாம் என்ற எண்ணத்தை அடியோடு விட்டு விடு! ஓர் அதிசயத்தைக் கேள், தம்பி! நாலு நாளைக்கு முன்னால் நம் சித்தப்பாவுக்கு ஒரு பெரிய கண்டம் வந்தது. கொலைகாரன் ஒருவன் அவர் மீது குத்தீட்டியை வீசி எறியக் குறி பார்த்தான். அதை அவன் எறிந்திருந்தால் மதுராந்தகத் தேவரின் உயிர் போயிருக்கும். சோழ குலத்தில் இன்னொரு அகால மரணம் ஏற்பட்டிருக்கும். அப்படி நேராமல் தடுத்த வீராதி வீரர் யார் தெரியுமா? தம் உயிரைக் கொடுக்கத் துணிந்து நம் சித்தப்பாவைக் காப்பாற்றியவர் யார் தெரியுமா?'' என்று கூறிக் கொண்டே இளையபிராட்டி



தமது விசாலமான கண்களை வந்தியத்தேவன் பேரில் திருப்பினார். அந்தக் கண்களில் ததும்பிய அன்பும் ஆர்வமும் நன்றியும் நன்மதிப்பும் ஆதரவும் அனுதாபமும் வந்தியத்தேவனது நெஞ்சின் அடிவாரம் வரையில் சென்று அவனைத் திக்கு முக்காடச் செய்தன.

பொன்னியின் செல்வரோ வியப்புக் கடலில் ஆழ்ந்தவராக ''இது என்ன அக்கா! எனக்குப் புரியவில்லையே? என் தோழனும் இது பற்றி எனக்குச் சொல்லவில்லையே?'' என்றார்.

''அவர் சொல்லியிருக்க மாட்டார். ஏனெனில் அவர் செய்த காரியத்தின் பெருமையை அவரே உணர்ந்திருக்க மாட்டார். சோழ குலம் அவருக்கு எவ்வளவு கடமைப்பட்டிருக்கிறது என்று அவருக்கே தெரியாது!''

''அக்கா! புதிர் போடுவது போல் பேசுகிறீர்களே! எல்லாம் ஒரே மர்மமாயிருக்கிறதே? எங்களை வீண் திகைப்புக்கு உள்ளாக்காமல் விளக்கமாகச் சொன்னால் நல்லது! இந்த வாணர்குல வீரன் மதுராந்தகரை எப்படி..எங்கே, எந்தவித அபாயத்திலிருந்து காப்பாற்றினார்? மதுராந்தகத் தேவர் இப்போது எங்கே?'' என்று இளவரசர் கேட்டார்.

''பொன்னியின் செல்வ! இதோ இன்னும் சில வினாடிப் பொழுதில் அவரே இங்கு வந்து விடுவார்! நீ இங்கே வந்திருக்கிறாய் என்று தெரிந்து இவ்விடம் அழைத்து வரச் சொல்லியிருக்கிறேன். அவர் வாய்மொழியாகவே கேட்டுத் தெரிந்து கொள்! அல்லது எல்லாவற்றையும் கண்ணால் பார்த்த பூங்குழலியிடம் கேட்டுத் தெரிந்து கொள்!.... இதோ அவர்கள் வருகிறார்கள் போலிருக்கிறது!''

ஆம்; அச்சமயம் அறைக்கு வெளியில் காலடிச் சப்தம் கேட்டது. சற்று நேரத்துக்கெல்லாம் நாலு பேர் உள்ளே வந்தார்கள். முதன் மந்திரி அநிருத்தர், ஆழ்வார்க்கடியான், பூங்குழலி, சேந்தன் அமுதன் ஆகியவர்கள் வந்தார்கள்.

சேந்தன் அமுதன் மட்டும் வழக்கத்துக்கு மாறாக விசித்திரமாக உடை அணிந்திருந்தான். தலையில் இளவரசுக் கிரீடம் அணிந்து பட்டுப் பீதாம்பரமும் அரச குலத்

துக்குரிய ஆபரணங்களும் புனைந்திருந்தான்.

அறைக்குள் வந்த கோஷ்டியினரை உள்ளே இருந்தவர்கள் சிறிது வியப்புடன் பார்த்தார்கள்.

''சகோதரி! மதுராந்தகர் வருவார் என்றல்லவோ சொன்னீர்கள்? அவரைக் காணோமே?'' என்றார் அருள்மொழி.

''தம்பி! இதோ உன் முன்னால் இளவரசுக் கிரீடம் அணிந்து நிற்கிறாரே. இவர்தான் செம்பியன்மாதேவியின் திருவயிற்றில் உதித்த, சிவஞான கண்டராதித்தரின் புதல்வர். இவர்தான் நமக்கெல்லாம் சித்தப்பன் முறை பூண்ட சிவபக்திச் செல்வர். இத்தனை காலமும் சேந்தன் அமுதன் என்ற பெயருடன் அக்ஞாதவாசம் செய்து வந்தார். சோழர் குலம் செய்த பாக்கியத்தினால் இன்றைக்கு வெளிப்பட்டு வந்தார். இவரைத்தான் நாலு நாளைக்கு முன்னால் கொடியோன் ஒருவன் ஈட்டியினால் குத்திக் கொல்ல முயன்றான். அதைத் தடுத்து இந்த வாணர் குல வீரர் சோழ குலத்துக்கு இணையில்லாத உதவி புரிந்தார். நமது முதன் மந்திரியின் சீடரான இந்த வீர வைஷ்ணவர் இவர் சைவர் என்பதையும் பொருட்படுத்தாமல் இவரைக் கோட்டைக்குள் கொண்டு வந்து சேர்த்தார்...''

இச் சமயத்தில் திருமலை குறுக்கிட்டு, ''தேவி! இச் சைவருக்கு நான் எந்தவித உதவியும் செய்யவும் இல்லை; செய்ய விரும்பவும் இல்லை. வல்லத்து இளவரசரைப் பல்லக்கில் கொண்டு வருவது சாத்தியமாகும் பொருட்டு இவருக்கு மாறு வேடம் புனைந்து யானையில் ஏற்றி வந்தேன்'' என்றான்.

குந்தவை ''ஆம், ஆம்! திருமலைநம்பி இரு வகையில் பேருதவி புரிந்திருக்கிறார். மதுராந்





தகத் தேவருக்கு இளவரசுக்கிரீடம் அணிந்து யானை மீது ஏற்றிக்கொண்டு வந்த போது உண்மையிலேயே இந்த நாட்டின் சிங்காதனத்துக்குரியவரை அழைத்து வருகிறோம் என்று தெரிந்திராது. அல்லது தெரிந்து தான் செய்தாரோ. அதை நான் அறியேன்! எப்படியேனும் இருக்கட்டும்! தம்பி! இத்தனை காலமும் மதுராந்தகத் தேவர் என்று நாம் எல்லாரும் எண்ணியிருந்தவர் உண்மையில் மதுராந்தகத் தேவர் அல்ல. இவர்தான் சோழ குலத்தின் தவப் பயனாக மூத்த எம்பிராட்டியின் வயிற்றில் உதித்தவர். நாம் அறிய முடியாத இறைவன் திருவிளையாடல் இவரை இத்தனை காலமும் குடிசையில் வாழ்ந்திருக்கச் செய்தது. ஆயினும் சோழர் தொல்குடியில் பிறந்ததனால் வந்த குணாதிசயங்கள் இவரிடம் குடிகொண்டிருந்ததை நாம் எல்லோரும் ஒவ்வொரு சமயம் பார்த்து வியந்திருக்கிறோம். முன்னொரு சமயம் இவர் இந்த வாணர் குலத்து வீரரைத் தப்ப வைப்பதற்காகச் செய்த முயற்சியை நாம் அறியோமா? தம்பி! உன்னை இவரும் பூங்குழலியும் கோடிக்கரையிலிருந்து நாகைப் பட்டினம் வரையில் கொண்டு போய்ச்சேர்த்ததைத்தான் மறக்க முடியுமா? இவர்தான் உண்மையில் நம் சித்தப்பா என்பதை இன்று செம்பியன் மாதேவியின் வாய்மொழியாகவும் அறிந்தோம்; இவரும் ஒப்புக் கொண்டார். தம்பி! இந்தப் புண்ணிய தினத்தில் இவரை நம் அரண்மனைக்கு வரவேற்கிறேன். இல்லை, இல்லை; இவருடைய சொந்த அரண்மனைக்கு வரவேற்கிறேன். இத்தனை காலமும் நம்மை விட்டுப் பிரிந்து வாழ்ந்தவரை இன்று நம் குடும்பத்தோடு ஒன்று சேர்ந்து விடும்படி அழைக்கிறேன். இத்தனை நாளும் பிரிந்திருந்தவர் நம்மோடு வந்து சேர்ந்த வைபவத்தை எவ்வளவோ விமரிசையாகக் கொண்டாட வேண்டும். அதற்குத் தகுதியான காலம் இதுவன்று. இந்தச் செய்தியை

எவ்வளவு தூரம் வெளியில் தெரியாமல் நமக்குள் வைத்துக் கொள்கிறோமோ, அவ்வளவுக்கு நல்லது. ஆகையால் நமக்குள்ளேயே இந்த வைபவத்தை நடத்திக் கொள்ளலாம். சித்தப்பா! இப்படி வாருங்கள்! நெடுநாளையப் பிரிவுக்குப் பின்னர் இன்று சோழர் குலத்தில் வந்து சேர்ந்ததற்காக எங்கள் மகிழ்ச்சியை வேறு விதத்தில் தெரிவித்துக் கொள்ள முடியவில்லை. என் அருமைச் சகோதரர்கள் வெளியூர்களுக்குப் போகும்போதும் சரி, திரும்பி வரும்போதும் சரி, அவர்கள் நெற்றியில் நான் திருநீறு பூசிக் குங்குமத் திலகம் இடுவது வழக்கம். அதுபோலவே இன்று திரும்பி வந்து சேர்ந்த தங்கள் நெற்றியில் திருநீறும் குங்குமமும் இடுகிறேன்!''

இவ்விதம் கூறி விட்டு இளைய பிராட்டி குந்தவைதேவி சேந்தன் அமுதன் என்று இத்தனை காலமும் பெயர் வழங்கிய மதுராந்தகன் நெற்றியில் திருநீறும் குங்குமமும் இட்டார்.

அப்போது முதன் மந்திரி அநிருத்தர் ''சோழர் குலத் தோன்றல் இளங்கோ மதுராந்தகத் தேவர் நீடூழி வாழ்க!'' என்று ஆசி கூறினார். ''வாழ்க! வாழ்க!'' என்று ஆழ்வார்க்கடியான்நம்பி எதிரொலி செய்தான்.

குந்தவை முதலில் பேச ஆரம்பித்த போது அருள்மொழிவர்மர் உள்ளத்தில் வியப்புத்தான் அதிகமாக இருந்தது. அதில் சிறிது சந்தேகமும் கலந்திருந்தது. இதெல்லாம் தம் திருத்தமக்கையாரின் விளையாட்டோ, ஏதேனும் ஒரு முக்கிய காரணம் பற்றி இவ்விதம் பேசுகிறாரோ என்று கூட எண்ணினார். போகப் போக, அவருடைய ஐயம் தீர்ந்து விட்டது. குந்தவை தேவியின் வார்த்தைகள் இதய அந்தரங்கத்திலிருந்து வந்த அன்புணர்ச்சி ததும்பிய வார்த்தைகள் என்பதை அறிந்தார். அவர் பெரிதும் போற்றிய தமக்கையின் உள்ளத்தில் பொங்கிய உணர்ச்சி வெள்ளம் அவரையும் ஆட்கொண்டு விட்டது. குந்தவை தேவி திலகமிட்டதும் அருள்மொழித் தேவர் சேந்தன் அமுதன் அருகில் சென்று, ''சித்தப்பா! முன்னமே தங்களிடம் நான் அன்பு கொண்டிருந்தேன். தாங்கள் என் சகோதரராயிருக்கக் கூடாதா என்று எண்ணியதுமுண்டு. நமக்குள் இருக்கும் இரத்தத் தொடர்புதான் அத்தகைய உணர்ச்சியை எனக்கு அளித்தது போலும்!'' என்று கூறிச் சேந்தன் அமுதனை ஆலிங்கனம் செய்து கொண்டு கண்ணீர் பெருக்கினார்.

வந்தியத்தேவன், ''ஆகா! நான் முன்னமே கொஞ்சம் சந்தேகித்தேன். சேந்தன் அமுதன் என்கிற சிவபக்தருக்குள்ளே பரம்பரையான வீர இராஜகுலம் எங்கேயோ ஒளிந்து கொண்டிருக்கத்தான் வேண்டும் என்று எண்ணினேன். இல்லாவிட்டால், ஊரும் பேரும் இல்லாதவனாக வந்த எனக்கு அடைக்கலம் தந்து ஆதரித்து ஊரை விட்டு ஓடவும் உதவி செய்திருப்பாரா? பேரரசர் மகனே! முன்னொரு தடவை எனக்குச் செய்த உதவியை எனக்கு மறுபடியும் செய்து அருள்புரியுங்கள்! தங்களுடைய மகுடாபிஷேக வைபவத்தைப் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லையே என்று வருத்தமாய்த்தானிருக்கிறது. என்ன செய்யலாம்! ஒரு விஷயத்தில் எனக்கு மிக்க மகிழ்ச்சி. சேந்தன் அமுதனாருக்குச் சோழ சாம்ராஜ்யம் சொந்தமாவதிலே கூட எனக்கு அவ்வளவு திருப்தி இல்லை. எனக்குக் கடல் கடக்க உதவி செய்த பூங்குழலி அம்மை மகாராணி ஆகப் போவதிலேதான் எனக்குப் பூரிப்பு. சமுத்திர குமாரியின் ஆசைக் கனவு இவ்வளவு விரைவில் நிறைவேறப் போகிறது என்று அவரே எதிர்பார்த்திருக்க மாட்டார்!'' என்றான்.

குந்தவை குறுக்கிட்டு, ''ஐயா! தாங்கள் இன்னும் சில நாள் இவ்வளவு அதிகமாகப் பேசாமலிருந்தால் நல்லது. அப்போது உடம்பு குணப்பட்டுத் தப்பி ஓடுவதாயிருந்தாலும் விரைவாக ஓட முடியும்!'' என்றாள்.

பின்னர், ''தம்பி! அருள்மொழி! இத்தனை காலமும் நமது அருமைப் பாட்டியார் தமது திருமகனுக்கு மகுடம் சூட்டுவதை ஏன் ஆட்சேபித்தார் என்பதை இப்போது நாம் அறிந்து கொண்டோம். நமக்குக் கூடப் பழைய மதுராந்தகர் முடிசூடுவதில் அவ்வளவு திருப்தியில்லாமலிருந்தது. வீர சோழ குலத்தில் பிறந்தவர்களிடம் இருக்க வேண்டிய குணாதிசயங்கள் அவரிடம் இல்லை. நமது பாட்டியார் எவ்வளவோ முயன்று பார்த்தும் சிவபக்தி அவருடைய உள்ளத்தில் ஒட்டவில்லை. வீரம் என்பது அவரிடம் மருந்துக்குக் கூட இல்லை. அப்படியிருந்தும் ஒருவாறு நாம் அவருக்கே முடிசூட்டுவதற்கு மனத்தைச் சரிப்படுத்திக் கொண்டோம். இந்தப் புதிய மதுராந்தகருக்குப் பட்டம் கட்டுவதில் நமக்கெல்லாம் திருப்தி என்பது மட்டுமில்லை; குதூகலமும் பூரிப்பும் அடைகிறோம். உன்னையும் வல்லத்து இளவரசரையும் நடுக்கடலில் முழுகாமல் கரையேற்றிக் காப்பாற்றிய பூங்குழலி சிங்காதனம் ஏறுவதைப் பார்க்கவும் எனக்கு ஆசையாக இருக்கிறது. அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை நம் முதன் மந்திரி உடனே செய்ய வேண்டும்!'' என்றாள்.

''தேவி! பெரிய பழுவேட்டரையர் மகளை வைத்துக் கடம்பூர் மாளிகையில் என்ன நடந்தது என்பதைச் சொல்ல வேண்டும். பழைய மதுராந்தகத் தேவர் என்ன ஆனார்

என்பது தெரிய வேண்டும். இந்த இரண்டு காரியமும் ஆவதற்கு முன்னால் மகுடாபிஷேகத்துக்கு நாள் வைப்பது எப்படி?'' என்றார் அநிருத்தர்.

''பெரிய பழுவேட்டரையரிடம் நான் கேட்டுக் கொள்ளுகிறேன். பழைய மதுராந்தகரைக் கண்டுபிடிப்பது உங்கள் பொறுப்பு!'' என்றாள் குந்தவை.

அப்போது சேந்தன் அமுதன் என்று நாம் இதுவரையில் அழைத்து வந்த இளவரசர் மதுராந்தகத்தேவர் பொன்னியின் செல்வரைப் பார்த்துக் கூறினார்:—''இளவரசே! தாங்கள் என்னைச் சித்தப்பா முறை வைத்து மரியாதையாக அழைத்தீர்கள். இவர்களும் என்னை 'இளவரசர்' என்று அழைக்கிறார்கள். ஆனால் தங்களை நான் 'மகனே' என்று அழைப்பது சாத்தியமில்லை. இருபத்திரண்டு ஆண்டு எளிய குடிசையில் காலங் கழித்தவன் திடீரென்று இன்றைக்கு என்னைப் பேரரசர் குலத்தில் பிறந்த இளங்கோவாகக் கருதிக் கொள்ளவும் முடியவில்லை. உங்கள் எல்லாருக்கும் ஒரு விண்ணப்பம் செய்து கொள்கிறேன். வந்தியத்தேவர் தப்பியோடக் காரணமாக இருந்ததற்காக என்னைச் சில்நாள் பாதாளச் சிறையில் அடைத்திருந்தார்கள். அப்போது பக்கத்து அறையிலிருந்தவன் மூலம் இன்று வெளியான செய்தியை நான் அறிந்தேன், ஊமைத் தாயின் பிள்ளை அரண்மனையில் அரச குமாரனாக வளர்கிறான் என்றும், இராஜ குலத்துக் குழந்தை ஊமைத் தாயின் வீட்டில் வளர்ந்து வருகிறான் என்றும் அவன் கூறினான். அப்போதே எனக்கு உண்மை தெரிந்து விட்டது. உலகம் போற்

அருள்வாக்கு



வாழ்நாள் முழுக்க எதன் நினைப்பு ஒருத்தன் மனஸில் ஜாஸ்தியாக இருக்கிறதோ, அதைப் பற்றிய சிந்தனைதான் அந்திமத்தில் வரும். இப்படி நமக்குக் கடைசியில் பகவத் ஸ்மரணம் வருமா என்று நிச்சயப்படுத்திக் கொள்வதற்கு ஒரு பரீக்ஷை வைத்துக் கொள்ளலாம். அதாவது:

அன்றன்றைக்கும் நாம் தூங்குகிறோம் அல்லவா? இதையும் ஒரு சாவு மாதிரி என்றுதான் சாஸ்த்ரங்களில் சொல்லியிருக்கிறது. தூங்குகிற போது கட்டை போல ஒன்றும் தெரியாமல், ஞானமே இல்லாமல்தானே கிடக்கிறோம்? இதனால்தான் இப்படிச் சொல்லியிருக்கிறது. 'நித்யப் பிரளயம்' என்றுதூக்கத்தைச் சொல்வார்கள். இப்படி தினமும் நாம் 'சாகிற' போது பகவானையே ஸ்மரித்துக் கொண்டு 'சாக' முடிகிறதா என்று அப்யாஸம் பண்ணிப் பார்க்கலாம். தூங்குகிறதற்கு முன்னால் நம் இஷ்ட தேவதையையே ஸ்மரித்துப் பார்க்க வேண்டும். அந்த நினைப்போடேயே தூக்கத்தில் ஆழ்ந்து விட வேண்டும். வேறே நினைப்பு வரக் கூடாது. சொல்லும் போது ஸுலபமாக இருக்கும். ஆனால் பண்ணிப் பார்த்தால் எத்தனை கஷ்டம் என்று தெரியும். காமாக்ஷியோ, நடராஜாவோ, தக்ஷிணாமூர்த்தியோ, வேங்கடரமணஸ்வாமியோ, முருகனோ— எந்த தெய்வமாக வேண்டுமானாலும் இருக்கலாம். அந்த இஷ்ட தெய்வத்தையே அல்லது தெய்வத்துக்குஸமானமாக நமக்குச் சாந்தியும் ஸந்துஷ்டியும் தருகிற ஒரு குரு அல்லது மஹானையோ வேறே நினைப்பு வராமல் ஸ்மரிப்பதென்றால், 'இதிலே என்ன கஷ்டம் இருக்கிறது? மனஸுக்கு ரம்யமாகவும், ஆறுதலாகவும் இருக்கப்பட்ட இந்த ரூபங்களை நினைப்பதில் என்ன சிரமம்?' என்றுதான் தோன்றும். ஆனால் எதனாலோ, சிறிது நேரமானால் இத்தனை நல்ல, திவ்யமான ஸ்மரணையை விட்டு விட்டு மனஸ் வேறெங்கேயாவதுதான் போய் விழும். அப்படியே கண்களைக் அசத்தித் தூக்கத்தில் கொண்டு போய் விட்டு விடும். இப்படி ஏமாறாமல் பழக்கிக் கொண்டால் சாகிற ஸமயத்திலும் பகவானை விடாமல் நினைக்க முடியும் என்ற நிச்சயத்தைப் பெறலாம். எல்லாம் அப்யாஸத்தில், விடாமுயற்சியில்தான் இருக்கிறது. நம்முடைய சிரத்தையைப் பொருத்து பரமாத்மாவே கைகொடுப்பார்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி சங்கராச்சாரிய ஸுவாமிகள்.

றும் செம்பியன்மாதேவி என்னிடம் காட்டிய அன்பின் காரணத்தை ஊகித்து அறிந்து கொண்டேன். அவர் என்றாவது ஒரு நாள் என்னை 'மகனே!' என்று அழைக்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன். அந்த ஆசை இன்று நிறைவேறி விட்டது. இதற்கு மேல் நான் ஒன்றும் விரும்பவில்லை....!''

முதன் மந்திரி குறுக்கிட்டு, ''இளங்கோவே! தாங்கள் விரும்புகிறீர்களா, இல்லையா என்பது கேள்வி அல்லவே? எது நியாயம், எது முறைமை என்றுதானே யோசிக்க வேண்டும்?'' என்றார்.

''ஆகா! நன்றாக யோசியுங்கள். என்னைப் பற்றிய வரையில், யோசனை அவசியமே இல்லை. ஏற்கெனவே தீர்க்கமாக யோசித்து முடிவு செய்து விட்டேன். பூங்குழலி பலமுறை என்னிடம் 'அரசகுமாரனை மணந்து அரியாசனம ஏறப் போகிறேன்' என்று கூறினாள். அதனாலேயே என் அந்தரங்கக் காதலை நிராகரிப்பதாகவும் சொன்னாள். அப்போதெல்லாம் 'பெண்ணே! உண்மையில் நான் அரசகுமாரன்தான்! நான் விரும்பினால் இந்தச் சோழ ராஜ்யம் என்னுடையதாகும்!' என்று கூற என் உள்ளமும் நாவும் துடிதுடித்தன. அந்த ஆர்வத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டேன். நாடாளும் ஆசை என் உள்ளத்தில் என்றும் புகலாகாதென்று இறைவனை வேண்டிக் கொண்டேன். அந்த வைராக்கியத்தை நிறைவேற்றும் பொருட்டுப் பூங்குழலியைத் தியாகம் செய்யவும் உறுதி கொண்டிருந்தேன். நல்லவேளையாக, இந்தச் சமுத்திர குமாரி தனக்குத் தகுதியில்லாத ஆசையை விட்டு விட்டு, இந்த ஏழைச் சிவாலயத் தொண்டனை மணந்து கொள்ள மனமுவந்தாள்.''

பூங்குழலி இங்கே குறுக்கிட்டு, ''ஐயா! எனக்குத் 'தகுதியில்லாத ஆசை' என்று எப்படிக் கூறினீர்கள்? மூன்று உலகும் ஆளும் சக்கரவர்த்தினி யாவதற்கும் நான் தகுதி உடையவளே. அப்படியிருந்தும், தங்களை மணந்து பூமாலை கட்டிப் பிழைப்பதற்கும் ஓடம் தள்ளி வாழ்நாளைக் கழிப்பதற்கும் இசைந்தேன்!'' என்றாள்.

''அப்படிச் சொல், பூங்குழலி! உன் தகுதியை நிலைநாட்ட இதுவே போதுமே! தகுதியும் தகுதியின்மையும் எப்படி ஏற்படுகின்றன? 'பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்' என்று தெய்வப் புலவரின் தமிழ் மறை கூறுகிறதே! ஆகையால் உன்னுடைய பழைய மனோரதத்தை நீ இப்போது கை விட்டு விட வேண்டாம். உன்னைக் கைப்பிடிக்கப் போகும் இந்தப் பேரரசன் மகனுக்கும் எங்களுடன் சேர்ந்து சொல்லு! சித்தப்பா! தாங்கள் தங்கள் பிறப்பின் உண்மையை அறிந்த பிறகும் இந்த ராஜ்யம் வேண்டாம் என்று வைராக்கியம் கொண்டிருந்தது நியாயந்தான். அது தங்கள் பிறவிக் குணத்தின் பெருந்தன்மையைக் காட்டுகிறது. இப்போது நாங்கள் எல்லாரும் சொல்லுகிறோம். சக்கரவர்த்தி சொல்லுகிறார்; முதன் மந்திரி சொல்லுகிறார்; நானும் என் சகோதரனும் சொல்லுகிறோம்; என் தோழி வானதி சொல்லுவதுடன் அவளுடைய பெரிய தகப்பனாருடைய மனத்தையும் மாற்றி விடுவதற்கு ஒப்புக் கொள்கிறாள். இப்போது ஏன் தாங்கள் மறுக்க வேண்டும்?'' என்றாள் இளையபிராட்டி குந்தவை தேவி.

''தேவி! நீங்கள் எல்லாரும் சொல்லுகிறீர்கள். ஆனால் இந்த ராஜ்யத்தின் குடிமக்கள் என்ன சொல்லுகிறார்கள்? அது உங்களுக்கு ஒருவேளை தெரிந்திராது. நாட்டு மக்களோடு பழகியுள்ள எனக்கு நன்றாகத் தெரியும். இந்தத் தஞ்சையிலும் பழையாறையிலும் குடந்தையிலும் கோடிக்கரையிலும் நாகைப் பட்டினத்திலும் ஜனங்களின் விருப்பம் என்ன என்று எனக்கு நன்றாய்த் தெரியும். பாண்டிய நாட்டிலும் பல்லவ நாட்டிலும் கொங்கு நாட்டிலும் ஈழ நாட்டிலும் உள்ள மக்களின் விருப்பத்தையும் நான் கேள்வியினால் அறிந்திருக்கிறேன். 'அருள்மொழி வர்மரே திருமுடி சூட வேண்டும்' என்பது தான் ஏகோபித்த மக்களின் வாக்கு. இவ்வளவு பெரிய பிரளய வெள்ளத்தை எதிர்த்து என்னால் நீந்த முடியுமா? நான் ஆசைப்பட்டாலும் இந்தப் பெரிய சோழ சாம்ராஜ்யத்தை என்னால் ஆள முடியுமா? கடவுளே! நீங்கள் எல்லாரும் 'பழைய மதுராந்தகர்' என்று சொல்கிறவர் மீது ஜனங்கள் எவ்வளவு வெறுப்புக் கொண்டிருந்தார்கள் என்பதை நான் அறிவேன். அந்த வெறுப்புக்கெல்லாம் என்னை உரிமையாளனாக்கி விடப் பார்க்கிறீர்களா? வேண்டாம்! வேண்டாம்! அவ்வளவு பெரிய தீங்கை எனக்குச் செய்ய வேண்டாம். நான் உங்களில் யாருக்கும் எந்தவிதத் தீங்கும் செய்யவில்லையே?''

மற்றவர்களில் யாரும் இதற்கு மறுமொழி சொல்வதற்குள் பொன்னியின் செல்வர் கம்பீரமாகத் தலைநிமிர்ந்து நின்று, ''இந்தப் பேச்சு இத்துடன் நிற்கட்டும்! நீங்கள் இந்த அறைக்குள் வரும் சமயத்தில் நான் 'சோழ ராஜ்யத்துக்கு நானே முடிசூட்டிக் கொள்ளப் போகிறேன்' என்று வந்தியத்தேவரிடம் சொல்லிக் கொண்டிருந்தேன். அதை நிறைவேற்றியே தீருவேன். முதிய எம்பிராட்டியின் திருவயிற்றில் உதித்த இந்த உத்தமத் தோழரின் கருத்தையும் அறிந்து கொண்டேன். இராஜ்ய உரிமை பற்றி இனிப் பேச்சு எதுவும் வேண்டாம்!'' என்றார்.

(தொடரும்)

வெறுமை

அபிமானி

சட்சட்சட்சட்சட்சட்சட்... ட்ரிச்சிக்... சட்சட்சட்சட்சட்சட் —

''விமலாம்மா... ஏ.ஓ. கூப்புடுராங்க...''

ஜரூராய்த் தட்டிக் கொண்டிருந்த டைப்பிங் நின்றது. சாவதானமாய் இடுப்பு முறித்து எழுந்தாள் விமலா.

மும்முரமாய் இயங்கிக் கொண்டிருந்தது செக்ஷன். மார்ச் மாசமென்றாலே பிட்டி நகன்று விடுகிறது எல்லோருக்கும். எல்லா கணக்கு வழக்குகளையும் பட்டியல் போட்டு, சரி பண்ணி மினிஸ்ட்ரிக்கு அனுப்பியாக வேண்டிய மாசம். சீஃப் அக்கவுண்ட்ஸ் ஆபீசர் தந்திருந்த நாலு பக்க ட்ராஃப்ட்களை ஒரே மூச்சில் அடித்து முடிக்க எத்தனித்திருக்க, இப்போது மூன்று பக்கங்களே முடிந்திருந்த ஆதங்கமிருந்தது விமலாவுக்கு.

பிசிறலாய்ப் பியூனிடம் கேட்டாள்: ''எதுக்கு ராஜா கூப்புடுறாரு?''

அவளது மேஜை பக்கத்து ஸ்டூலில்தான் ராஜாவின் இருக்கை. ஆபீசர் அடிக்கும் 'பெல்'களுக்கும் செக்ஷனிலுள்ளவர்கள் பணிக்கும் வேலைகளுக்கும் தயார்ப்படுத்திக் கொள்ள தோதான இடம். ஒழிந்த நேரங்களில் விமலாவோடு அரட்டையடித்தும் கொள்ளலாம்.

நமுட்டுச் சிரிப்பாய் உதட்டைப் பிதுக்கிக் கொண்டான் ராஜா. ''எனக்கு எப்படித் தெரியும்? அவுங்க அவுங்களுக்குள்ள ஆயிரம் விஷயமிருக்கும்!''

பரிகாசமான வார்த்தைகள். விமலாவுக்கு அதிலொன்றும் விகற்பமில்லை." அவன் பேச்சே இப்படித்தான். அதிலும் விமலாவென்றால் அதிக அந்நியோன்யமும் அதிக உரிமையும் பேச்சுக்களில் வடியும்.

''போயிட்டு வந்து பேசிக்கிடுறேன்...'' செல்லமாய்க் கடிந்து கொண்டு இடம் பெயர்ந்தாள் விமலா.

ஏ.ஓ.வின் அறைக் கதவு திறந்து உள்ளே நுழைந்தாள்.

''குட்மார்னிங் சார்...''

''குட்மார்னிங் குட்மார்னிங்... டேக் யுவர் சீட்...'' வாயெல்லாம் பல்லாக ஓர் அசாதாரணப் பார்வையுடன் வரவேற்றார் ஏ. ஓ. கண்ணாடி பளபளத்த லேமினேட்டட் டேபிளுக்கு மேல் கைநீட்டி ஸ்டூல் சேரைக் காட்டினார்.

அன்னமாய் நகர்ந்து வந்து, பவ்யமாய் சேரில் அமர்ந்து கொண்டாள் விமலா. மனசுக்குள் ஆதாரமற்றத் திணறல். இலக்கின்றிக் கவிழ்ந்து கொண்டன விழிகள். உச்சப் புள்ளியில் ஃபேன் சுற்றுகிறது போல 'விண்'ணென்ற இரைச்சல் மட்டுமே தீர்க்கமாய் ஒலித்துக் கொண்டிருந்தது. படிய வாரியிருந்த கேசம் கலைந்து இழை பிரிந்து அவளை உறுத்தியது. விரல் பதித்து அழுத்தி ஒழுங்குபடுத்திக் கொண்டாள். கும்ம்ம் மென்று அமுக்கிய பிரத்யேக வாசனை. மனிதர் இன்டிமேட்டில் வந்திருப்பாரென்றே தீர்மானித்துக் கொண்டாள் விமலா.

வெளிர்நீல சஃபாரியில் இருந்தார். வயசுக்கு மீறிய ஒப்பனை! வயசை மறைத்துக் கொள்வதில் இவருக்கேன் இத்தனைப் பிரயத்தனம் என்றிருந்தது விமலாவுக்கு. அவருக்கு எட்டாங்கிளாஸ் படித்துக் கொண்டிருந்த பெரிய பிள்ளை இருந்தது அவளுக்குத் தெரிந்திருந்தது. அவளின் ஜாகைக்குப் பக்கத்தில்தான் அந்தப் பள்ளிக்கூடம் இருந்தது. அவனையடுத்து இரண்டு இரண்டு இரண்டு வயசு வித்தியாசங்களில் இரண்டு பெண் குட்டிகள். இவ்வளவு வாழ்க்கை வாழ்ந்த பிறகுமா இத்தனை அலங்காரமென்று யோசித்தாள். அந்தந்த வயசுக்கு அதுக்கேற்ற அலங்காரமே நாகரிகமானது. திடீரென அவளின் மனசுக்குள் சமாதானக் கொடி உயர்ந்தது. அலங்காரத்திலென்ன இருக்கிறது.. எல்லாம் மனசில் தானே இருக்கிறது. மனசில்தானே மனிதர்கள் இருக்கிறார்கள். மனசில்தானே வாழ்க்கை இருக்கிறது.

''சார் டிக்டேஷன் ஏதாவது...''

விமலாவுக்கு அவசரமிருந்தது. ட்ராஃப்டில் இன்னும் ஒரு பக்கம் 'டைப்' அடிக்க வேண்டியிருந்தது ஞாபகத்தில் வந்து உறுத்தியது. இருபத்தைந்து பேர் நிறைந்திருந்த அந்த செக்ஷனில் அவள் ஒருத்தியே டைப்பிஸ்ட்டாய் இருந்ததன் சுமை அழுத்தியது.

வெடிச் சிரிப்பாய்ச் சிரித்தார் ஏ.ஓ. ''டிக்டேஷனுக்கில்ல உன்னைக் கூப்பிட்டது... உனக்குப் பிரசன்ட் தர...''

''பிரசன்ட்டா? எனக்கா? எதுக்கு சார்? எனக்கொண்ணும் புரியலை நீங்க சொல்றது.''

''சொன்னா புரியாது. கண்ணை மூடிக்க.. ஆச்சரியப்படுவே...''

கண்ணை மூடாமலே ஆச்சரியப்பட்டாள் விமலா. என்ன பூடகம் வைக்கிறார்? சங்கோஜமாகவும், சங்கடமாகவும் இருந்தது அவளுக்கு. மறுத்து ஒதுக்கவும் தைரியமில்லை.

சாவதானமாய்க் கண்களை மூடிக் கொண்டாள். இருட்டுக் குகைக்குள் மின்னல் மின்னலாய் ஒளிப் பாம்புகள் படமெடுத்தன. நிசப்தம். மயான நிசப்தம்.

அந்த நிசப்தத்தை நிர்மூலமாக்கி டேபிளின்

கப்-போர்டைச் சன்னமாய்த் திறக்கும் ஓசை செவிகளைத் தீண்டியது. 'என்ன... என்ன எடுக்கிறார்?'

''இப்பத் திற...''

திறந்தாள். இறுக்கமாய் மூடிக் கொண்டதன் வலி உறுத்தியது விழிகளை.

''ஹேப்பி பர்த்டே டு யூ.''

தீப்பெட்டி அளவில் மஞ்சள் நிறப் பெட்டியைத் திறந்து காண்பித்தார். ஊதாநிற வெல்வெட் துணிக்கு மத்தியில் அவரைப் போலவே பல்லிளித்து மின்னிற்று, தங்கமோதிரம் ஒன்று.

விமலாவுக்குப் 'பகீர்' என்றது. பின்னே? அவளுடைய பிறந்த நாள் அவளுக்கே பிரதானமில்லாத போது அவருக்கென்ன அதில் அக்கறை வந்தது? சுய பரிசீலனையில் அவளின் மனசு இம்சைப் பட்டது. அஞ்சாறு ஜீவன்களுக்கு ஒரே நிவாரணமாய் அவளின் வருமானம். நரகத்தின் படிகளாய் அவளின் நாட்கள். விபத்தொன்றில் காலிழந்து 'பாலம்மாள் டிரான்ஸ்போர்ட் கம்பெனி'யின் டிரைவர் உத்தியோகம் உயிரிழக்க, முடமாய் வீட்டில் கிடந்தார் அப்பா. அடுப்படிக்கு மட்டுமே நடக்கத் தெரிந்த அம்மா. கல்லூரியில் காசைக் கரைக்கும் தம்பி. ப்ளஸ் டூவோடு நின்றுபோய் வீட்டில், அம்மாவுக்குப் பேன் பார்க்க மட்டுமே தெரிந்திருந்த தங்கை. வீட்டின் மூத்த குழந்தை என்ற அங்கீகாரத்துடன் அவளின் வயசு அங்கீகாரமில்லாமல் மூப்படைந்து கொண்டிருந்தது. அவர்களின் வாழ்க்கை தளிர்விட்டுக் கிளை விட இவளின் வாழ்நாட்கள் உரமாகிப் போயின. யாருக்கு இஷ்டமிருக்கிறது, அவளின் எதிர் காலத்தைச் சிலாகிக்க? விமலாவும் இஷ்டப்படவில்லை. மூன்றாவது மனிதர் இவருக்கென்ன இந்த அக்கறை...?

''என்ன சார் இது?'' அதிர்வாய் எழுந்து நின்றாள் விமலா. அமிலம் சிந்திய பார்வை.

''உனக்குத்தாம்மா... மோதிரம்... நாலரை கிராம்... வாங்கிக்க...''

சர்க்கரை தடவிய வார்த்தைகள். அதில் மொய்க்கும் ஈக்களைப் போல விரசம். விமலாவுக்கு உக்கிரம் பொங்கி நுரைவிட்டது. எதற்காக இந்த மனிதர் அடி போடுகிறாரென்பது உள்ளுரப் புரிந்தது. மனிதரா இவர்? ஓர் ஆபீசர் என்ற கௌரவமான கோட்டையைத் தாண்டிக் கீழிறங்கி, ஒரு டைப்பிஸ்ட்டிடம் கீழ்த்தரமாய்





நடந்து கொள்ள யத்தனிக்கும் இவர் மனிதரா?

"என்ன மிஸ்டர் பாலு... கேன்வுன் போகலாமா? ஆர் யூ ரெடி?" அகஸ்மாத்தாய் சூப்பிரண்டெண்ட் தண்டபாணி உள்ளே வந்தார். கோடி கும்பிடுகள் அவருக்கு! விமலாவைப் பார்த்ததும் சம்பிரதாயப் புன்னகை வீசினார்.

அசடு வழிந்தது ஏ ஓவின் முகத்தில். படபடவென்று பெட்டியைக் கைக்குள் மூடிக் கொண்டு உள்ளே இழுத்துக் கொண்டார்.

"நான் அப்புறமா கூப்பிடறேன்," என்று விமலாவைப் பார்த்து வழுக்கினார். ஆளை விட்டால் போதுமடா சாமியென்று பெருமூச்சுடன் வெளிவந்தாள் விமலா.

இலைமறை காயாய் இருந்த சந்தேகங்கள் இப்போது அமுழ்கிப் போய்ச் சந்திக்கு வந்ததாய்த் தீர்மானித்துக் கொண்டாள் விமலா. ஆரம்பத்திலே இந்த அக்கவுண்ட்ஸ் ஆபீசரின் அணுகுமுறை அவளிடம் வித்தியாசமாகவும் விகற்பமாகவும் இருந்திருந்ததை இப்போது ஞாபகப்படுத்திச் சீர்தூக்கிப் பார்த்துக் கொண்டாள். அநேகக் காலைகளில் அவராகவே வலிய வந்து 'குட்மார்னிங் விமலா' போட்டதும்... மதிய வேளைகளில் அவளின் சம்படம் எடுத்துத் திறந்து, 'இன்னிக்கு என்ன ஸ்பெஷலோ...' என்று பல்லிளித்ததும்... அவைகூட விமலாவை அவ்வளவாகக் கலவரப்படுத்தி இருக்கவில்லை. சகஜமாய்ப் பழகும் அநேக சகாக்கள் செய்கிற ஓட்டிகள்தான். அதற்கும் மேலாகப் பல படிகள் ஏறியிருந்தார் சில பொழுதுகளில்.

என்ன மனிதர் இவர்? ஏன் இவருக்கு இந்த அல்ப புத்தி? கரைகள் தெரியாத ஆழ் கடலில் விமலா.

— பதவி, வயசென்று பாகுபாடில்லாமல் எல்லோரிடமும் சகஜமாக வாயடித்துப் பழகிக் கொண்டிருந்தாளே, அதனாலா அவர் அப்படி...?'

— அல்லது இந்த ஆபீஸ் பியூன் ராஜாவோடும் அவனின் குடும்பத்தோடும் செளஜன்யமாய் அவள் பழகிக் கொண்டிருந்தது எல்லோருக்கும் போல் அவருக்கும் தெரிந்திருக்க, 'பியூனிடமே அப்படி... ஒரு ஆபீசருடன் ஏன் கூடாது?' என்று தப்புக் கணக்குப் போட்டிருப்பாரா? வேதனையில் கரைந்திருந்தாள் விமலா. ராஜாவும் தானும் அப்படியல்லவென்று மனசுக்குள்ளே சாட்சி சொன்னாள்.

அது ஓர் அகஸ்மாத்தில் தொடங்கியிருந்த பழக்கம். ஆழமாய் வேரூன்றியிருந்தது. ஆபீசர் அறைக்கு அண்மையில் விமலாவின் சீட் இருந்ததால் ஒழிந்த நேரங்களில் அவனோடே சம்பாஷித்துக் கொண்டிருக்கும் சந்தர்ப்பம் கிடைத்திருந்தது ராஜாவுக்கு. சம்பாஷணை கொஞ்ச நாட்களில் அரட்டையாய்த் திரிந்திருந்தது. அரட்டை மாறி அன்பாய்க் குசலம் விசாரிப்பது வழக்கமாயிற்று. பக்கத்துப் பக்கத்துத் தெருக்களில் ஜாகைகள் இருந்ததால் அந்நியோன்னியம் கிடைத்தது. ஒருவர் வீட்டுக்கு ஒருவர் வீட்டார்கள் போய்விட்டு வருமளவுக்கு அன்பு உறுதியாகி இருந்தது. பியூன், டைப்பிஸ்ட் பதவிகளை மீறி, நல்ல சிநேகிதர்களாய்த் தேறியிருந்தார்கள். எந்தச் சந்தர்ப்பங்களிலும் வார்த்தைகளில்கூட எல்லை மீறல் இருந்ததில்லை. அப்படியே அவன் அரசல்புரசலாய் மீறினாலும் விமலாவின் கண் வீச்சில் ஸ்தானம் திரும்பிவிடுவான். அவர்கள் சில நேரங்களில் சூழ்நிலை மறந்து சிரித்திருக்கிறார்கள். சக ஊழியர்களின் சந்தேகப் பார்வைக்கு இலக்காகியிருக்கிறார்கள். ஆயினும் விமலாவுக்கு என்ன...! அவள் மனசில் களங்கம் இருந்ததில்லை. அதனால் அவை பற்றிக் கவலையும் இருந்ததில்லை. ஆயினும் அந்த ஏ. ஓ. வைப் பற்றி நினைக்க நினைக்க....

டீடைமாக இருந்ததால் செக்ஷனில் கூட்டமில்லை. ஒற்றைக்கால் கொக்கு போல விமலாவின் சீட்டருகே ஸ்டூலில் ராஜா.

தளர்வாய் சேரில் வந்து அமர்ந்து கொண்டாள் விமலா. இறுக்கமான சூழல். பேப்பர் வெயிட்டை எடுத்துத் தூர வைத்துவிட்டு 'டைப்' அடித்திருந்த பிரதியை எடுத்துக் கொண்டு பார்வையிட்டாள். எண்ணெயில் ஒட்டாத நீராய் மனசு அல்லாடியது. அவளையே வெறித்திருந்தான் ராஜா...

"என்ன விசயம்... உம்முன்னு இருக்கிற மாதிரித் தோணுது...?" என்றான்.

அவனிடம் சொல்லலாமா, வேண்டாமாவென்று குழப்பமாகியிருந்தது விமலாவுக்கு. சொல்லி விட்டால் அதையே ஆதர்சமாக்கிப் பரிகாசப்படுத்தலாம்.அவளை.வேடிக்கை விஷமமாகக் காற்றில் பரவும்.

நீரோட்டமாய் ஓடிக் கொண்டிருந்த விமலாவின் சிந்தனையில் பிரளயமாய்த் தடையொன்று விழுந்தது. மற்றவர்களைப் போலவா ராஜாவுமென்று உளி செதுக்கிற்று.

சுருதிப் பிசகலாய் விமலா சொன்னாள்:

"ஒரு பொம்பளைன்னா பொன்னுக்கும்



சமீபத்தில் நண்பர் ஒருவர் வீட்டிற்குச் சென்றிருந்தேன். "ஏலே, 'மரணம்' இங்கே வாடா!" என்றழைத்தார் நண்பர். எனக்கு 'பக்' என்றது. ஒரு சின்னப் பையன் வந்தான். நண்பரின் உறவுப் பையன். அவன் பெயர் 'மரணக்குவளை!'

விசித்திரமாக இல்லை!

— இரா. ஆதிநாராயணன்.

பொருளுக்கும் மயங்கிடுவான்னு நெனைக்கி றானுங்க... துப்பு கெட்டப் பசங்க... மோதி ரத்தைக் குடுத்துத் தூண்டிலைப் போடப் பார்க்கிறான். அந்த ஏ. ஓ.''

நெஞ்சு படபடத்துக் கொண்டிருந்தது. உணர்ச்சிக் கொந்தளிப்பில் மேலும் கீழும் மூச்சு வாங்கியது. தேகத்தில் பரபரப்புத் தெரிந்தது. தயக்கமாய் ராஜாவை ஏறிட்டாள் விமலா. அவனின் முகத்தில் எந்தவித ஆத்திர மும் கோபமும் இல்லாதது கண்டு சட்டென்று கலவரமடைந்து போனாள். பரிகாசமாய் அவனின் உதடுகள் மட்டுமே நீளம் கூட்டின. கண்கள் பரிகாசமாய் விளிம்புகள் தொட் டன. விரக்தியாயிற்று விமலாவுக்கு. நம்பிக் கையாய் ஆதரவு தேடிக் கிளைவிரித்த கொடி யின் ஆணிவேர் இற்றுப் போயிற்று. பெரி சாய் இல்லையென்றாலும் சாதாரணமாக வாவது ஆறுதல் சொல்லுவான் என்ற நம் பிக்கை.

''அவ்வளவுதானே! உன் கையைப் புடிக் கலியே!'' ராஜாவிடமிருந்து நிர்த்தாட்சண் யமாய்த் தெறித்தன வார்த்தைகள். நெருப் பில் விழுந்த புழுவாய்த் துடிதுடித்துப் போனாள் விமலா.

''ராஜா... நீங்களுமா இப்படிப் பேச றீங்க?''

''பின்னே? நா எதுவும் சொல்லிட்டா முகத் திலடிக்கிற மாதிரிப் பேசிடுவீங்க. அவரு செயல்லியே காட்டத் துணிஞ்சிருக்காரு.... வாய மூடிக்கிட்டு வந்துட்டீங்க.''

நாராசமாய் அடுத்து அவன் உதிர்த்த வார்த்தைகளில் அக்கினிப் பிழம்பானாள் விமலா.

''நீங்களே சம்மதப்பட்டு அவரு கையைப் புடிச்சுக்கிட்டு என்கிட்ட மழுப்பினால் வேண்டான்னாயிருக்கு?''

மறுகணமே —


''ப்ளடி ராஸ்கல்'' என்று நிஷ்டூரமாய் அவனின் கன்னத்தில் அறை விழுந்தது. விமலாவுக்கு ரௌத்திரம் கொதித்தது. அலு வலகமே ஸ்தம்பித்து நின்று விட்டது. கையும் காலும் விறைப்பாய் ராஜா நின்றிருந்தான்.

குலைபதற ஓடிவந்தார் ஏ ஓ பாலசுப்பிர மணியம். அப்போதுதான் மேயை முடித்து விட்டு வந்து கொண்டிருந்தார். ''என்ன? என்ன? என்ன நடந்திச்சு?''

அரக்கப் பரக்கத் தாவி விசாரித்தார். எல் லோரும் அதிர்ச்சியில் வார்த்தை மறந்து நின்றிருந்தார்கள். அதிர்ந்து போய் நின்றி ருந்தான் ராஜா. கையில் சிலம்பில்லாத கண் ணகியாய் விமலா. அவரை நோக்கி வெறித் தாள் வெறுப்பாய்...

''பொம்பளைன்னா பொறுக்கின்னு நெனைக்கிறானுவ...'' என்று ஏகப் பொது வாய்க் கர்ஜித்து முழங்கினாள்.

எங்கோ வலித்தது போலிருந்தது ஏ.ஓ. வுக்கு. மௌனமாகத் தலைசாய்த்துக் கொண்டே தம் அறைக்குத் திரும்பினார்.



மறுநவை நேரில்...

ரா.நாகராஜன்

எக்ஸ்போர்ட் அப்ளிகேஷனை செக் செய்து கொண்டிருந்த போது ப்யூன் சுப்ர மணியம் அந்தத் தாளைக் கொண்டு வந்து கொடுத்தான்.

'மிஸ். லக்ஷ்மி வெயிட்டிங் அட் ரிசப்ஷன் கவுண்டர்.'

நல்லவேளை! பக்கத்து சீட்டில் பரம சிவனோ அல்லது ஸ்டெனோ ஜோசப்போ இல்லை.

லக்ஷ்மி முந்தா நாள் பார்த்துச் சம்மதம் சொல்லி விட்டு வந்த பெண்.

நண்பர்களுக்கு விஷயம் தெரிந்தால் கமெண்ட் அடித்துக் கலாட்டா செய்து விடு வார்கள்.

திடீரென்று எதிர்பாராத நேரத்தில் எதிர் பாராத நபர்!

கவுண்டரில் நாலைந்து பேர் காத்திருந் தனர்.

எல்லா அப்ளிகேஷன்களையும் வாங்கி வெயிட் வைத்து விட்டு மேலதிகாரியிடம் சொல்லி பெர்மிஷன் வாங்கி விட்டு ரிசப் ஷன் கவுண்டரை நெருங்க, நெருங்க மனம் படபடத்தது.

எதற்காக வந்திருக்கிறாள்? இந்தக் கல்யாணத்தில் இஷ்டமில்லையா? அவள் ஆபீஸில் யாரையேனும் காதலிக்கிறாளா? சே...! அப்படி என்றால் எவ்வளவு பெரிய அவமானம்?

பெண் பார்க்கப் போன படலம் மனத் தில் விரிந்தது.

அம்மா அக்கா, அப்பா நான் என்று நாலு பேர் மட்டும்தான் போனோம்.

பெண் பார்க்கும் படலம்தான் என்றா லும் அவர்கள் வீட்டில் நிறைய உறவுக்காரர்

புதுவித நகைத் திருட்டு!



பம்பாயில் தன்னை 'சஞ்சய் கோக்கலே' என்று சொல்லிக் கொள்ளும் நவீன தோற்றமுடைய ஓர் இளைஞன், புதுமுறை யில் நகைகளை அபேஸ் செய்கிறான்! தியேட்டர்கள் அருகே பஸ் ஸ்டாண்டுகளில் நின்று கொண்டிருக்கும் நடுத்தர வயதுப் பெண்களிடம் பேச்சுக் கொடுத்து அவர்கள் தங்கும் இடங் களைப் பற்றிய விவரம் அறிந்து, தான் டாக்ஸியில் செல்லப் போவதாகவும், அவர்கள் வீட்டிற்குப் பக்கத்தில்தான் தான் தங்குவதாகவும், அவர்களுக்கு லிஃப்ட் தருவதாகவும் கூறுகி றான்! வழியில் நகைக் கடையில் 'தன் அம்மாவிற்கு வளையல் வாங்க வேண்டும் என்று டாக்ஸியை நிறுத்துகிறான்; பையில் கைவிட்டு வளையலை மறந்துவிட்டது போல் நடித்து, 'எங்கள் அம்மாவின் கை அளவும் உங்கள் கை அளவும் ஒன்றுதான்; கொஞ்சம் மாதிரி அளவுக்கு உங்கள் வளையலைக் கொடுங் கள்' என்று வளையலை வாங்கிக் கொண்டு கடையில் நுழைந்து வேறு வழியே சென்று தலைமறைவாகி விடுகிறான். வளை யலைக் கொடுத்து ஏமாந்தவர்கள், பின்னர் டாக்ஸிக்கும் பணத்தைக் கொடுத்துவிட்டு நடையைக் கட்ட வேண்டியது தான்!

— ராஜீவி நரசிம்மன்.

கள் வந்து அமர்க்களப்படுத்தி இருந்தார்கள்.

லக்ஷ்மியின் வீணை மீட்டல்.. மயில் படம், பேங்க் வேலை அடக்கம் நிறைந்த அழகு எல்லாமே முதல் பார்வையிலேயே ஓகே சொல்ல வைத்தன.

''பெண்ணோட தனியா ஏதாவது பேசணுமா...?''

''அவசியம் இல்லே..''

''சும்மா தயங்காதேங்கோ. எதிர் ரூம் ஃப்ரீதான். தாராளமாப் போய்ப் பேசிட்டு வரலாம்.''

— பெண் வீட்டிலிருந்து ஒரு பெரியவர் சொன்னார்.

காலம்தான் எப்படியெல்லாம் மாறி விட்டது!

''ஏம்மா... நீ அவர்கிட்டே தனியாப் பேசணும்னு விரும்பறியா?''

பதிலுக்கு ஒரு பெண் லக்ஷ்மியைக் கிண்டல் செய்ய, கூட்டம் சிரித்தது.

அன்று பேச முடியாததை இன்று பேச வருகிறாளா...?

இன்னும் சில நிமிஷங்களில் என் வாழ்க்கையிலேயே பெரிய வெற்றி அல்லது தோல்வி நிச்சயமாகப் போகிறதா?

பெண் பார்த்து விட்டுப் பதில் சொல்லாமல் போகின்ற போது ஒரு பெண்ணின் மனமும் இந்தப் பாடுதானே படும்..

தூரத்திலிருந்தே லக்ஷ்மி கவனித்து விட்டாள்.

இன்று கட்டியிருக்கும் காட்டன் புடைவை அவளின் அழகை மேலும் கூட்டிக் காண்பிக்கிறது.

தலையோரம் சொருகி இருக்கும் ரோஜா இன்னமும் வாடாமல்....

''ஹலோ'' என்று ஒரு புன்னகையுடன் வரவேற்றேன்.

''ஸாரி வேலைக்கு நடுவுல கூப்பிட்டுட்டேன். பிஸியாயிருந்தேளா?''

''நோ... நோ. கான்டீன்ல போய்ப் பேசலாம்...''

நாலரை மணியாதலால் கேன்டீனில் கூட்டமில்லை.

இரண்டு ஸ்வீட்டும், டீயும் வாங்கிக் கொண்டு மேஜைக்கு வந்த போது —

எதிர்ப்புறம் தெரிந்த கடலையே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள் லக்ஷ்மி.

''எவ்வளவு அழகான இடம். ஆபிஸ் விட்டுப் போறதுக்கே மனசு வராது இல்லே...''

''ம்...''

''அப்புறம்...'' என்று கேட்டாள். பேச வேண்டியது அவள்தான். இந்தக் கேள்விக்குப் பிறகு பேச ஒன்றுமே இல்லாத மாதிரி தோன்றியது.

''ம்... வந்த விஷயத்தை மறந்து விட்டு நான் ஏதேதோ பேசறேன். நேத்து கணையாழில உங்க கவிதை படிச்சேன். ரியலா நான் அசந்துட்டேன். ரிஷபன்ங்கற புனைப் பெயர் உங்க பெயர்ன்னு உறைக்கவே எனக்கு ரொம்ப நேரமானது. அதான் உங்களை நேர்லே பார்த்து...''

அவள் பிறகு பேசியது எதுவுமே என் காதில் விழவில்லை. இந்த விஷயம்தானா... இதற்குத்தான் இந்தப் பரபரப்பா? அவள் பேசப் பேச நான் லேசாகிப் போனேன்.



அவருக்குக் காது கேட்காது. காது கேளாத பெண் ஒருத்தியை மணந்து கொண்டார். மணவாழ்க்கை மகிழ்ச்சிகரமாகவே அமைந்தது. ஒரு குழந்தையும் பிறந்தது. இதன் பிறகு, திடீரென்று அவர் மிகவும் வாட்டமுற்றுக் காணப்படுவதைக் கவனித்தார் அவர் நண்பர் கிரேமர். விசாரித்ததில் கணவனும், மனைவியும், இரவில் குழந்தை விழித்துக் கொண்டு அழுதால், தங்களுக்குக் காது கேட்காதே என்பதற்காக இரவெல்லாம் கண் விழித்துக் களைத்துப் போகிறார்கள் என்பது தெரிந்தது.

நண்பரின் நிலைமை கண்டு மனம் வருந்திய கிரேமர் அவருக்கு உதவ ஒரு புதிய கருவியை உருவாக்கினார். குழந்தையின் தொட்டில் அருகே ஒரு மைக்கைப் பொருத்திவிட்டு அதனை 'ஷேக்கர்' என்ற இக்கருவியுடன் இணைந்தார். பெற்றோர் தூங்கப் போகும் முன்பு ஷேக்கரைக் கைக்கடிகாரம் போல் அணிந்து கொள்ள வேண்டும். குழந்தை அழும் ஓசை ஒலிபெருக்கியை எட்டும்போது, அதனுடன் இணைக்கப்பட்டுள்ள ஷேக்கர் இலேசான அதிர்வுகளை ஏற்படுத்தி, தூங்கிக் கொண்டிருக்கும் நபரை எழுப்பிவிடும்!

இக்கருவி மெல்ல மெல்லப் பிரபலமடைந்து இப்போது வியாபார ரீதியாகவும் தயாரிக்கப்படவிருக்கிறது.

ஆதாரம்: நியூஸ் ஃப்ரம் இஸ்ரேல்.

தகவல்: சிதா.

அதிர்ஷ்ட தேவதை 3

ரங்கனுக்கு ரமணி ஒளி, திசை காட்டும் நட்சத்திரம், வழிகாட்டி. அவனுடைய வார்த்தைகள் வேதம். ஆபீஸ் முழுவதுமே ரமணியை எதிர்த்து நின்றாலும், ரங்கன் ரமணியின் கட்சி. ரங்கனை ஒரு மனிதனாக மாற்றியவனே ரமணி அல்லவா? சென்னையில் திசை தெரியாமல் அலமந்து கிடந்த போது, அவனுக்கு ஆதரவு காட்டித் தன் வீட்டில் சில மாதங்கள் அடைக்கலம் கொடுத்து, அதன் பிறகு இந்த ஆபீசில் ஒரு வேலையும் வாங்கிக் கொடுத்து வாழ வைக்கிறவன் ரமணிதானே?

இதுவரையில் ரமணி ஒரு கோட்டைக் கிழிக்கவும் ரங்கன் வாய்ப்புக் கொடுத்தது இல்லை. ஆனால் கல்யாணம் என்னும் மாய மான் அவனை இழுக்க முயற்சி செய்கிற போது, அதை ஓடிப் பிடிக்க அவன் துடிக்கிற போது, ரமணி அழுத்தமாக ஒரு கோட்டைக் கிழிக்கிறான். ரங்கன் அதைத் தாண்டக் கூடாது என்று கட்டளையிடுகிறான். ஏன்?

அவன் ஏன் ஒரு பெண்ணை முறைப்படித் திருமணம் செய்து கொண்டு, அப்பா, தாத்தா, தாத்தாவின் அப்பா, தாத்தாக்களைப் போல, தாம்பத்தியம் எனும் உலகில் பிரவேசிக்கக் கூடாது? இதில் ரமணிக்கு என்ன நஷ்டம்?

யாரை அவன் தெய்வமாகப் பாவித்து வழிபட்டுக் கொண்டிருக்கிறானோ அவனே இப்போது அவனுடைய தாம்பத்திய ஆசைக்கு முட்டுக்கட்டை போடுகிறான்! அவன் குள்ளம்தான், சோனிதான். ஒரு தடவை ஜுரத்தில் விழுந்த போது ரமணிதான் ஒரு டாக்டரிடம் அழைத்துக் கொண்டு போனான். அப்போது, ரத்த சோகையால் உடல் பலவீனமாக இருக்கிறது என்று டாக்டர் கருத்துத் தெரிவித்து, ரங்கன் நிறைய காய்கறிகளும், பழங்களும், முட்டையும் சாப்பிட வேண்டும் என்றார். ஜுரம் தணிந்த பின் ரங்கன் டாக்டரையே மறந்து போனான். ரமணி தன் கைக்காசிலிருந்து வாங்கிக் கொடுத்த சாத்துக்குடிப் பழத்தை ஏழெட்டு நாட்கள் சாப்பிட்டான். அவன் ஒடிசலாக இருக்கிறானாம். சாதுவாம். பெண்டாட்டி ராட்சசியாக அமைந்து விட்டால் வாழ்க்கை ரணகளமாகிவிடுமாம். இப்படியெல்லாம் ஏன் ரமணி சொல்லி அவனைத் தளர வைக்க முயற்சி செய்ய வேண்டும்?

ஆபீஸ் கடிகாரம் ஆறு அடித்தது. எல்லோரும் போயாகி விட்டது. கம்பெனி அதிபர் விசேஷச் சலுகையாக, ரங்கன் ஆபீஸிலேயே தங்கிக் கொள்ள அனுமதித்திருக்கிறார். தங்குவதற்குத் தனி இடம் தேடினால் குறைந்தது ஒரு சிறிய குடிசைக்கு ஐம்பது ரூபாயாவது அழ வேண்டும். அந்தப் பணம் இப்போது மிச்சம்.

ரமணி ஏன் இப்படிப் புத்தி சொல்லுகிறான்? தனக்குக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்ற ஆசை இருக்கிறது என்று தெரிந்தும் ரமணி, 'மயில்சாமி நல்லவன் இல்லை. அவன் பெண் தனம் உனக்கு ஏற்றவள் இல்லை... நீ கல்யாணம் பண்ணிக்கவே வேண்டாம்' என்றெல்லாம் கூறுவானேன்?

முதன் முறையாக ரமணி மீது கோபம் வந்தது. ஆயிரம் உதவிகள் செய்திருக்கிற காரணத்தினால் ஓர் அநீதியை நண்பன் இழைப்பதாகத் தோன்றியது.

திடீரென்று ஆள் அரவம் கேட்டது.

"என்ன தம்பி, செலையாக் குந்திக்கிட்டுக் கண்ணீர் வுடறே?"

வாட்ச்மேன் மயில்சாமி அங்குமிங்கும் கறைகளால் அலங்கரிக்கப்பட்ட காக்கி உடுப்பில் எதிரே நின்றான்.

ரங்கன் பதில் சொல்லவில்லை. மனத்தின் சிணுங்கல் கேவலாக மாறியது.

"எனக்கு யார் அழுதாலும் புடிக்காது, தம்பி! என்ன விசயம்? யார் என்ன சொன்னாங்க? என் கையிலே வுடு. பெசைஞ்சு எடுத்துடறேன்."

"ஒண்ணுமில்லே, மயில்சாமி."

"பின்னே என்னாத்துக்குப் பொம்பளை கணக்கா அளுவறே?"

"ஒரு சந்தேகம் மயிலு."

"என்னா அது சந்தேகம்?"

"நான் குச்சியாவா இருக்கேன்? என் ஒடம்பிலே தெம்பு இல்லியா?"

"அதுக்கு என்னா இப்ப?"

"என்னை மாதிரி ஆளுங்க கல்யாணம் கட்டிக்கக் கூடாதா?"

"எந்த மடப்பய சொன்னான்?"

"யார் சொன்னா என்ன மயிலு? நீ பதில் சொல்லு."

"பதினெட்டு வயசிலே நான் எப்படி இருந்தேன் தெரியுமா? பயத்தங்காக் கணக்கா! பசங்களெல்லாம் எலும்பை எண்ணிப் பார்ப்பாங்க... இப்ப எப்படி இருக்கேன் பாரு! வஸ்தாது மாதிரி இல்லே?"

"நீ என்ன சொல்றே மயிலு?"

"நீ ஜோரா, படா ஜோராக் கல்யாணம் கட்டிக்கலாம் தம்பி! அது கூடாதுன்னு இந்த அப்பன்காரனுக்குப் பட்டிருந்தா, என் பொண்ணையே உனக்குக் கட்டி வைக்க ஆசைப்படுவேனா?"

"அப்ப கல்யாணம் செஞ்சுக்கலாம்னு சொல்றியா, மயிலு?"

''என் பொண்ணை உனக்குப் பிடிச்சிருக்கு, இல்லே?''

''தனத்தைப் பிடிச்சுப் போச்சுன்னு முத வாட்டியா பார்த்தப்பவே சொல்லிட்டேனே, மயிலு!''

''அப்ப சல்தியா அவளைக் கட்டிக்க! அடுத்த வருசமே அவ ஒன் புள்ளையை — என் பேரப் பையனைக் குடுப்பா!''

''உண்மையாலுமா, மயிலு?''

''பொண்டாட்டி புருசனா ரெண்டு மாசம் வாய்ந்தாலே போதும் தம்பி, கொளு கொளுன்னு ஆவுறதுக்கு!''

''அப்ப என் உடம்பிலே சதை ஏறும்னு சொல்றியா?''

''இதிலே இன்னா சந்தேகம் உனக்கு? இந்தப் பயத்தங்கா பூசனிக்கா மாதிரி ஆச்சு! நீயும் ஆயிடுவே... சரி, எதுக்குச் சும்மாச் சும்மா இந்தப் பேச்சு? இந்த ஞாயித்துக் கிளமை, நம்ப ஊட்டுக்குச் சோறு துன்ன நீ வரப் போறேன்னு தனம் கையிலே சொல்லிட்டேன். பலான பணியாரமெல்லாம் செய்யப் போறதாச் சொல்லிச்சு. உனக்கு ஒரு விசயம் தெரியுமா தம்பி?''

''என்ன மயிலு?''

''அதுக்கு உன்னைப் பிடிச்சுப் போச்சு.''

ரங்கன் ரமணியை அக்கணம் அடியோடு மறந்து போனான்.

''கல்யாணத்தை எங்கே வைச்சுக்கலாம், மயிலு?''

''என் ஊட்லேயே வைச்சுக்கிட்டா ஏகப்பட்ட சனம் வரும். நான் இன்னா சொல்றேன்னா...!''

''சொல்லு, மயிலு!''

''உன் ஊட்டு ஆளுங்க யாரெல்லாம் வருவாங்க, தம்பி?''

''யாரும் இல்லே.''

''ஏன் அண்ணங்காரன் தம்பிக்காரன் அல்லாரும் இருக்காங்களே! ஒரு அக்கா கூட இருக்குது இல்லே?''

''அவங்க யாரும் எட்டிக் கூடப் பார்க்க மாட்டாங்க!''

''அப்ப ரொம்ப சுளுவாப் போச்சு!'' என்ற மயில்சாமி, ''எனக்கும் ஒரு அஞ்சாறு பேர்தான் இருக்காங்க!'' என்றான்.

''ரமணி சார் வரணும். மாலு அம்மா அப்புறம் கிச்சா எல்லோரும் வரணும்!''

''இவங்களெல்லாம் வேணாம், தம்பி! அவுங்களுக்குன்னு கல்யாணத்தைப் பெரிசா நடத்தணும். ஏன் அனாவசியச் செலவு செய்யறே? இதைக் காதும் காதும் வைச்சாப்பல நடத்திப்புடுவோம்.''

''மயிலு... மயிலு... நீ இப்ப என்ன சொன்னே?''

''அவங்கள்லாம் வேணாம்னேன்! ஏன் தப்பா?''

''அது இல்லே... செலவு பத்திப் பேசினியே, அது?''

''ஏன் இன்னாத் தப்பு? எங்க ஊர் வளக்கம், புள்ளை ஊட்டார்தான் கல்யாணச் செலவு செய்யணும். பொடவை, தாலி எல்லாம் புள்ளை செலவு. தனம் காதிலே



ஜிமிக்கி போட்டுட்டிருக்கு... அவ அம்மாவோட ஒரு சோடி வளையல் இருக்கு... அதையும் கொடுத்துடறேன்.''

ஒரு சில நிமிடங்கள் ரங்கன் சோர்ந்து போனான். தனத்துக்கு இருநூறு ரூபாயில் ஒரு புடைவையும், தங்கமுலாம் பூசிய நகைகள் கொஞ்சமும் வாங்கத்தான் அவன் திட்டம் போட்டிருந்தான். இப்போது மயில்சாமி ஒரு குண்டை அல்லவா போடுகிறான்?

''நீ இன்னா யோசிக்கிறே, தம்பி! இஸ்டம் இல்லாட்டி சொல்லிடு. கண்ணப்பன்னு நம்ப தெருப் பையன் ஒருத்தன் என் பொண் மேலே வலைவிசிக்கிட்டிருக்கான். பஸ் கம்பெனியிலே, ஐந்நூறு ரூபா வாங்கறான். ஆனா உன்னைத் தனத்துக்குப் பிடிச்சுப் போச்சு! உனக்கு இப்ப இஸ்டம் இல்லாட்டி சொல்லிடு. அந்தப் புள்ளைக்கு என் பொண்ணைக் கட்டி வைச்சுடறேன்!''

மயில் சொல்லிவிட்டு, பீடியை வாயில் வைத்துக் கொண்டான். கை பாண்ட் பாக்கெட்டுக்குள் தீப்பெட்டியைத் தேடிக் கொண்டிருந்தது.

ரங்கனுக்கு வியர்த்தது.

தனம் இன்னொருத்தனுக்கா?

பல நாட்களாக ஒவ்வோர் இரவும் தனம் அவன் சொப்பனத்தில் வருகிறாள். சிரிக்கிறாள். அவன் அருகே உட்காருகிறாள். படுக்கிறாள். அப்படிப்பட்ட தனம் இன்னொருவன் கைக்குப் போவதா?

''இஷ்டம் இல்லேன்னு நான் எப்ப சொன்னேன், மயிலு? செலவுதான் அதிகமாயிடுமோன்னு பயமாயிருக்கு.''

''செலவே இல்லாம எப்படித் தம்பி, உன்னால ஒரு பெண் கழுத்திலே தாலி கட்ட முடியும்? செலவைக் குறைக்கணும். அவ்வளவுதானே? கந்தசாமி கோவில் பக்கத்திலேயே இருக்கு. நடந்தே பூடலாம். அங்கே கட்டிடு தாலியை!''

வேறு வழி தோன்றாமல் ரங்கன் தலையாட்டினான்.

1986 — டிசம்பர் 7 — ஞாயிறு.

பிடாரி அம்மன் கோவில் தெருவிலிருந்து கிளைவிட்ட ஒரு சிறு சந்தில் கட்டிப் போட்ட எருமைகளுக்குத்தான் இடம் இருந்தது. சாணியும், எருமையின் கழிவுநீரும் சின்னாபின்னமாக்கப்பட்ட வைக்கோல் பிரிகளும் சந்தை அலங்காரம் செய்தன. தன் கிராமத்துக் கால்களுக்குச் செருப்பு அனாவசியம் என்று பட்டணத்துக்கு வந்த அன்று எடுத்த முடிவை, ரங்கன் இன்னும் மாற்றிக் கொள்ளவில்லை. ரமணி பர்மாபஜாரில் மலிவான விலையில் சிங்கப்பூர் செருப்பு வாங்கிக் கொடுத்திருந்தான். அதை ரங்கன் ஆபீசுக்குள் மட்டுமே உபயோகித்தான். இப்போது செருப்பு இல்லாமல் இந்தச் சந்துக்குள் நடந்து வரும்போது, தன்னைத் தானே பாராட்டிக் கொண்டான். செருப்பு இந்த அசுத்தத்தில் வீணாகியிருக்கும். கால்களை அலம்பிச் சுத்தம் செய்து விடலாம். செருப்பு அப்படியா?

ஓடு வேய்ந்த ஒரு சிறு வீட்டின் முன் பக்கத்து அறையில் தனம் அவனுக்காகக் காத்திருந்தாள்.

''வாய்யா... நீ பத்தரை மணிக்குத்தான் வருவேன்னு அப்பா சொன்னாரு. இப்ப மணி ஒம்பதே முக்கால்தானே ஆவுது?''

வலது கையில் கட்டியிருந்த கைக்கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே தனம் பேசினாள்.

''என்னமோ வரணும் போலத் தோணிச்சு. அதான் வந்தேன். மயில்சாமி இல்லியா?''

''இருக்கிறது ஒரு ரூம்பு. இதிலே நான் ஒருத்திதான் இருக்கேன். அப்பா இல்லியான்னு கேட்கிறியே?''

''ஒரு பேச்சுக்குக் கேட்டேன், தனம்!''

''உனக்கு என்னைப் பிடிச்சுப் போச்சுன்னு அப்பா சொன்னாரு.''

ரங்கன் பதில் சொல்லவில்லை.

''எனக்கும் ஒன்னைப் புடிச்சுப் போச்சுய்யா... நெசத்தைச் சொன்னா, உன் வளுக்கைத் தலை, குச்சி உடம்பு, கட்டை வெரல் உசரம் இதையெல்லாம் பார்த்து எந்தப் பொண்ணுக்கும் ஒன்னைப் புடிக்காது. ஆனா எனக்குப் புடிச்சுப் போச்சு! ஏன் சொல்லு, பார்ப்போம்!''

''தெரியலே, தனம்!''

''நீ சாது ஐயா... நல்ல ஆம்புளை. அப்பா சொன்னாரு. நீ காக்காசு அனாவசியமாச் செலவு செய்ய மாட்டேன்னு.''

தனம் அவனைத் தாண்டி வந்து, கதவைச் சாத்தினாள்.

''அப்பா வர்றதுக்கு இன்னும் ஒரு மணி நேரமாகும்...'' என்று சொன்னவள், அவன் அருகே வந்தாள்.

''குந்துய்யா.''

உட்கார்ந்தான்.

அவள் அவன் அருகே அமர்ந்தாள்.

''நீ நல்ல புள்ளை!''

சொன்னவள் அவனுடைய கன்னத்தை வருடினாள்.

ரங்கனுடைய உடல் பரபரத்தது. கூடவே

''இவ்வளவு பெரிய வீட்டைக் கட்டின ஜட்ஜ், நிலைப்படியை மட்டும் ஏன் இவ்வளவு சின்னதா வெச்சார்?''

''வர்றவங்க நீதிக்குத் தலைவணங்கணும்னுதான்!''

— இமை. அ. கதிர்வேல்

ஒரு பயம் கவ்விக் கொண்டது. இவள் என்ன செய்யப் போகிறாள்?

"வேண்டாம்" என்று நடுக்கத்துடன் தலையாட்டினான்.

ரங்கன் தன் கையை மேலும் அவளிடமிருந்து விலக்கிக் கொள்ள, தனம் அவனுடைய இரு கைகளையும் பற்றி இழுத்து முகத்தின் மீது வைத்துக் கொண்டாள்.

"எனக்கு ஆசையா இருக்குதய்யா!"

தட்டுத் தடுமாறி, ரங்கன், "நமக்கு இன்னும் கல்யாணம் ஆகலே!" என்றான்.

"போய்யா நீ... இவ்வளவு நல்லவனாவும் இருக்கக் கூடாது!"

சொல்லிவிட்டுத் தனம் எழுந்தாள்.

சிரித்தாள்.

பற்களின் வெண்மை சூரிய ஒளியாக அவன் கண்ணைக் கூச வைத்தது.

அன்று ஆபீசுக்குத் திரும்புகையில் ரங்கனுடைய நடையில் அவன் உணர்ந்து அறியாத மிடுக்கு இருந்தது. வழியில் தென்பட்ட எல்லாப் பெண்களுமே தனமாகக் காட்சியளித்தார்கள்.

என்ன அழகான கறுப்பு!

என்ன வாளிப்பான உடல்!

இப்போதே அவன் மீதுதான் எவ்வளவு ஆசை!

தான் பிறந்த பிறவிக்கு ஓர் அர்த்தம் பிறந்துவிட்டதாக ரங்கனுக்குத் தோன்றியது.

1986 — டிசம்பர் 8 — திங்கள்.

ரங்கன் தலைதாழ்த்தி மிகவும் பணிவாக ரமணியின் முன் நின்றான்.

"என்ன ரங்கா, என்னாச்சு?"

உடனே ரங்கன் பதில் சொல்லவில்லை. மௌனம் சாதித்தான்.

"சொல்லு. பயப்படாம சொல்லு. நான் கோபிச்சுக்க மாட்டேன்."

"பணம்."

"உன் பணம். அதைப் பத்திப் பேச ஏன் இப்படி உடம்பை வளைச்சுக் குழையறே?"

"ஆயிரம் ரூபா!"

"எத்தனையானா எனக்கு என்ன? இந்தா பாஸ்புக்! நீயே போய் பாங்க்லேர்ந்து எடுத்துக்க! ரமணி வலதுபுற டிராயரைத் திறந்து பாஸ் புத்தகத்தை எடுத்து மேஜை மேல் போட்டான்.

"ரமணி சார் என் பேர்லே கோபமா இருக்கீங்க!"

"நான் யாரு உன் மேலே கோபிச்சுக்கிறதுக்கு?"

"நீங்கதான் எனக்கு எல்லாம், ரமணி சார்!"

"என் காதுலே பூ சுத்தாதே! நான்தான் எல்லாம்னா என் பேச்சுக்கு நீ மதிப்பும் மரியாதையும் கொடுத்திருக்கணும்! சரி, சரி, பாஸ் புக்கை எடுத்துக்கிட்டுப் போ! இனிமேல் அதை நீயே வைச்சுக்க..."

"ரமணி சார்!"

"என்னிக்குக் கல்யாணம்?"

"வர்ற வெள்ளிக்கிழமை!"

"எங்கே?"

"கந்தசாமி கோவில்லே!"

"நான் உண்டா?"

"நீங்க மட்டும்தான் உண்டு. மாலு அம்மா கூடக் கிடையாது."

"ஆழம் தெரியாமக் குட்டையிலே காலை வைக்கிறே! மயில்சாமி ஒரு முதலை. அவன் பொண்ணு அவனையே முழுங்கற பெரிய முதலை... இப்ப நான் சொல்றப்ப வேம்பாக் கசக்கும்! நாளைக்கு அனுபவிக்கிறப்ப இன்னிக்கு நான் சொல்றதெல்லாம் நினைவுக்கு வரும்... போ... பணத்தை எடுத்து மயில்சாமி தலையிலே கொட்டு."

கண்ணீர் மல்க ரங்கன் வங்கிப் புத்தகத்தை எடுத்துக் கொண்டான்.

அவன் நகரும் போது —

"ரங்கா!"

"என்ன ரமணி சார்."

"பாஸ் புக்கை இப்படிக் கொடு!"

"ஏன் சார்?"

"மொதல்லே கொடு."

ரங்கன் நீட்ட, 'லபக்'கென்று பறித்துக் கொண்டான்.

"ரமணி சார்... மறுபடியும் பிடிவாதமா என் கலியாணத்தை எதிர்க்கறீங்களே? இது உங்களுக்கே நல்லாயிருக்கா?"

"மத்தியானம் மூணு மணிக்கு என்னை வந்து பாரு!"

"அப்ப பாங்கு மூடியிருக்குமே!"

"சொன்னதைக் கேளு... போ!"

கோபமும், அழுகையுமாய் ரங்கன் ஹாலின் மூலையைத் தஞ்சம் அடைந்தான்.

டைப் அடிப்பதை நிறுத்திவிட்டு, "என்ன ரங்கா, என்னாச்சு? மாலுவைக் கொஞ்சறதை உட்டுட்டு ரமணி உன்கிட்ட சாடினானே, எதுக்கு?" என்று சுகந்தி கேட்டாள்.

தன் நிலையை யாரிடமாவது சொல்லி அழ வேண்டும் போலத் தோன்றியது, ரங்கனுக்கு.

சுகந்தி இடைத்தாள். ஆனால் கல்யாணத்தைப் பற்றிப் பேசவில்லை. அது ரகசியம்.



(தொடரும்)



கே. ஷிவப்ரசாத் என்று புதுமுக டைரக்டர் பேர் போட்டிருந்தாலும் எத்தனையோ எம்.ஜி.ஆர். களம் கண்டிருக்கும் இயக்குனர் கே. சங்கர், எடிட்டிங் என்ற பெயரில் இதில் பதுங்கியிருக்கிறாரே. அவரது ஆதிக்கம் தெரிகிறது. இருக்காதோ பின்னே? ஷிவப்ரசாத் அவருடைய வாரிசாமே!

அதற்காக ஆனாலும் அநியாயத்துக்கு இத்தனை கனவுக் காட்சிகளா? சின் செட்டிங்குகளாகட்டும் காமெரா வித்தையாகட்டும் இந்தக் காட்சிகளில்தான் அள்ளிக் கொண்டு போகின்றன.

கார்த்திக்கிடம் ராணுவ அதிகாரியின் மிடுக்குக்கும் தோரணைக்கும் பஞ்சமில்லை. ரஞ்சனி தன்னைக் காதலிக்கிறாள் என்ற உணர்வே இல்லாத, கல்மிஷமில்லாத நெருக்கம் காட்ட வேண்டிய நிர்ப்பந்தம். அதனால் ஒரு கிளுதான். இன்னொரு கிளு மிஸ்ஸிங்!

இரும்பவும் கிராமத்து ரஞ்சனி. கிராமத்து மருட்சியையும் வெகுளித்தனத்தையும் அப்படியே உணர்த்தும் அப்பாவி பிராண்ட் வதனம். இருந்தாலும் மழையில் நனைந்து காதலன் காய்ச்சல் வரவழைத்துக் கொண்டதற்காக ரஞ்சனி தானும் நனைந்து அந்தக் கஷ்டத்தை அனுபவிப்பதாய்ச் சொல்வது அதிகப்படி.

கார்த்திக்கின் தாயார் மனோரமா படா ஜீனியஸ். சுபாவத்தில் கேளாச் செவியரான அவர், லிப்ரீடிங் எக்ஸ்பர்ட்! உற்றுப் பார்த்து ஒரொரு சமயம் கரெக்டாய்ச் சொல்லி, 'எனக்குக் காது கேக்காதுன்னு பார்த்தியா? அப்பப்ப கேக்கும்,' என்று சமாளிப்பதும், தப்பாய்ப் புரிந்து கொள்வதற்குத் தானே சமாதானம் சொல்லிக் கொள்வதும் — சத்தியம் செய்யலாம், மனோரமாவால் மட்டும்தான் முடியும்!

மிலிட்டரி நம்பியார் மகளைத் தவறாகப் புரிந்து கொண்டு ஆர்ப்பாட்ட அதட்டல் எழுப்புவதென்ன; மகளைப்புரிந்துகொண்ட பிறகு அந்த முகம் கனியும் விதமென்ன — சீனியர் இல்லையா?

கிராமப் பிரமுகர் ஜெய்கணேஷ் நெகிழ்த்தியிருக்கிறார்.

ரஞ்சனியின் தங்கை புதுமுகம் அபூர்வா— வடக்கத்திச் சரக்கோ? — படித்த மாடர்ன் மங்கையாய் இருக்கலாம். அதற்காகக் காபரே டான்ஸர் உணர்வை ஏற்படுத்தியிருக்க வேண்டாம். இருந்தாலும் கிளைமாக்ஸ் காட்சியில் உருக்கி விடுகிறார்.

ரஞ்சனி தன்னை வெறுப்பதற்கு, கார்த்திக்கிடம் கொண்ட காதல்தான் காரணம் என்பதைப் புரிந்து கொண்ட கணத்திலிருந்து ரஞ்சனியின் காதல் வெற்றி பெற முயற்சி மேற்கொள்கிறாரே, புதுமுகம் ஜோதி சந்திரா (ஷர்மிலி) அடக்கமாகவே சாதித்திருப்பதாய்ச் சொல்லலாம்.

தரகர் ஒருவிரல் கிருஷ்ணாராவ் ரொம்ப வித்தியாசமாய்த் திக்கியிருக்கிறார். இலுப்பைப் பூ சர்க்கரை.

இரண்டு குடும்பத்ினருக்கும் போட்டோ பிடித்துக் கொள்ளும் வழக்கமில்லை என்ற கதை, ஜாக்கிரதைக்காகச் சொன்னாலும் ஏற்றுக் கொள்கிற மாதிரி இல்லை.

உச்சகட்டத் திருப்பம் செயற்கைதான் என்றாலும் அது இல்லாதிருந்தால் படம் இயற்கை எய்தி இருக்கும்.

— பி. எஸ். எஸ்.

ஆளுங்கட்சியைத் திணற வைக்கும் அறிமுக எம்.எல்.ஏ.

குற்றாலம் இவர் தொகுதியில் உள்ளது என்பதாலோ என்னவோ, சட்டசபையில் அருவியின் ஆரவாரத்தைக் கொண்டு வருவதில் வல்லவராக இருக்கிறார் பீட்டர் அல்போன்ஸ். தென்காசி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த இ. காங்கிரஸ் எம். எல். ஏ. தான், இலங்கையிலிருந்து திரும்பிய இந்திய அமைதிப்படையை வரவேற்க, முதல்வர் செல்லாதது குறித்த விவாதத்துக்குப் பிள்ளையார் சுழி போட்டவர்! இத்தனைக்கும் முதன் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அறிமுக உறுப்பினர் இவர்!

மூப்பனாரின் பரம சிஷ்யரான இவரது சொந்த ஊர் தென்காசிக்கு அருகிலுள்ள சேந்தமரம். பள்ளி, கல்லூரிப் படிப்பைப் பாளையங்கோட்டையில் முடித்துவிட்டுச் சட்டம் பயிலச் சென்னை வந்தார். சட்டக் கல்லூரியில் நுழையும் போதே அரசியலிலும் நுழைந்து விட்டார். ''சட்டக் கல்லூரி மாணவர் பேரவைச் செயலாளராக இருந்த போது, காமராஜர் அவர்களைத் தினந்தோறும் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது'' என்று பெருமையோடு சொல்லிக் கொள்கிறார்.

இளம் வயதிலேயே நெல்லை மாவட்ட காங்கிரஸ் தலைவராக இந்திரா காந்தியால் நியமிக்கப்பட்ட பீட்டர் அல்போன்ஸ், கட்சிக்குள் தமக்கு எதிர்கோஷ்டியாகச் செயல்பட்ட பெரும்புள்ளிகளையெல்லாம் சமாளிக்க வேண்டியிருந்ததாம். ''84 தேர்தலிலேயே நான் போட்டியிட்டிருக்க வேண்டியவன். அப்போது தென்காசித் தொகுதியை சிவாஜி மன்றத்தாருக்கு விட்டுக் கொடுக்க வேண்டியிருந்ததால், அந்த வாய்ப்பு இல்லாமல் போனது. இப்போது எனக்குக் கிடைத்த வெற்றி என்பது, மதச்சார்பின்மைக்குக்கிடைத்தவெற்றி. காரணம், சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த எனக்கு எதிராக, மாற்றுக் கட்சியினர் மதவெறியைத் தூண்டிவிட்டும் அதையெல்லாம் புறக்கணித்துவிட்டு, மக்கள் எனக்கு வாக்களித்திருப்பதுதான்!''

சட்டசபையில் ஆளுங்கட்சியினரைத் திணற வைக்கும் அளவுக்குப் பிரச்னைகளைப் பேசினாலும் ''கலைஞர் தமிழில் பெற்றுள்ள புலமைக்காகவும், முதிர்ந்த அரசியல் தலைவர்களுள் ஒருவர் என்பதாலும் கொள்கை வேறுபாடுகளுக்கு மத்தியிலும் கலைஞரை மிகவும் மதிக்கிறேன்'' என்கிறார் நாற்பது வயதாகும் பீட்டர் அல்போன்ஸ்.

இவர் திருப்திப்பட்டுக் கொள்ளும் ஒரு விஷயம்: சட்டசபைப் பொதுக் கணக்குக் கமிட்டியின் தலைவராகச் செயலாற்றி, ஒரே வருடத்தில் ஏழு வருடக் கணக்கைச் சரிபார்த்தது. சலித்துக் கொள்வது: அரசு இன்னமும் குற்றாலம் டவுன்ஷிப் கமிட்டியை அமைக்காதது.

— ப்ரியன்



படம்: ரமணன்

அருள் உள்ளங்களுக்கு ஒரு வேண்டுகோள்

இதய நோயாளியான நான், இரண்டு வால்வுகள் மாற்றத்திற்கான திறந்தமுறை அறுவை சிகிச்சை (open heart surgery for double valve replacement) சென்னை, இதய நோய் சிகிச்சை நிறுவனத்தில் செய்து கொள்ள இருக்கிறேன். அதற்கு ரூ. 70,000/- தேவைப்படுகிறது. இப்பெருந்தொகை எனது சக்திக்கு அப்பாற்பட்டதென்பதாலும் அறுவை சிகிச்சை அதிவிரைவில் செய்யப்பட வேண்டுமென்பதாலும் தங்களைப் போன்ற அருள் உள்ளங்களின் உதவியை நாடுகிறேன்.

எனவே தயைகூர்ந்து சற்று தாராளமாக நிதியுதவி அளித்து எனது உயிர்காக்க வேண்டுகிறேன். தயைகூர்ந்து நிதியுதவியை எனது முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

41, அண்ணாமலை தெரு,
தருமபுரி - 636 701

தங்கள் நன்றியுள்ள,
எஸ். நஞ்சுண்டேஸ்வரன்.

சுதா: வளர்பிறைக் கலைஞர்



திறமை வாய்ந்த இளம் பாடகர்களை ரசிகர்களுக்கு அறிமுகம் செய்வது போல் முன்னுரை வழங்கி, அவர்கள் நிகழ்ச்சிகளும் அடங்கிய காஸெட்டுகளை ஒன்றன் பின் ஒன்றாகத் தயாரிக்க ஒத்துழைப்புத் தந்தார் வித்வான் மகாராஜ புரம் சந்தானம். அவர் தேர்ந்தெடுத்த இளம் பாடகர்களுள் ஒருவர் சுதா ரகுநாதன். ''அந்த காஸெட்டுக்கான ரிகார்டிங்குக்குச் சுதாவை வரச் சொல்லி, என்ன பாட வேண்டும், எத்தனை நேரம் பாட வேண்டும் என்பதைச் சொன்னேன். ஒரே டேக்கில் ரிக்கார்டிங் முடிந்து விட்டது! சுதா திறமையும் ஞானமும் மிக்க பாடகி. கற்பனை வளம் நிறைய இருக்கிறது; லய வேலைப்பாடுகளில் அழகு இருக்கிறது. எம். எல். வி. யின் சிஷ்யைகள் எல்லோருமே நன்றாகப் பாடுகிறார்கள். அவர்களில் சுதா குறிப்பிடத்தக்க திறமை பெற்றிருக்கிறார். இளைய தலைமுறையைச் சேர்ந்த பெண் பாடகர்களுள் கர்நாடக சங்கீதத்துக்குப் பெருமை சேர்க்கக் கூடியவர் இவர். அனுபவ மெருகு ஏற ஏற, சுதாவின் பாட்டு மேன்மேலும் சிறக்கும்'' என்று குறிப்பிட்டார் சந்தானம்.

சுதாவை அவரது இல்லத்தில் சந்தித்தோம்...

“முடியாது! ம்ஹூம்... என்னால் முடியவே முடியாது — இந்த வார்த்தைகளைச் சொன்னபடிதான் நான் இசையுலகத்தில் அடியெடுத்து வைத்தேன்...'' என்று சிரித்தபடி சொன்னார் சுதா ரகுநாதன்.

''ஆச்சரியம்தான்! இன்றைக்கு உங்களுடன் டெலிபோனில் பேசக்கூட அப்பாயின்ட்மென்ட் வாங்க வேண்டும் போலிருக்கிறதே! அவ்வளவு 'பிஸி'யான கர்நாடக இசைக் கலைஞராக இருக்கிறீர்கள்...! எந்த சந்தர்ப்பத்தில் இப்படி அவநம்பிக்கையுடன் பேசினீர்கள்?'' என்று கேட்டோம் சுதாவிடம்.

''அந்தச் சந்தர்ப்பத்தைப் பற்றிக் கூறுமுன் கொஞ்சம் பழைய கதையையும் சொல்ல வேண்டும்'' என்று ஆரம்பித்தார் சுதா.

''என் அம்மா சூடாமணி நன்றாகப் பாடுவார். ஒரே ஒருமுறை மேடைக் கச்சேரி கூட செய்திருக்கிறாராம். அப்போது 'எம். எஸ். குரல் போலவே இருக்கே' என்று விமர்சித்தார்களாம். ஆனால் திருமணமான பிறகு அம்மாவின் பாட்டுத் திறமை வீட்டுக்குள்ளேயேதான் அடங்கி விட்டது. அவரிடம்தான் நான் பாட்டுக் கற்றுக் கொள்ள ஆரம்பித்தேன். எல்லா குடும்பங்களிலும் பெண் குழந்தைகள் பாட்டுக் கற்றுக் கொள்வதைப்

போல் 'நாலு பாட்டு தெரிந்திருக்க வேண்டும்' என்ற நோக்கம்தான் அப்போது இருந்தது. பதின்மூன்று — பதினாலு வயது ஆன போது சென்னை ஆர். ஆர். சபாவில் நடந்த இசைப் பள்ளியில் என் பெற்றோர் என்னைச் சேர்த்தார்கள். அப்போதுதான் இசைப் போட்டிகளில் பங்கேற்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. நினைத்ததைச் சாதித்து விட வேண்டும் என்ற தீவிரமும் 'எடுத்த காரியம்யாவிலும் வெற்றியே பெற வேண்டும்' என்ற உறுதியும் — ஒருவிதப் பிடிவாதம் என்று கூடச் சொல்லலாம் — எனக்கு இயல்பாகவே உண்டு. அதனால் பாட்டுப் போட்டிகளின் சவால் எனக்குப் பிடித்திருந்தது. பல பரிசுகள் பெற்றேன். அதே சமயத்தில் படிப்பிலும் முன்னணியில் விளங்கி, டாக்டராக வேண்டும் என்று ஆசை....

"பள்ளியிறுதித் தேர்வில் மிக நல்ல மதிப்பெண்கள் பெற்று, டாக்டர் படிப்புக்கு அஸ்திவாரமாக, எத்திராஜ் கல்லூரியில் பி. யூ. ஸி. யில் விஞ்ஞானப் பிரிவில் சேர்ந்தேன். கல்லூரியிலும் பாட்டுப் போட்டிகளை விட்டு வைக்கவில்லை. கல்லூரிப் பேராசிரியர்களும் தலைமையாசிரியையும் எனக்கு அளித்த ஊக்கம் அளவில்லாதது. அதை என்னால் மறக்கவே முடியாது.

"பி. யூ. ஸி. படிக்கையில் உயிரியல் ஆய்வுக் கூடத்தில் அருவருப்பு தாங்காமல் சில முறை நான் மயக்கம் போட்டு விழுந்ததால் மருத்துவத்துக்கு நான் லாயக்கில்லை என்று அப்பா கூறி விட்டார். அதனால் பி. யூ. ஸி. முடித்ததும் எத்திராஜ் கல்லூரியிலேயே பி. எஸ். ஸி. கெமிஸ்ட்ரி வகுப்புக்கு விண்ணப்பித்தேன். அப்போது என் பாட்டுத் திறமையில் அதீத நம்பிக்கை வைத்திருந்த பேராசிரியர்கள் என்னைத் தனியே அழைத்து அறிவுரை கூறினார்கள்.

* "கல்லூரியில் கிடைத்த ஆதரவை மறக்கவே முடியாது...."



"நீ இவ்வளவு நன்றாகப் பாடுகிறாய்! கெமிஸ்ட்ரி போன்ற விஞ்ஞான வகுப்பில் சேர்ந்தால் பாட்டு கற்றுக் கொள்ளவும் போட்டிகள், கலை நிகழ்ச்சிகளுக்குப் போய் வரவும் உனக்குப் போதுமான அவகாசம் கிடைக்காது. அதனால் பி. ஏ. வகுப்பில் ஏதேனும் பாடத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள் என்று கூறினார்கள். கெமிஸ்ட்ரியில் நல்ல மதிப்பெண்கள் பெற்றிருந்தும் கெமிஸ்ட்ரி துறைப் பேராசிரியரே எனக்கு இப்படி அறிவுரை வழங்கினார்! நான் நெகிழ்ந்து போனேன். அந்த அறிவுரையை ஏற்று, பி. ஏ. பொருளாதார வகுப்பில் சேர்ந்தேன்.

"ராசியான பாவாடை தாவணியை உடுத்திக் கொண்டு பாட்டுப் போட்டிகளுக்குப் போய்ப் பாடுவதும், பரிசு பெறுவதும் தொடர்ந்தன. வேடிக்கை என்னவென்றால் வழக்கமாகப் பாட்டுப் போட்டிகளுக்கு வரும் எல்லாப் பெண்களுக்குமே ராசியான உடை இருக்கும். அவரவர் அந்தந்த உடையில்தான் வருவார்கள்! மிகப் பழசாகிப் போன பிறகும் என் 'ராசி' யான பாவாடை — தாவணியை நான் விடவேயில்லை!

"பி. ஏ. பொருளாதாரம் படித்துக் கொண்டிருந்த போது ஐ. ஏ. எஸ். தேர்வு எழுத வேண்டும் என்ற ஆசை எனக்குள் முளை விட்டிருந்தது. கல்லூரிப் படிப்பிலும் நல்ல மதிப்பெண்கள் பெற்று வந்ததால் இந்த ஆசை வலுப்பெற்றது. அதே சமயத்தில்தான் வெறுமே ராசிப் பாவாடையை உடுத்திக் கொண்டு போட்டிகளில் ஜெயிப்பதற்கும் மேலாக, ஆத்மார்த்த சந்தோஷத்தையும் பாட்டு மூலமாகப் பெற முடியும் என்ற எண்ணமும் என்னுள் வித்திட்டது. 'நிறையப் பாடலாம்; கச்சேரி கூடச் செய்யலாமோ...' என்று நினைக்க ஆரம்பித்தேன்.

"பி. ஏ. இறுதியாண்டு படிப்பு முடியும் சமயத்தில்தான் மத்திய அரசின் இசைப் பயிற்சி ஸ்காலர்ஷிப்பைப் பெறுவதற்கான நேர்முகத் தேர்வுக்கு நான் அழைக்கப்பட்டேன். என் அம்மாவின் தூண்டுதலின் பேரில் இந்த ஸ்காலர்ஷிப்புக்காக விண்ணப்பித்து விட்டு அதைப் பற்றி மறந்தும் போயிருந்தேன். நேர்முகத் தேர்வு நாளன்று அம்மாவுடன் அடையாறு இசைக் கல்லூரிக்குச் சென்றேன். அங்கு அதே தேர்வுக்காக வந்திருந்த ஏற்கெனவே ஓரளவு பிரபலமான மேடைப் பாடகர்களைப் பார்த்து விட்டு மிகவும் பயந்து போனேன். இதுவரை எல்லா போட்டிகளிலும் வென்றே பழகியிருந்த எனக்கு இந்தத் தேர்வில் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையே இல்லை.





* ரகுநாதன் — சுதா, கௌஷிக்

தோல்வியை ஏற்றுக் கொள்ளும் துணிவும் இல்லை. அப்போதுதான் அம்மாவிடம் அடித்துச் சொன்னேன்: 'ம்ஹூம்! முடியாது! என்னால் முடியவே முடியாது இந்தத் தேர்வில் நான் பங்கேற்க மாட்டேன்' என்று. என் அம்மா என்னை விடப் பிடிவாதம் பிடித்து, தேர்வில் பங்கேற்றே ஆக வேண்டும் என்று என்னை வலுக்கட்டாயப்படுத்தியதும் நன்மைக்குத்தான்! அந்தத் தேர்வில்தான் டி. எம். தியாகராஜன் மற்றும் எம். எஸ். கோபாலகிருஷ்ணன் ஆகிய மூத்த வித்வான்களின் மதிப்பீட்டில் வெற்றி பெற்றேன்.

''அந்தத் தேர்வை என்னால் மறக்கவே முடியாது. வர்ணம் பாடச் சொல்லி அதன் பின் ஒரு கீர்த்தனை பாடச் சொன்னார்கள். நான் தர்மவதி ராகத்தில் ஒரு பாட்டுப் பாடினேன். அதைத் தொடர்ந்து 'தர்மவதியின் சுத்த மத்யம ராகத்தில் ஒரு பாட்டுப்பாடு' என்றார்கள். நான் பாட்டுத்தான் கற்றுக் கொண்டிருந்தேனேயொழிய இசை நுணுக்கங்களும் இலக்கணங்களும் எனக்குத் தெரியவே தெரியாது. ஆனால் தெரியாது என்று சொல்ல மனமில்லை. எனவே என் மனசுக்குள்ளேயே தர்மவதி ராகத்தை மத்யமத்தை மட்டும் மாற்றிப் பாடிப் பார்த்தேன். அந்த ராகம் கௌரி மனோகரி என்று தெரிந்தது. உடனே கௌரி மனோகரி ராகத்தில் எனக்குத் தெரிந்த பாட்டைப் பாடி ஒப்பேற்றி விட்டு வந்து விட்டேன்.


''மத்திய அரசு ஸ்காலர்ஷிப் எனக்குக் கிடைக்கப் போவதாகவும் பாட்டு கற்றுக் கொள்ள குருவாக ஒருவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும்படியும் கடிதம் வந்தது. என் வாழ்க்கையின் திருப்புமுனையாக இந்த வாய்ப்பு அமைந்தது. குடும்ப நண்பர்கள் எம். எல். வி. அம்மாவிடம் என்னை அறிமுகம் செய்து வைத்தார்கள். அவரும் என்னைச் சிஷ்யையாக ஏற்றுக் கொள்ளச் சம்மதித்தார். நானும் ஐ. ஏ. எஸ். கனவுகளை மூட்டை கட்டி வைத்து விட்டு இசையில் முழுக்க முழுக்கக் கவனம் செலுத்தினேன். எம். ஏ. பொருளாதாரத்தைப் பிரைவேட்டாகப் படிக்க ஆரம்பித்தேன்.


''எம். எல். வி. அம்மா அப்போது ரிஷி வேலி பள்ளியில் இசை ஆசிரியையாகப் பொறுப்பேற்றிருந்தார். எனவே விடுமுறைகளுக்காக அவர் சென்னை வரும் போதுதான் அவரிடம் பாடம் கேட்க முடியும். அதனால் இதர நாட்களுக்கு ஈடுகட்டும் விதமாக விடுமுறை நாட்களில்—இரவு பகலாக என்னைத் தம்முடனேயே இருத்திக்

* எம். எல். வி. குரு — சிஷ்யை என்ற எல்லைகளைக் கடந்து....



* சந்தானம்: சுதா இசைக்குப் பெருமை சேர்ப்பார்.





அப்புறம் என்ன ஆச்சு?

தீக்கிரையான மூர்மார்க்கெட்!

வழக்கம் போல் கடையைப் பூட்டி விட்டு, இரவு பத்தரை மணிவாக்கில் வீட்டுக்கு வந்தார் நியமத். சாப்பிட்டவர் நன்கு தூங்கிப் போனார். மணி இரண்டு இருக்கும். யாரோ கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. திறந்தார். வந்தவர் சொன்ன விவரத்தைக் கேட்டதும் 'பகீர்' என்றிருந்தது. அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் கடையருகே இருந்தார். அங்கு அவர் கடை மட்டுமல்ல. கிட்டத்தட்ட 250 கடைகள் எரிந்து கொண்டிருந்தன! ஆம்... வரலாற்றுச் சிறப்பு பெற்ற மூர் மார்க்கெட்டை தீ சுவாகரம் செய்து கொண்டிருந்தது. இது நடந்தது 1985ம் வருடம் மே மாதம் 28ம் தேதி. அப்புறம் என்ன ஆச்சு? நியமத் சொல்கிறார்:

''மாநில, மத்திய அரசுகளிடமிருந்து கடைக்கு 3500 ரூபாய் நஷ்டஈடு கிடைத்தது. பல கோடி மதிப்புள்ள பொருள்கள் அழிந்து போய் விட்டன. எனக்கு பத்து லட்சம் நஷ்டம். 'கடைகள் கட்டித் தருகிறோம்' என்று அரசு சொன்னதை நம்பினோம். ஆனால், அண்ணாநகரில் கட்டித் தருகிறோம் என்றார்கள். நாங்களெல்லாம் பரம்பரை பரம்பரையாக மூர்மார்க்கெட்டில் கடை வைத்திருந்தவர்கள். எம். ஜி. ஆர். அரசுடன் போராடி, நேரு ஸ்டேடியம் எதிரில் உள்ள அல்லிக் குளத்தைத் தூர்த்துவிட்டு அரசே கடைகள் கட்டித் தர வேண்டும் என்று கோரி ஒப்புதலும் பெற்றோம். இதற்கிடையில் நஷ்டத்தைத் தாங்க முடியாமல், வறுமையால், முப்பதுக்கும் மேற்பட்ட வியாபாரிகள் இறந்தே போனார்கள்'' என்கிறார் நியமத்.

அல்லிக்குளத்தில் இப்போது கான்கிரீட் தூண்கள் வைத்துக் கட்டடம் எழுப்பப்படுகிறது. இங்கு 'கடைகளுக்கு இடம் கிடையாது. அலுவலக வளாகம் கட்டுகிறார்கள்' என்று ஒரு வதந்தி இருந்தாலும், அரசு தன் வாக்குறுதியை நிறைவேற்றும் என்று நம்பிக் கொண்டிருக்கிறார்கள் மூர்மார்க்கெட் வியாபாரிகள்.

— கௌசல்யா

கொண்டு விடுவார் 'அம்மா'. குரு — சிஷ்யை என்ற எல்லைகளைக் கடந்த நெருக்கம் எங்கள் உறவில் ஏற்பட்டது. அவர் என்னை முறைப்படி உட்கார வைத்துப் பாட்டு கற்றுக் கொடுக்கவில்லை. அவர் சாதகம் பண்ணும் போது அருகிலிருந்து கேட்டும், அவருடைய கச்சேரி டேப்களைக் கேட்டும், பல கச்சேரிகளுக்கு உடன் சென்றும், அவர் கூடவே இருந்தும் என் பாட்டை அபிவிருத்தி செய்து கொண்டேன். பல புது பாட்டுகளையும் இசை நுணுக்கங்களையும் கற்றுக் கொண்டேன். இன்றைக்கு அவருடைய சிஷ்யை என்று என்னைக் குறித்துச் சொல்லப்படும் போது நன்றி கலந்த பெருமிதம் உண்டாகிறது.''

சற்றே உணர்ச்சிவசப்பட்ட சுதா, சிறு இடைவெளிக்குப் பின் தொடர்ந்தார்.

''நான் நன்றாகப் பாட வேண்டும், என் திறமை வெளிப்பட வேண்டும் என்பதில் எம். எல். வி. அம்மாவுக்கு இருக்கும் அக்கறை சொல்லி முடியாது. சரியாகச் சாப்பிட வேண்டும், உடம்பைப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று அன்புக் கட்டளையிடுவார். எனக்குத் திருமணம் நிச்சயமான போது 'மாப்பிள்ளையும் அவர் குடும்பத்தினரும் உன் பாட்டுத் திறமையைப் புரிந்து கொண்டு ஊக்கமளிப்பார்களா? சரியாக விசாரித்துத் தெரிந்து கொண்டீர்களா? நீ மாப்பிள்ளையிடம் உன் இசை ஆர்வத்தையும் மன உறுதியையும் தெரியப்படுத்தியிருக்கிறாயா?' என்று மிகவும் கரிசனத்துடன் விசாரித்துத் தெளிவுபடுத்திக் கொண்டார். அதே போல், நான் தாய்மையுற்றபோதும் சரியானபடி டாக்டரிடம் போய் வருகிறேனா, டாக்டர் அறிவுரைகள்

படி செயல்படுகிறேனா என்று கனிவுடன் கண்காணித்தார். இன்றைக்கும் அம்மா சென்னையிலிருந்தால், நாங்கள் தினமும் சந்தித்துக் கொள்ளத் தவறினாலும் நான் ஐந்து முறையாவது போனில் பேசிக் கொள்வோம்'' என்றார் சுதா.

''உங்கள் திருமணம் பற்றி எம். எல். வி. அம்மா பட்ட கவலைகள்...'' என்று நாம் ஆரம்பித்ததுமே இடைமறித்தார் சுதா.

''நான் ரொம்ப அதிர்ஷ்டசாலி! எனக்கு வாழ்க்கையில் எல்லாமே எப்போதுமே உயர்தரமாக அமைந்து வருகிறது. படிப்பிலும், பாட்டிலும் பள்ளிப் பருவம் முதல் முன்னணியிலேயே இருந்தேன். கல்லூரியில் அமோக ஆதரவு. இசைப் பயிற்சிக்கு அருமையான குரு. இப்போது என்னுடன் எல்லாவிதங்களிலும் ஒத்துழைக்கும் கணவர் — அருமை மகன். என் திருமண வாழ்க்கையும் ஒரு சராசரிப் பெண்ணின் திருமண வாழ்க்கையைப் போல முதல் ஓராண்டுக் காலம் சற்றுக் கடினமானதாகத் தான் இருந்தது. புகுந்த வீட்டின் ஆதரவும் கணவரின் ஒத்துழைப்பும் இருந்தாலும் எனக்கு நிறையக் கச்சேரி வாய்ப்புக்கள் வர ஆரம்பித்ததும் அந்த முதல் ஒரு வருடத்தில் தான். அடிக்கடி வெளியூர் போக வேண்டி வரும். கொஞ்சம் திணறித்தான் போனேன். இப்போது எல்லோருக்கும் நான் இப்படிக் காலில் சக்கரம் கட்டிக் கொண்டிருப்பது பழகிப் போய் விட்டது. எங்கள் மகன் எக்மோரில் என் அம்மாவிடம்தான் வளர்ந்து வருகிறான். அவன் பள்ளி அருகிலேயே இருக்கிறது. விடுமுறை நாட்களில் மட்டுமே எங்களுடன் வந்து இருப்பான்.''

''கச்சேரி வாய்ப்புகளும் உங்களைத் தாமே தேடி வந்தனவா? இந்த விஷயத்திலும் நீங்கள் அதிர்ஷ்டசாலிதானா அல்லது ஏமாற்றங்களும் போராட்டங்களும் இருந்தனவா?''

''கச்சேரி வாய்ப்புகள் வேண்டும், மேடைப் பாடகி ஆக வேண்டும் என்ற ஆசை எனக்கு ஆரம்பம் முதலே இல்லாததாலோ என்னவோ, ஏமாற்றங்களும் போராட்டங்களும் இருக்கவில்லை. வாய்ப்புகள் தாமேதான் தேடி வந்தன. ஆரம்பத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாய்க் கச்சேரிகள் செய்தேன். 1980 இல் ஆறு கச்சேரிகள், பிறகு '82 இல் பன்னிரண்டு.. இந்த வருடம் பிறந்தது முதல் சராசரியாக மாதம் பத்து கச்சேரிகள் செய்து வருகிறேன். முதன் முதலில் மேடை ஏறிய போது பயமும் டென்ஷனும் இருந்தன. இப்போது பயம் ஓரளவு குறைந்துவிட்டாலும் 'டென்ஷன்' அப்படியேதான் இருக்கிறது. அதனால் கச்சேரிக்குச் சில மணி நேரங்கள் முன்பு பேசுவதையே நிறுத்தி விடுவேன். ஏனெனில் வாயைத் திறந்தாலே டென்ஷன் காரணமாக எரிந்து விழ நேரிடுமே...! ஒரே ஒரு விஷயத்தில் தான் என்போன்ற பெண் பாடகிகளுக்கு வருத்தம் — திறமை வாய்ந்த பக்கவாத்தியக்காரர்கள் வளரும் பெண் கலைஞர்களுக்கு வாசிக்க முன்வருவதில்லை...''

''உங்கள் பாட்டு எம். எல். வி. பாணியிலிருந்து சற்று வேறுபடுகிறதே...?''

''பலப்பல வித்வான்களின் பாட்டைக் கேட்டுக் கேட்டு அந்தப் பாணிகளிலிருந்து சில அம்சங்களைச் சேர்த்துக் கொள்ள முயல்கிறேன். அதன் விளைவாக இருக்கலாம்.''

''உங்கள் மிகக் கடுமையான விமர்சகர் யார்?''

''நானேதான்! ஒரு கச்சேரி கூட எனக்கு முழுத் திருப்தியைக் கொடுத்ததில்லை. மேலும், சில கனமான ராகங்களைப் பாட எனக்குத் தயக்கமுண்டு... என்னிடம் இது போன்ற குறைகள் இருப்பதை உணர்கிறேன். அவற்றை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று முயன்றும் வருகிறேன்...'' என்றார் சுதா.

சந்திப்பு: **சீதா ரவி**

அட்டை வண்ணப்படம், மற்றும் புகைப் படங்கள்: **ரமணன்**

''என்ன நீங்க, உங்க வீட்டுக்காரருக்குச் 'சீரியஸா' இருக்கு. இந்த நேரத்திலே போய், 'அழகான நர்ஸ், இல்லாத ஆஸ்பத்திரி எது? 'ன்னு விசாரிச்சுக் கிட்டு இருக்கீங்களே?

''போன தடவை, சீரியஸா இருந்த போது, இவரைக் கவனிச்சுக்கிட்ட நர்ஸ் நான்தானே? ''

— ஆர். வசந்தகுமார்.



''நாடு ரொம்பத்தான் கெட்டுப் போச்சு.''

''ஏன் அப்படிச் சொல்றீங்க?''

''பிக்பாக்கெட் பக்கிரி, கைராசின்னு சொல்லி ஒரு போலீஸ்காரர் கையில பிளேடைக் கொடுத்துட்டு, வாங்கிட்டுப் போறானே?!''

— வி. ரேவதி.



சாலைப் போக்குவரத்துத் தொழிலுக்கு புதியதோர் ஊக்கம் அளிக்க இதோ ஓர் உன்னதமான தோழமை.

சிடி யூனியன் பாங்க் லிமிடெட்டும் ஸ்ரீராம் நிறுவனங்களும் இணைந்து ஒரு கொடியின் கீழ் செயல்படுகிறது.

ஒரு பிரபல வங்கியும், ஒரு பிரபல நிதி நிறுவனமும் சேர்ந்து லாரி வாகனங்களுக்கு கடனுதவி அளிக்கும் ஆக்கப் பணியில் ஈடுபடுவது, இந்திய நாட்டிலேயே ஓர் இனிய முதல் முயற்சி.


இந்தத்துறையின் வளர்ச்சியில் தீவிர அக்கறை கொண்டுள்ளவை இந்த இரு ஸ்தாபனங்களும்.

சிடி யூனியன் பாங்க் : 85 வருட அனுபவத்துடன் சீராக, சிறப்பாக வளர்ந்துள்ள ஸ்தாபனம். நிதித்துறையில் தங்கள் முத்திரையை பதித்துள்ளது. அதே போல்.

ஸ்ரீராம் நிறுவனங்கள் : லாரி போக்குவரத்துத் துறைக்கு கடனுக நிதி வழங்குவதில் 20 வருட கால அனுபவம் கொண்டுள்ளது. இன்று பெரிய ஆலமரமாக வளர்ந்துள்ள ஸ்தாபனம். இதுவரை 8000க்கு அதிகமான வாகனங்களுக்கு ரூ. 50 கோடிக்கு மேல் கடனுதவி அளித்துள்ளது. இந்தப் புள்ளி விவரம் ஸ்ரீராம் நிறுவனங்களின் வளர்ச்சியை எடுத்துக்காட்டும்.

இப்படி ஒருமித்த கருத்துடைய இரு பெரும் ஸ்தாபனங்களும் இணைந்து, செயல்புரிவதனுல் லாரி போக்குவரத்துத் துறை மேலும் உன்னதமாய் வளர்ச்சி அடையும்.

இனி இந்த இணைப்பின் புதிய பெயர் :


CUB
SHRIRAM GROUP COMPANIES
MADRAS



* அமைச்சர் பதவி?

ஸ்டாலினுக்கு அமைச்சர் பதவி கிடைக்குமா?

* மஞ்சுதேவன், கல்கத்தா.

? சமீபத்தில் தங்கம் வாங்கினீர்களா?

! ஆமாம் குடும்பத்தில் ஒரு விசேஷம்; வாங்கும்படியான நிர்ப்பந்தம். வாங்கினேன் — விலை மீண்டும் ஏறிய பிறகு!

* ஏரல் எஸ். யோகா, சென்னை — 82

? ஸ்டாலினுக்கு அமைச்சர் பதவி கிடைக்குமா?

! அமைச்சர் பதவியின் செல்வாக்கு இருந்து, அதே சமயம் அது தொடர்பான பொறுப்புக்களும் இல்லாமலிருந்தால், அதிலுள்ள சுகமே அலாதி. நீங்கள் ஏன் அதைக் கெடுக்கப் பார்க்கிறீர்கள்!

* ஆர். எஸ். நாராயணன், சென்னை.

? ஒரு மாவட்டத்துக்கு ராஜாஜி பெயரைச் சூட்டலாமே?

! ஆகா! ராஜாஜிக்குப் பிடிக்காத இன்னொரு காரியத்தைச் செய்ய கருணாநிதி ஆசைப்பட்டால் தாராளமாகச் சூட்டலாம்!

* கே. ரமேஷ்ராம், செங்குன்றம்.

? 'காஷ்மீரைப் பெற ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் போராடுவோம்' என்ற பேனசீரின் பேச்சு பற்றி?

! பாக் அதிபர்களுக்கு உள்நாட்டில் சோதனை ஏற்படும்போதெல்லாம் கை கொடுப்பது 'காஷ்மீரைக் கைப்பற்றுவோம்' கோஷம்தான்.

* எல். மாறன், மேல்பட்டி.

? "நான் உண்மைகளைச் சொன்னால்.." என்ற சந்திரசேகர் பேட்டி பற்றி...?

! அவை உண்மைதான் என்பதற்கு மாமாஜியைச் சாட்சிக்கு அழைப்பாரோ!

* எம். தணிகைவேலன், ஆற்காடு.

? கல்கியில் மட்டும் டி வி யை, 'டீவி' என்று குறிப்பிடுவது ஏன்?

! அதுதான் சரியான உச்சரிப்பு என்பதால். 'இன்று டீவியில் என்ன சினிமா?' என்றுதான் கேட்பீர்களேயொழிய, டிவி என்று குறிப்பிட மாட்டீர்கள்.



* மேலிடத்தில் புகார்!



* 'கடுமை வேண்டாம்!'

* என். சுரேஷ், சேலம் — 5.

? "நான் மட்டும் எம். எல். ஏ. வாக இருந்தால் சட்டசபையை ஒரு கலக்குக் கலக்குவேன்" என்று நெடுஞ்செழியன் கூறியிருக்கிறாரே?

! இப்போது அது கலங்கிக்கிடப்பதே போதும். இவர் வேறு வந்து கலக்க வேண்டுமா? நல்லவேளை, மக்கள் அவரைக் கண்டு கொள்ளாமல் ஒதுக்கி விட்டார்கள்!

* கே. அருணாசலம், தென்காசி.

? தமிழகத்தில் பெண் முதல்வர் வர வாய்ப்பிருக்கிறதா?

! தயாளு அம்மாவுக்கோ, ராஜாத்தி அம்மாவுக்கோ அது போன்ற ஆசைகள் இருப்பதாகத் தெரியவில்லையே!

* கே. எம். ரவிச்சந்திரன், மதுரை.

? தி. மு. க.விலிருந்துலீலாவதி நீக்கப்பட்டுள்ளாரா?

! நேற்று சேர்த்துக் கொள்ளப்படுவதும், இன்று (கட்சி எதிர்ப்புப் பணி காரணமாக) நீக்கப்படுவதும், நாளை மாத்திரை முழுங்கப்படுவதும்... நாகரிக அரசியலின் இடத்தை ஆபாச அரசியல் ஆக்கிரமித்துக் கொண்டு விட்டது.

நீங்கள் கேட்டவை — தராசு

* ஜி. குசேலன், சங்கராபுரம்.*

? 'சட்டசபை நடவடிக்கைகளை விமர்சிக்கும் போதோ அல்லது தலையங்கம் எழுதும்போதோ பத்திரிகைகள் கடும் சொற்களைப் பயன் படுத்த வேண்டாம்' என்று முதல்வர் கூறியுள்ளாரே?

! ரொம்ப நல்ல அறிவுரை. சட்டசபை நடவடிக்கைகளைப் பற்றி மட்டுமென்ன, தலைவர்களை விமர்சிக்கும் போதும் கூட நயமாக எடுத்துரைப்பது நல்லதுதான். எல்லாப் பத்திரிகைகளும் பின்பற்ற வேண்டிய கருத்துத்தான். ஆனால் ஓர் உறுதி மொழி கிடைக்க வேண்டும், முதல்வரிடமிருந்து. அதாவது, நயமாக எடுத்துக் கூறப்படும் நல்ல கருத்துக்கள், அலட்சியப்படுத்தப்படாமல் உரிய மதிப்புடன் பரிசீலனைக்கு உள்ளாகும் என்பதுதான் அது. கடுமையான பேச்சும் எழுத்தும்தான் கவனத்தைப் பெறும்; குறை தீரப் போராட்டம் நடத்தினால்தான் அரசின் பார்வை நம்பக்கம் திரும்பும் என்ற விசனத்துக்குரிய நிலை இன்று உருவாகி விட்டிருக்கிறது.

* கே. டி. சிவராமன், மணமேல்குடி.

? சினிமா பட விழாவில் 'அசிங்கமான நடிகைகளையெல்லாம் பணத்துக்காகக் கட்டிப் பிடித்து நடிக்க வேண்டியிருக்கிறது' என்று ரஜினி வேதனைப் பட்டுள்ளாரே?

! ஒன்று, 'செய்யும் தொழிலே தெய்வம்' என்ற சிந்தனையுடன் இயங்க வேண்டும். அல்லது 'இந்தத் தொழில் எனக்குப் பிடிக்கவில்லை' என்று ஒதுங்கி, கண்டக்டர் வேலையாவது பார்க்க வேண்டும். ஏகமாகச் சம்பாதித்தபடியே செய்கிற தொழிலைக் குறை கூறுகிறவர்கள், போலிகள் என்று கருதப்படுவார்கள். மக்களிடம் மதிப்பு இழப்பார்கள். மெய்யான ஈடுபாட்டுடன் நடிப்பவர்களுக்கு நடிப்புத்தான் தெரியுமே தவிர, நடிகை தெரியமாட்டாள்.





* 'உண்மையைச் சொன்னால்...'



'ஆயிரம் ஆண்டுகள்....'

* கே. மகேஷ், சங்கராபுரம்.

? 'சௌதாலா இரண்டு தொகுதிகளில் போட்டியிடுவார்' என்று தேவிலால் கூறியிருக்கிறாரே?

! ஐயோ! இரண்டு ''மேகம்'' தொகுதிகளா? பொறுமைக்குப் பேர்போன பாரத அன்னையால் கூடத் தாங்க முடியாது!

* உஷா கிருஷ்ணமூர்த்தி, சென்னை.

? சமீபத்தில் நாடகங்கள் வருவது குறைந்து விட்டதே?

! ''கதை இல்லை, நடிப்பு இல்லை'' என்று குறை கூறியபடியே நாமும் பார்த்துக் கொண்டிருந்தோம். அவர்களும் போட்டுக் கொண்டிருந்தார்கள். இபபோது டீ வி வந்து, 'அரங்கில் கூட்டமும் இல்லை' என்னும் போது யாருக்காக நாடகம் போடுவார்கள்?

* கே. எம். குமணன், கல்லிடைகுறிச்சி.

? ''இன்னும் பத்து ஆண்டுகளில் காங்கிரஸ் அழிந்து விடும்'' என்ற தேவிலாலின் ஆரூடம் பலித்துவிடும் போலிருக்கிறதே?

! சமீபகாலத்திய அடுக்கடுக்கான, தேர்தல் தோல்விகளிலிருந்தும் காங்கிரஸ்காரர்கள் ஏதும் கற்றுக்கொள்ள மறுப்பதைக் காணும் போது, அப்படித்தான் தோன்றுகிறது. இப்போது பாருங்கள், லேட்டஸ்ட்டாக வாழப்பாடி மீது 'தேர்தல் பணத்தை மோசடி செய்து விட்டார்' என்று கிரிமினல் குற்றச்சாட்டு கூட சுமத்தி, காங்கிரஸ்காரர்களே மேலிடத்தில் புகார் செய்துள்ளனர். உட்கட்சிப் பூசல்கள் மறைய உட்கட்சி ஜனநாயகம் மலர வேண்டும். அதற்குக் காங்கிரஸின் இன்றையத் தலைமை பயப்படுகிறது. கட்சி மீது தனக்குள்ள இரும்புப் பிடி தளர்ந்து விடும் என்று அஞ்சுகிறது. ஆக மொத்தம், இவர்களுடைய சுயநலப் போக்கினால் நாட்டுக்குப் பேரிழப்பு.

* ரூ 20 பரிசு பெறுபவர்

ஜி. குசேலன்,
44, கடை வீதி,
சங்கராபுரம் — 606 401.

காணிக்கை



தியாகராஜ வித்வத் சமாஜத்தில், 'ராகயாகம்' செய்து கொண்டிருந்தார் வீணை பாலசந்தர். எழுபத்திரண்டு மேளகர்த்தா ராகங்களில், அன்றன்றைக்கு எதைப் பற்றிச் சொல்ல வேண்டுமோ அந்த ராகத்தைச் சீட்டுக் குலுக்கிப் போட்டுத் தேர்ந்தெடுப்பார். பிறகு சபையில் இருப்பவர்களிடம் அதன் ஜன்ய ராகம் ஒன்றைச் சொல்லச் சொல்லுவார். பிறகு, வாசித்து விளக்கம் சொல்லுவார்.

ஒரு நாளைக்கு நான் ஆடியன்சிலிருந்து எழுந்து 'காபி' ராகம் என்று சொன்னேன். ஆனால் அதை அன்று அவரால் வாசிக்க முடியவில்லை. உடல் நலக் குறைவால் அந்த 'யாகம்' கூட மூன்றில் ஒரு பங்கே நடத்த முடிந்தது.

அடுத்து, அவரிடமிருந்து ஒரு நாள் போன் வந்தது. வானொலியில் ஒரு கச்சேரி செய்யப் போவதாகவும், அந்த நிகழ்ச்சியை எனக்குச் சமர்ப்பணம் செய்யப் போவதாகவும் சொன்ன போது எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. அதில் அவர் காபி ராகம் வாசித்து, கீர்த்தனையும் வாசித்தார். எனக்கு உண்மையிலேயே கண்களில் நீர் வந்தது. நான் எப்போதோ கேட்டதற்காக என்னை மதித்து, காபி ராகத்தை வாசித்ததோடு, அந்த நிகழ்ச்சியையே எனக்குச் சமர்ப்பணம் பண்ணுவதாகச் சொன்னதை நினைத்து நான் நெகிழ்ந்து போனேன்.

மதுரையில் நாங்கள் இருந்த போது முதலில் சீதா பென்னட்டிடம் வீணை கற்று, பிறகு இவரிடம் கற்றுக் கொண்டேன். வீணையில் கற்றுக்குட்டிதான் நான். ஆனாலும் அவரை ஒவ்வொரு தடவை நமஸ்காரம் பண்ணும் போதும், "என்ன இது! சக வித்துவாம்சினியான நீ இப்படி நமஸ்காரம் செய்யலாமோ? '' என்று கேட்பார்.

— சீதா கோபாலசுவாமி
(வீணை பாலசந்தரின் இளைய சகோதரர் மனைவி)

அடுத்த இதழில்...



பதம் பணிவோம்
அருள் பெறுவோம்

— ஸ்ரீபரமாச்சாரியாள் ஜயந்தியையொட்டிய சிறப்புக் கட்டுரை.

மற்றும்

இலவச இணைப்பு:

அன்றாட வாழ்வில் சட்டங்கள்
— உங்களுக்கு மிக மிக உபயோகமான கையேடு.

கவிதைக்குள் ஒரு கவிதை



வில்லெடுத்து வந்த வேங்கடேச நாதன்!

சுமார் பத்தாண்டுகளுக்கு முன் வேலூர் ஸ்ரீ வெங்கடேஸ்வரா உயர் நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோது என் ஆசிரியர் எங்களைப் பார்த்து ''நாளை வரும்போது அவரவர்களுக்குப் பிடித்த பாடலை எழுதிக் கொண்டு வாருங்கள்'' என்று கூறினார்.

ஆசிரியர் உத்தரவுப்படி, திருப்பதியிலிருந்து வெளிவரும் ''ஸ்ப்தகிரி'' என்ற மாத இதழில் இடம் பெற்ற கவிஞர் விஜயவாணனின் ''வெங்கடேச நாதனே'' என்ற பாடலிலிருந்து ஒரு பாராவை மட்டும் எழுதிச் சென்றேன்:

சொல்லெடுத்து தந்தையின் துயர்
எடுத்துச் சென்றவன்
கல்லடுத்து முள்ளடுத்து கானகத்துச்
சென்றவன்
புல்லடுத்த பாயினில் படிந்த நாதன்
அம்பொடு
வில்லெடுத்து வந்ததும் வெங்கடேச
நாதனே!

என் ஆசிரியர் இந்த வரிகளின் சொல்லாட்சியைப் பாராட்டி என்னுடைய ரசிகத் தன்மையையும் வியந்தார்.

என்றாலும், அதில் அமைந்திருந்த பொருளழகு நான் அன்று எண்ணியதைவிட மிக அதிகம் என்பதை நான் பின்னால் அறிந்தேன். ஆசிரியர் தொழிலுக்கு நான் வந்த பின் கவிஞர் விஜயவாணனையே சந்திக்க நேர்ந்தது. அப்போது அவர் சொன்ன விளக்கம் வருமாறு:—

ஸ்ரீராமபிரான் கானகத்துக்கு எடுத்துச் சென்றது, தசரதனின் சொல்லை. அதாவது கைகேயிக்கு அவர் கொடுத்த வாக்குறுதியை. ராமனைப் பிரிவதில் தந்தைக்குத் துயரம் ஏற்பட்டது உண்மை. ஆனால் வேறு ஒரு விதத்தில் தசரதனின் துயர் குறைக்கவும் செய்தான், ராமன். தந்தையின் துயரைத் தன்னுடன் எடுத்துச் சென்றான். அது எவ்வாறு?

தசரதனுக்கு ரிஷிபுங்கவரின் சாபம் இருந்தது. அந்தச் சாபம் பலிக்க வேண்டுமெனில் தனக்கு ஓர் ஒப்பற்ற மகன் பிறப்பான் என்று துயரிடையே மகிழவும் செய்தார் தசரதன். மகன் பிறந்த பிறகோ, மகிழ்ச்சியிடையே அவருக்கு ஒரு துயரமும் இருந்து வந்தது. அது, புத்திரசோகம் உண்டாக வேண்டுமென்று முனிவர் இட்ட சாபம் இன்னும் பலிக்கவில்லையே என்பது. இது தசரதனை வாட்டி வதைத்துக் கொண்டிருந்தது. பெரியோரின் சொல்லுக்கு அந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுத்த சத்திய யுகம் அது! தான் துயருற்றாலும் முனிவரின் வாக்குப் பொய்க்கலாகாது என்று ஏங்கினான் ஸ்ரீ ராமனின் தந்தை. அவ்வளவு சத்தியப் பிடிப்பு இருந்ததால் தான் தசரதன், மகாவிஷ்ணுவையே தன் மகனாகப் பெற முடிந்தது. தசரதனின் இந்த நெடு நாள் துயரத்தைத் தன்னுடன் காட்டிற்கு எடுத்துச் சென்று தந்தையின் மனச்சாந்திக்கும் அமைதியான மரணத்திற்கும் உதவினான் இராமபிரான்.

''தந்தையின் துயர் எடுத்துச் சென்றவன்" என்று எழுதுவதற்கு எனக்குப் புத்தி கொடுத்தவனும் அவனே!'' என்று கூறினார், கவிஞர் விஜயவாணன்.

— வி. ராகவேந்திர பிரசாத்



12

ராஜாஜி வாழ்க்கை வரலாறு VIII

ராஜ்மோகன் காந்தி.



"சந்தோஷமாக இருக்கிறேன்"

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொருளாளராகச் செயல்பட்டு வந்த எம். ஜி. ராமச்சந்திரன், கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார். பொருளாளர் என்ற முறையில் அவர் கணக்குக் கேட்டதும், மது விலக்கு ரத்து உள்பட கருணாநிதியின் கொள்கைகள் சிலவற்றை அவர் எதிர்த்ததும் இவ்வாறு அவர் வெளியேற்றப்படக் காரணங்கள் ஆயின. ராஜாஜி தமது முழு ஆதரவையும் எம். ஜி. ஆருக்கு அளித்தார். அவரை வாழ்த்தி, சுயராஜ்யாவின் 'அன்பார்ந்த நேயர்களுக்கு' பகுதியில் அவர் எழுதும் போது, "இந்த விவகாரத்தினால் பெருநஷ்டம் தி. மு. க. வுக்குத்தான் ஏற்படப் போகிறது" என்று குறிப்பிட்டார். இதுவே ஸி. ஆரின் கடைசி அரசியல் நடவடிக்கையாகவும் கடைசி தீர்க்கதரிசன வாக்காகவும் அமைந்தது.

அக்டோபர் 31ம் நாள்: பெரிய நாளிதழ்களுக்கு விதிக்கப்பட்டிருந்த சில கட்டுப்பாடுகள், அரசியல் சாசனத்துக்கு முரணானவை என்று உச்சநீதி மன்றம் தீர்ப்பளித்தது. இதுதான் ஸி. ஆர். காதில் விழுந்த கடைசி நல்ல செய்தி.

சுயராஜ்யா ஆசிரியராக விளங்கி மதிப்புமிக்க ஆதரவை ஸி. ஆருக்கும், சுதந்திரக் கட்சிக்கும் கொடுத்திருந்த போதன் ஜோஸப் நவம்பரில் காலமானார். கிலாஃபாத் இயக்கம், மற்றும் கயா காங்கிரஸ் நாட்களுக்கு ஸி. ஆரின் சிந்தனைகள் சென்றன. அப்போது அவருடைய நெருங்கிய தோழர்களுள் ஒருவராக விளங்கியவர் போதன் ஜோஸஃபின் சகோதரர் ஜார்ஜ். "முன்னெப்போதையும் விட உலகம் இன்று எனக்கு வெறிச்சோடிப் போனது போல் இருக்கிறது. நான் தனிமைப்படுத்தப்பட்டிருக்கிறேன். ஜார்ஜ் ஜோஸஃபுக்காகவும் போதன் ஜோஸஃபுக்காகவும் நான் எவ்வளவு கண்ணீர் உகுத்தாலும் போதாது."

ஸி. ஆர். எழுதிய கடைசி இரங்கல் செய்தி இதுவல்ல. மேலும் ஒன்று பாக்கி இருந்தது. தென்னிந்தியாவின் சுதந்திரக் கட்சித் தலைவர்களுள் முக்கியமான ஒருவரான ஜி. கே. சுந்தரத்துக்கு, அவர் தாயார் காலமானதையொட்டி ஆறுதல் கூறி எழுதினார் ஸி. ஆர்.

பிரிட்டனின் அயல்நாடுகள் அபிவிருத்தி அமைச்சர் ரிச்சர்ட் வுட் நவம்பர் 12ம் தேதி ஸி. ஆரைக் காண வந்தார். இவர், காந்தி—இர்வின் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட முந்நாள் வைஸ்ராய் இர்வின் பிரபுவின் புதல்வர். அந்த முறையில் ராஜாஜிக்கு மேலும் நெருங்கியவரானார் ரிச்சர்ட். ஸி. ஆரைக் காண வந்த அயல்நாட்டுப் பிரமுகர்களில், கடைசி நபர் ரிச்சர்ட் வுட்தான். இதன் பிறகு யாரையும் வரவேற்கக்கூடிய நிலையில் ஸி. ஆர். இருக்கவில்லை.

ராஜாஜியின் 94 வது பிறந்த நாள் நெருங்கிக் கொண்டிருந்தது. "ஏராளமான நண்பர்கள் எனக்கு வாழ்த்து அனுப்பியவண்ணம் இருக்கிறார்கள். அவை ஒவ்வொன்றையும் நான் விலை மதிக்க முடியாத பரிசாக மதித்துப் போற்றுகிறேன்" என்று எழுதிய ஸி. ஆர்., தொடர்ந்து, "எல்லா மக்களுக்கும் என் வேண்டுகோள் என்னவெனில் சீக்கிரமே இன்னொரு உச்சகட்ட மாநாடு நடக்க வேண்டும். அம் மாநாடு, சிம்லா ஒப்பந்தத்தை அதன் மெய்யான நிறைவுக்கு இட்டுச் செல்ல வேண்டும். இதற்குச் சம்பந்தப்பட்ட ஒவ்வொருவரும் பாடுபட வேண்டும். மற்றவர்கள் பிரார்த்தனை புரிய வேண்டும்" என்றும் கருத்துத் தெரிவித்தார். இந்தியா—பாகிஸ்தான் ஒற்றுமைக்குக் குரல் கொடுக்கும் இந்தக் கருத்துத்தான் ராஜாஜி சுயராஜ்யாவில் கடைசியாக எழுதியது.

டிசம்பர் தொடக்கத்தில் ஒரு நாள் காலை நாமகிரி தன் தகப்பனாரின் தலையணையில் கறைபடிந்திருக்கக் கண்டாள். இரவு அவர் வாயிலிருந்து ரத்தம் கசிந்திருக்கிறது என்பதை உணர்ந்தார். "ராஜாஜியின் பிறந்த நாளன்று அவரை யாரும் காண வர வேண்டாம்" என்று பத்திரிகைகளில் ஒரு வரி பிரசுரிக்கலாம் என்று நாமகிரி அபிப்பிராயப்பட்டார். ஆனால் நரசிம்மன், "இது அவருடைய கடைசி பிறந்த நாளாகக் கூட இருக்கலாம்; அவருடைய பக்தர்களுக்கு நாம் ஏமாற்றமளிக்கக் கூடாது" என்று கூறி ஆட்சேபித்தார். பத்திரிகைகளில் வேண்டுகோள் ஏதும் வெளிவரவில்லை. பிறந்த நாளன்று முடிவில்லாத வரிசையாக அன்பர்கள் வந்து கொண்டேயிருந்தனர். ஆனால் ஸி. ஆரைக் காணாமலேதான் அவர்களில் பெரும்பான்மையினர் திரும்பிச் செல்ல நேர்ந்தது. ராஜாஜியின் உடல்நலம்

மிகவும் குன்றியிருந்தது. மாத்திரைகளை விழுங்கவும் அவரால் முடியவில்லை.

டிசம்பர் பதினேழாம் தேதி யுரீமியாவால் அவர் பாதிக்கப்பட்டிருப்பதாக டாக்டர்கள் கூறினர். (ரத்தத்தில் யூரியாவின் அளவு அதிகரிப்பது). ஒரு ஆம்புலன்ஸில் அவர் ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போகப்பட்டார். ஊசி மூலம் ரத்த நாளத்தில் அவருக்கு குளூகோஸ் ஏற்றப்பட்டது. இடது கரத்தில் ஊசி இருந்த இடத்தை அவர் வலக் கரம் தொட்டுத் தடவ முற்படுவது போல் தோன்றவே அவரது பேரப் பிள்ளைகளுள் ஒருவர், ''அப்படிச் செய்யாதீர்கள்,'' என்று கேட்டுக் கொண்டார். ''ஆமாம், ஆமாம்! இடது கரம் செய்வது வலது கரத்துக்குக் கூடத் தெரியக் கூடாது என்பது வழக்கு அல்லவா?'' என்றார் ஸி. ஆர்.

சற்று நேரம் பொறுத்து அவர், ''நான் இங்கே சாவதற்காகத்தான் அழைத்து வரப் பட்டிருக்கிறேன்'' என்றார். உறவினர்கள், ''இதென்ன பேச்சு'' என்று கடிந்து கொண்டார்கள்.

கருணாநிதியும் நெடுஞ்செழியனும் ராஜாஜியைக் காண வந்தார்கள். முதல்வரின் உள்ளங்கையைத் தமது வலக்கரத்தில் பற்றிய ஞானி ராஜாஜி, இடக்கரத்தால் கருணாநிதியின் தலையையும் முகத்தையும் தொட்டு ஆசீர்வதித்தார். ''என்னுடைய ஆதரவை நான் வாபஸ் பெற்றாலும், நட்பை வாபஸ் பெறவே மாட்டேன்'' என்றார். பின்னர் நெடுஞ்செழியன் கரத்தைப் பற்றி அவரைப் பெயர் சொல்லி அழைத்து, ஆசி நல்கினார்.

மறுநாள் காலை, நாளிதழ்களுடன் வந்தவர்கள், மருத்துவமனைக்கு வந்து சேர்ந்ததன் மூலம் மீண்டும் ராஜாஜி பத்திரிகைகளின் முதல் பக்கத் தலைப்பில் இடம் பெறுவதாகக் குறிப்பிட்டார்கள். ராஜாஜியின் முகத்தில் பெரிய புன்னகை மலர்ந்தது. மறுநாள் நாளிதழ்களில் அவர் உடல்நிலை முன்னேற்றம் திருப்திகரமாக இருப்பதாகச் செய்தி வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்ட போது, ''இப்படிப்பட்ட ஆதாரமற்ற செய்திகளை நான் நம்புவதில்லை'' என்றார் ஸி. ஆர். ஒரு சமயம் இரு பெண் நர்ஸ்கள் அவர் அருகே வந்து நிற்கக் கண்டதும், தமக்கு அருகே அமர்ந்திருந்த ஒரு பேரனிடம், ''என் ஆடை கலையாமல் இருக்கிறதா?'' என்று கேட்டுக் கொண்டார்.

தந்திகள் குவிந்தன. அரசாங்கப் பொது மருத்துவமனையில் டாக்டர்களும் நர்ஸ்களும் அவர் உயிரைக் காப்பாற்ற அரும்பாடுபட்டனர். ஆனால் அவருக்குக் கிடைத்து வந்த அந்தக் கண்காணிப்பு ஊர் அறியத்தான் நடந்தது. எந்த மக்களுக்காக அவர் வாழ்நாளெல்லாம் பாடுபட்டு உழைத்தாரோ, அவரால் நேசிக்கப்பட்ட அந்த மக்கள் ஆஸ்பத்திரியின் வராந்தாக்களில் 'ராஜாஜிக்கு என்ன?' என்று பார்ப்பதற்காகப் பெருந்திரளாகக் கூடி விட்டார்கள். இவர்களைக் கடந்து நோயாளியை அணுகுவது என்பது டாக்டர்களுக்கும் நர்ஸ்களுக்கும் ஒரு போராட்டமாகவே கூட இருந்தது. கூட்டத்தினர் வேடிக்கை பார்க்க வரவில்லை. பிரார்த்திக்கவே குழுமியிருந்தனர். அவ்வப்போது நோயாளியே கூட ''கோவிந்தா! கோவிந்தா!'' என்று மெலிதான குரலில் கூறி வந்தார். டிசம்பர் 22ம் தேதி இரவு அவரை யாரோ கேட்டார்கள்: ''இப்போது எப்படி இருக்கிறது?'' என்று. ''சந்தோஷமாக இருக்கிறேன்'' என்று பதிலளித்தார் ராஜாஜி. அவர் கண்கள் மூடியிருந்தன. பிறகு அவை திறக்கவேயில்லை.

மயக்கத்தில் ஆழ்ந்து போன ராஜாஜிக்குப் பிராணவாயு செலுத்தப்பட்டது. கங்கை நீர் அவர் வாயில் செலுத்தப்பட்டது. காதில் சரணாகதி மந்திரம் ஓதப்பட்டது. விஷ்ணு சகஸ்ரநாமம் அறையில் ஒலித்தது. ஜனாதிபதி கிரி, சக்கர நாற்காலியில் பெரியார் ஈ. வே. ரா., முதல்வர் கருணாநிதி, சிவந்த கண்களுடன் காமராஜர், எம். ஜி. ஆர்., டி. டி. கே., மசானி, ரங்கா... இன்னும் இந்திய அரசியலில் முக்கியமான பலர் நோயாளியின் அறையில் இருந்தனர்.

இடையில் சற்று நம்பிக்கை துளிர் விட்டது. வாழ்நாளெல்லாம் அரசியல் போராட்டங்களில் ஈடுபட்டிருந்த ராஜாஜி, மரணத்துடன் நடத்தும் இந்தப் போராட்டத்திலும் வெற்றி பெறுவார் போலத் தோன்றியது. ஆனால் இந்த நம்பிக்கை ஒரே ஒரு நாள்தான் நீடித்தது.

டிசம்பர் 25ம் தேதி கிறிஸ்துமஸ் தினத்தன்று மாலை 5.44க்குச் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியின் கடைசி மூச்சு பிரிந்தது. ஹிந்துக்களின் பஞ்சாங்கப்படி அது வைஷ்ணவ ஞானி நம்மாழ்வார் காலமான தினமும் கூட.

(முற்றும்)

தமிழாக்கம்: கி. ராஜேந்திரன்

* எம். ஜி. ஆருக்கு முழு ஆதரவு.





லேசில் போகாத வலி லேசரால் போகும்!

உடலின் எந்தப் பாகத்திலாவது தீராத வலியா? ஆறாத புண்ணா? இவை சுலப மாய்க் குணமாகும். முகப்பரு கூட மறையும். சைனஸ் விடைபெறும்; ஈறுகளின் வீக்கம் கூட வடியும்... லேசர் சிகிச்சை செய்து கொண்டால்...!

வலி இருக்கும் இடத்தில் வெந்நீரால் ஒத்தடம் கொடுப்பதும், வலி நிவாரண ஆயின்ட்மென்டைச் சூடு பறக்கத் தேய்ப்ப தும் நாம் அறிந்தவை.

சூடு எப்படி வலி போக்க உதவும்? ரத்த நாளங்களை விரிவடையச் செய்து, குறிப் பிட்ட இடத்துக்கு ரத்தம் அதிகமாய்ப் பாயச் செய்கிறது. வலியைக் கொடுக்கக் கூடிய டாக்சிக் பொருள்களை, உஷ்ண ரத்தம் அடித்துத் தள்ளிக் கொண்டு சென்று விடு கிறது. எனவே வலி போய் விடுகிறது.

இந்தவிஞ்ஞான உண்மையின் அடிப்படை யில்தான் இன்ஃப்ரா ரெட் கதிர்களைப் பாய்ச்சியும், டயாதெரபி என்று ஒருவித சிகிச்சை அளித்தும் வலிகளைக் குணப் படுத்தி வந்தார்கள் மருத்துவர்கள். ஆனால் இந்தச் சிகிச்சை முறைகளின் போது வெளிப் படும் உஷ்ணம் சருமத்தை வறட்சியாக்கி வெடிப்புக்களை ஏற்படுத்தியது.

தோலில் உஷ்ணத்தை உறைக்கச் செய் யாமலே உள்ளே எலும்புக்கு ஊடுருவிச் சென்று பாயும் வலிமை லேசர் கதிர்க ளுக்கு இருக்கிறது. இதனால் தோலில் வெடிப்பை ஏற்படுத்தாமல் சிகிச்சை தர முடி கிறது. ஐந்து வருட ஆராய்ச்சிக்குப் பின் லேசர் ட்ரானிக் என்ற கருவி இதற்காகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வலியின் தீவிரத்தைப் பொறுத்து, ஐந்து நாட்கள் முதல் பதினைந்து நாட்கள் வரை சிகிச்சை பெற வேண்டும். உடலின் எந்தப் பகுதியிலும் — தலை முதல் பாதம் வரை — இந்த ஒளிக் கதிரைப் பாய்ச்ச முடியும்.

ஒவ்வொரு முறையும் லேசர் கருவியில் சிகிச்சை பெற ஐம்பது ரூபாய்! ஸ்விஸ் இயந் திரம். விலை அதிகம். இதுவே ஜப்பானில் தயாரிக்கப்பட்டு, குறைந்த விலையில் கிடைக்குமானால், அப்போது இருபது ரூபா யில் சிகிச்சை பெற முடியும்!

லேசர் ஒளிக்கதிரை இயந்திரத்திலிருந்து வெளிப்பட்டுப் பாயும் போது நேரிடை யாகப் பார்க்கக் கூடாது. இதற்காகச் சிகிச்சை பெறுகிறவரும், உதவியாளரும், டாக்டரும் கறுப்புக் கண்ணாடி அணிய வேண்டும். சிகிச்சையின் போது போட்டுக் கொண்டு, பிறகு கழற்றிக் கொடுத்துவிட வேண்டும். ஏனென்றால் இதன் விலை ஏழா யிரம் ரூபாய்!


இந்த முன் ஜாக்கிரதை நடவடிக்கை தவிர லேசர் சிகிச்சையால் வேறு வித உபாதை ஏதும் நோயாளிக்கு ஏற்படுவ தில்லை. பிள்ளைத்தாய்ச்சி கூட பயமின்றி சிகிச்சை பெறலாம்!

— தியாகராயநகர் ராஜு மருத்துவ மனையில் நிறுவியிருக்கும் லேசர் இயந்திரம் பற்றிக் கூறியவர்: எலும்பு நோய்ச் சிகிச்சை நிபுணர் டாக்டர் ராஜா வெங்கடகிருஷ்ணன்.

— சாருகேசி

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர்: லெ. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 431543, 434157; 434190. ஆசிரியர் குழு அலுவலகம்: 434145.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 130/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 65/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 150/; விமானத் தபால் ரூ. 350/-.

ஒரு போஸ்ட் கார்டு போதும்!...



உங்களுக்கும் உங்களது முன்னற்றத் திற்கும் இடையில் இப்பொழுது உள்ள தூரம் ஒரு போஸ்ட் கார்டு தான் என்று நாங்கள் கூறினால் அது சற்று மிகையாகத் தோன்றும். ஆனால் உண்மை அதுதான்.

நீங்கள் வாழ்க்கையில் முன்னேறு வதற்கு ஆங்கில மொழியில் போதிய பயிற்சியின்மை ஒரு தடை யாக இருந்திருந்தால்........

மற்றவர்கள் ஆங்கிலத்தில் பேசும் போது அதை ஓரளவு புரிந்து கொண் டும், அதற்கு ஆங்கிலத்திலேயே பதில ளிக்க முடியவில்லையே என்ற குறை உங்களிடம் குடி கொண்டிருந்தால்,

பல புத்தகங்களைப் படித்தும் ஆங் கிலத்தில் பேச முடியவில்லையே என்ற சலிப்பு உங்களுக்கு ஏற்பட்டிருந்தால்,

நீங்கள் எதிர்பார்க்கும் முன்னேற் றத்தை இப்பொழுது அடைய ஒரே ஒரு போஸ்ட்கார்டு போதும்...ஆமாம்!

ஆங்கிலத்தில் இலக்கணப் பிழை யின்றி கடிதங்கள் கட்டுரைகள் எழுத வேண்டும், தயக்க மின்றி சரளமாகப் பேசவேண்டும் என்ற உங்களது விருப்பத்தை ஒரு போஸ்ட் கார்டில் எழுதி தமிழகத்தின் தலைசிறந்த கல்வி நிலையம் என்று போற்றப்படும் விவேகானந்தா கல்வி நிலையத் திற்கு இன்றே அனுப்புங்கள்.

நீங்கள் மேற்கொள்ள வேண்டிய பயிற்சியைப் பற்றியும் மற்ற தகவல் களையும் உடனே உங்களுக்கு அனுப்பி வைப்பார்கள்.

வீட்டிலிருந்த படியே ஓய்வு நேரத்தில் தபால் மூலம் இந்த எளிய பயிற்சி முறையை நீங்கள் மேற் கொள்ளலாம்.

"நேர்முகப்பயிற்சியும் உண்டு."

என்ன?.....எங்கே கிளம்பி விட்டீர் கள்? போஸ்ட் கார்டு வாங்கத்தானே?

உங்களது முன்னேற்றத்தின் முதல் முயற்சி துவங்கிவிட்டது.

நீங்கள் கடிதம் எழுத வேண்டிய முகவரி

விவேகானந்தா கல்வி நிலையம்
9, மேட்லி ரோடு,
தி. நகர், சென்னை - 17.

NAGA



மின்னலடிக்குது அதிவெண்மை
மிஞ்சிவெளுக்குது ஒரு துளி ரின்.
SUPER POWER
RIN
STRIKES WHITER
WASHES MORE
மாபெரும் சக்தி ரின்
லீவரின் தரமான தயாரிப்பு